# கற்பி

## தமிழ்நாட்டிற்கான சமூக ஒப்புரவை வளர்க்கும் தனித்த கல்விக் கொள்கை

இரா.கிருத்துதாசு காந்தி IAS (Rtd.)



பாலம் PAALAM

Social Watch - Tamilnadu

# கற்பி

**(தமிழ்நாட்டிற்கான சமூக ஒப்புரவை வளர்க்கும் தனித்த கல்விக் கொள்கை)**

ஆக்கம்

**இரா. கிருத்துதாசு காந்தி IAS (ஓய்வு)**


வெளியீடு



*இரா.கிருத்துதாசு காந்தி* IAS *(ஓய்வு)*
*முன்னாள் கூடுதல் தலைமைச் செயலர்*
*நிறுவனர் - பாலம், அகம், அம்பு, ரீடா*
Mobile : +91 - 9444045215
Email : rcg1952@gmail.com

*திரு. குமார்*
*இயக்குநர்*
*சமூகக் கண்காணிப்பகம், தமிழ்நாடு*
Mobile : +91 - 9444469685
Email : krisjkumar2000@gmail.com

*கற்பி*
*(தமிழ்நாட்டிற்கான சமூக ஒப்புரவை வளர்க்கும் தனித்த கல்விக் கொள்கை)*

*ஆசிரியர் : இரா.கிருத்துதாசு காந்தி* IAS *(ஓய்வு)*

*பக்கம் : 116*

*முதல் பதிப்பு : சூலை 2023*
*இரண்டாம் பதிப்பு : செப்டம்பர் 2023*

*வெளியிடுவோர் :*
*இரா.கிருத்துதாசு காந்தி இ.ஆ.ப,(ஓய்வு),*
*முன்னாள் கூடுதல் தலைமைச் செயலாளர்*
*பாலம் நிறுவனர்*
rcg1952@gmail.com
*9444045215*

*அருட்பணி. ஜான்குமார்*
*இயக்குநர், சமூகக் கண்காணிப்பகம்*
*தமிழ்நாடு, சென்னை*
*9444469685*

*நூல் அச்சு : முல்லை அச்சகம்*
*சென்னை - 2 044-42663840*

**விலை ரூ. 150/-**

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| *1.* | *நூல் பிறந்த கதை* | 05 |
| *2.* | *சமூக ஒப்புரவை வளர்க்கும் தனித்த கல்விக்கொள்கை* | 09 |
| *3.* | *வரம்புகளையும், செயல்பாடுகளையும் பரவலாக்குதல்* | 11 |
| *4.* | *பள்ளிகளில் சமூகச் சமத்துவத்தைக் கொண்டுவரலும், தளிச்சைத் தன்மைகளை* (Meritocracy) *நீக்கலும்* | 15 |
| *5.* | *ஆன்றோர்க் கல்வி* (Education For Scheduled Tribes) | 17 |
| *6.* | *ஆன்றோரின் பள்ளிகள்* | 21 |
| *7.* | *ஆன்றோர்க் கல்லூரிக் கல்வி* | 23 |
| *8.* | *சான்றோர்க் கல்வி* (Education For Scheduled Castes) | 25 |
| *9.* | *சான்றோர் பெண் கல்வி* | 29 |
| *10.* | *சான்றோர் உயர்கல்வி* | 30 |
| *11.* | *சான்றோர் ஆளுமையும் 100 சதவீத வாய்ப்பும்* | 32 |
| *12.* | *பல்கலைக் கழகங்களின் உருமாற்றமும், செயல்பாடுகளும்* | 34 |
| *13.* | *தமிழ்நாட்டில் பட்டப் படிப்புகளைக் கட்டணம் இன்றி நடத்தும் திட்டம்* | 38 |
| *14.* | *5 வயது வரையான மழலையர்க் குழந்தைகளுக்கானப் பரிந்துரை* | 40 |
| *15.* | *மாற்றுத் திறனாளிகள் கல்வி* | 41 |

| | | |
|---|---|---|
| *16.* | பெண் கல்வி | 42 |
| *17.* | மாணவர் தேர்வு முறைகள் | 43 |
| *18.* | வகுப்பறை மாற்றம் | 45 |
| *19.* | பாடம் கேட்டலும், கற்றலும் | 46 |
| *20.* | மாணவர்களை மதிப்பீடு செய்தல் | 47 |
| *21.* | பள்ளி மற்றும் கல்லூரிகளில் புகட்டுமொழி | 52 |
| *22.* | கல்வி நிறுவனங்களை நடத்துவதில் யாருக்குப் பொறுப்பு? | 54 |
| *23.* | கட்டணமில்லாக் கல்வியும், கல்விக் கட்டணமும் | 59 |
| *24.* | சமச்சீர்க் கல்விப்பாடங்கள் | 61 |
| *25.* | எதிர்கால இலக்குகள் | 64 |
| *26.* | அரசின் கொள்கைகள் | 67 |
| *27.* | திராவிட இயல் | 68 |


**இணைப்புகள்**

| | | |
|---|---|---|
| I. | நீதிபதி.முருகேசன் குழு சந்திப்பு | 70 |
| II. | தமிழ்நாடு கல்விக் கொள்கை வகுப்புக் குழுவிற்கு... | 74 |
| III. | கல்வியில் சமூகநீதி | 87 |
| IV. | 2016 புதிய தேசியக் கல்விக் கொள்கையும், பட்டியல் இனத்தவர் கல்விக் கோட்பாடுகளும் | 89 |

# 1. இந்நூல் உருவான கதை

ஓராண்டுக்கு முன்பு தமிழ்நாடு அரசு மாநிலக் கல்விக் கொள்கையை வகுக்க ஒரு குழுவை அமைத்தது (G.O. No. 98 - School Education Department - Dated: 01.06.2022) ஓராண்டு முடிந்த பின்னரும் குழு எந்த விதப் பரிந்துரையையும் உருவாக்கவில்லை. குழு அமைக்கப்பட்ட நாள் தொட்டு சான்றோர் (SC) மற்றும் ஆன்றோர் (ST) சார்பாகக் குடி மக்களின் கருத்துக்களை அனுப்பி வந்தோம். சில உறுப்பினர் களையும் நேரில் கண்டு உரையாடியும் உள்ளோம்.

*2016* - இல் தேசியக் கல்விக் கொள்கை முதல் வரைவு வந்ததிலிருந்து பாலம் அமைப்பும் தமிழ்நாடு சமூகக் கண்காணிப்பகம் அமைப்பும் இணைந்து பல குடி அமர்வுக் கருத்தாய்வுக் கூட்டங்களை நடத்தினோம். இங்கு உருவான கருத்துக்களை ஒன்றிய அரசுக்கும், கல்விக் கொள்கை வரைவுக் குழுவிற்கும் அனுப்பினோம். சமூக ஊடகத் தளங்களிலும் பரப்பி உள்ளோம். தேர்தல் தருணத்தில் அனைத்து கட்சியினருக்கும் அனுப்பி வைத்தோம்.

தமிழ்நாட்டில் தி.மு.க ஆட்சி அமைத்த பிறகு தேசியக் கல்விக் கொள்கை ஏற்புடையதல்ல என்று அறிவித்தது. கையோடு மாநிலக் கல்விக் கொளகையை வகுக்கக் குழு ஒன்றையும் அமைத்தது *(01.06.2022)*.

ஓராண்டுக் கால கட்டத்தில் குழுவின் கலந்தாய்வில் சான்றோர்க்கும் ஆன்றோர்க்கும் (SC-ST) கல்வி அளிப்பது பற்றிய தனிப் பரிந்துரைகள் தேவை இல்லை என்ற கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டதாக அறிந்தோம். சான்றோர்க்கான தனி அணுகுமுறைகள் தேவை என்பதைத் திரு. சவகர் நேசன் மட்டும் எடுத்துரைத்ததாகவும் அறிந்தோம். அதனாலேயே

அவர் குழுவைவிட்டு வெளியேற வேண்டி வந்ததாகவும் அறிந்தோம். குழுவில் இவர் ஒருவர் மட்டுமே சான்றோராக (SC) இருந்தார்.

குழு ஓராண்டு காலம் பலரின் கருத்துக்களை நேரில் கண்டும், அழைத்தும் கேட்டது. எனினும் சான்றோர் (SC) மற்றும் ஆன்றோர் (ST) சார்பாக யாரையும் அழைக்கவில்லை. திரு. சவகர் நேசன் விலகிய பிறகு நாங்கள் வலியுறுத்தியதின் பேரில் 15.05.2023 அன்று குழுவைச் சந்திக்க சான்றோர்க்கு அழைப்பு வந்தது.

15.05.2023 அன்று குழுவிடம் நடந்த கருத்துப் பரிமாற்றப் பதிவுகள் இணைப்பில் தரப்பட்டுள்ளன.

நாங்கள் குழுவைச் சந்தித்து வந்த ஒரு சில நாட்களில் குழு தம் பணியை முடிப்பதற்குக் கால நீடிப்பு வேண்டி அரசை வேண்டியுள்ளதாக ஊடகங்கள் வழியாக அறிந்தோம். இன்ன காலத்திற்குள் முடிக்க முடியும் என்று தம்மால் அறுதியிட முடியாது என்றும் குழு தெரிவித்ததாகவும் செய்தியைக் கண்டோம்.

10 -15 பேர் கொண்ட குழு ஓராண்டுக்கு மேல் செய்ய முடியாத பணியை, நாம் தொடங்கினால் என்ன என்ற எண்ணம் உதித்தது. ஓராண்டுக்கு மேல் ரூ. 1 கோடிக்கு மேல் அரசு செலவு செய்தும் முடியாத பணியை ஒரு செலவையும், யாருக்கும் வைக்காமல் செய்ய முடியாதா என்ற சவால் உணர்வும் மேலோங்கியது.

16.05.2023இல் எழுதத் துவங்கி 30.05.2023-இல் இந்தக் கல்விக் கொள்கை வரைவு நூலை எழுதி முடித்தேன். அச்சேற்ற கூடுதலாக நாட்கள் ஆகின.

இதை நான் ஒருவனாக எழுதினேன் என்றாலும்..

- பதினேழு ஆண்டுகள் நான் பயின்ற கல்விச் சாலைகளில் பெற்ற பட்டறிவு,
- 35 ஆண்டுகள் இந்திய ஆட்சிப் பணியில் கிடைத்த நிர்வாக மற்றும் சமூகப் பார்வைகள்,

- இந்த 71 ஆண்டுகளில் நான் பழகி ஊடாடிய நட்புச் சூழல், அறிவர் சூழல், சமூக ஆர்வலர் சூழல் ஆகியன தந்த பார்வைகள்,
- 30 ஆண்டுகளுக்கு மேல் தொண்டு நிறுவனம் நடத்தியும், பிற பல தொண்டு நிறுவனங்களுடன் உறவாடிக் கிடைத்த பார்வைகள்,
- 2005-இல் நான் தமிழ்நாடு தகவல் மையத்தின் (Data Centre) ஆணையராக இருந்த காலத்திலிருந்து தொடர்ந்து பல்வேறு கல்வி பற்றிய அரசுப் புள்ளிகளை ஆய்விட்டு வருவதால் கிடைத்த பார்வைகள்,
- 2012-இல் எனது ஓய்விற்குப் பிறகு, பத்தாண்டுகளுக்கு மேல் போஸ்ட் மெட்ரிக் கல்விக் கொடை தொடர்பாகவும், பொறியியல் பட்டப் படிப்புகளுக்கு மாணவர்களைச் சேர்க்கும் விதமாகவும், மாநிலம் முழுவதும் சென்று, மாணவர்களிடமும் அவரது உறவுகளுடனும் கல்வி வழிகாட்டிக் கூட்டங்கள் நடத்தியதில் கிடைத்த பார்வைகள்,
- அம்பேத்கர் கல்வி நூற்றாண்டு இயக்கம் (அகம் - AKAM) என்பதை உருவாக்கி அதன் செயல்பாடுகள் மூலம் கிடைத்த பார்வைகள்,
- யாவற்றுக்கும் மேலாகச் சான்றோர் (SC) மற்றும் ஆன்றோர் (ST) பெருமக்களோடு மிக நுணுக்கமாகவும், அணுக்கமாகவும் உறவாடி வருவதால் கிடைத்த பார்வைகள்,

ஆகிய இவை யாவும் ஒன்றாகக் கூடி, என்னுள் புதைந்து, நாளும் வளர்ந்து நிற்பதால் இந்தக் கல்விப் பொருண்மை பற்றிய கருத்தாக்க வடிவைக் கடிதின் முடிக்க முடிந்தது. இந்நூல் தனி மனிதச் சிந்தனைகளின் தெளிப்பு அல்ல. பிறப்பொத்து வாழும் எல்லா மானுடங்களிடமும் முகிழ்த்துள்ள மனங்களின் தொகுப்பு என்பது சரியாக இருக்கும்.

*உங்களைப் போல எனக்குள் எழும் கேள்விகள் என்னவெனில்?*

1. *மாநிலக் கல்விக் கொள்கைக் குழுவில் சேர்க்கப்பட்டு இருப்போர்களுக்கு இத்தகைய பார்வைகள் ஊறி இருக்கவில்லையா?*
2. *15 பேர் கொண்ட குழுவினர் ஆளுக்குப் பத்துப் பக்கம் எழுதி இருப்பினும் ஓராண்டில் 150 பக்க வரைவை முழுமை செய்திருக்க முடியுமே?*
3. *ஓராண்டுக்கு ரூ. 1 கோடி செலவு செய்ய வேண்டுமா?*

*இந்த வரைவு நூலை ஒட்டி மாநிலக் கல்விக் கொள்கைக் கான கருத்துக்களை குடிமக்கள் கூடி வந்தும், அழுத்தம் தந்தும் மாநில அரசுக்கும், அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் தெரிவித்தால், நூல் பயன் பட்டதாக இருக்கும்.*

*அன்பன்,*

**இரா. கிருத்துதாசு காந்தி இ.அ.ப. (ஓய்வு),**
*முன்னாள் அரசுக் கூடுதல்*
*தலைமைச் செயலாளர், தமிழ்நாடு*
*நிறுவனர் - பாலம், அகம், அம்பு,*
*94440 45215*

*02.06.2023*
*சென்னை.*

♦

## 2. தமிழ்நாட்டிற்கான சமூக ஒப்புரவை வளர்க்கும் தனித்த கல்விக் கொள்கை

இக்கொள்கைகள் சமூக ஒப்புரவையும், சமூக வளர்ச்சியையும் எடுத்தோம்பும் வகையில் அத்தகைய சிந்தனை உள்ளவராலும், சமூகக் காவலர்களான சான்றோர் களாலும், (SC பட்டியல் இனத்தவர்) உருவாக்கப் பட்டவை. பிற கல்விக் கோட்பாடுகளையும், நடைமுறைகளையும் மாற்றிக் காட்டுவதால் இது திராவிடம் தழுவியதாக எடுத்தோதப் படுகிறது. திராவிடக் கல்வி என்பது கீழ்வரும் முன்னெடுப்புகளால் அவ்வாறு அழைக்கப்படுகிறது :

1) ஆரியம், வேதம் சார்ந்த, மாந்தரைக் கூறு போடும் பார்வைகளுக்கு எதிரானது; அவற்றை ஏற்க மறுப்பது.

2) வடவர்களின் வடமொழி / இந்தி மொழித் தாக்கங் களைக் கடந்து போவது.

3) யாவர்க்கும் கல்வி வாய்ப்பை உருவாக்கித் தரும் அதே வேளையில் சமூகத்தில் இன்னும் ஆளுமையையும், அதிகாரத்தையும் பெற வேண்டியவர்களாகச் சான்றோர்களை யும், (SC பட்டியல் இனத்தவர்) ஆன்றோர்களையும் (ST பழங்குடி) குறிக்கொண்டு அவர்களுக்கானத் தனித்துவச் செயல் திட்டங்களை வகுக்கும்.

4) பார்ப்பனப் புனிதங்கள் என்று ஓதப்படுபவைகளை ஓரங்கட்டும்; என்றும் திராவிடக் கல்வி அவற்றை ஓராது (சட்டை செய்யாது).

### திராவிடக் கல்வி கோட்பாட்டின் வரைவு

1976, 42 - வது அரசியலமைப்புச் சட்டத் திருத்தம் மூலம் ‘கல்விப்’ பொருண்மை மாநிலப் பட்டியலில் (State List) இருந்து இணைப் பட்டியலுக்கு (Concurrent List) மாற்றப் பட்ட பின்னர் ஒன்றிய அரசின் மேலாதிக்கம் கட்டுக்கடங்கா அளவில் பெருகிவிட்டது. மாநிலங்களின் சுய சிந்தனை

வாய்ப்புகளையும், தன்னார்வப் போக்குகளையும் இந்த ஒன்றிய மேலாதிக்கம் வறண்டு போகச் செய்து வருகிறது. அன்னியில் (அல்லாது) ஓர்மைச் சித்தாந்தங்களை வலிந்து திணிக்கும் காரணிகளாகக் கல்விக் கூடங்களை ஒன்றிய அரசு மாற்றி வரும் சர்வாதிகாரப் போக்குக்கும் இது வழி வகுத்து வருகிறது. கூடுதலாக ஒன்றிய அரசு உருவாக்கும் திட்டங் களுக்காக மாநில அரசின் பங்காக மாநில நிதியிலிருந்து பெருமளவு நிதி மடைமாற்றம் செய்யப்பட்டு, மாநிலங்களின் சுய திட்டங்களுக்கு மாநில நிதி சுருங்கிக்கொண்டே போகிறது.

கல்வி இணைப் பட்டியலில் இருப்பது மாநில சுயாட்சிக்குப் பெரும் பின்னடைவாகும். இது ஒருவகைப் பன்முனைத் தாக்குதலை மாநிலங்கள் மீது கொண்டு வருகிறது.

1. மாநில நிறுவனங்களைக் கூட அவர்களின் இசைவின்றி ஒன்றியக் கட்டுப் பாட்டில் இயக்குவது.

2. மாநில உதவிகளைப் பெற்றுக் கொண்டு (நிலம் போன்றவை), அவற்றிற்கு ஆளுமையில் எவ்விதப் பங்கும் இல்லாத கல்வி நிறுவனங்களை அந்தந்த மாநிலங்களிலேயே நடத்தவது.

3. ஒன்றிய மாநிலப் பகிர்வுத் திட்டங்கள் (Centrally Sponsored Scheme) என்ற பெயரில், ஒன்றிய அரசு தன்னிச்சையாக உருவாக்கும் திட்டங்களுக்கு, வேறு வழியின்றி மாநில அரசுகள் மாநில நிதிகளைக் கரைக்கும்படி செய்வது;

4. ஒன்றிய அரசின் சித்தாந்தங்களைப் பாடநூல்களிலும், நிறுவன நடைமுறைகளிலும் புகுத்தி ஓர்மைத் தன்மைகளுக்கு மாநிலங்களை உருமாற்றுவது.

கல்வியை ஒன்றியத்தின் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டு மாநிலப் பட்டியலில் சேர்க்கத் தமிழ்நாடு அரசு சட்ட மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றும்.

பாராளுமன்றத்தில் அரசியல் சாசனத் திருத்தம் கொண்டு வர தேசிய அளவில் பரப்பரையை மேற்கொள்ளும்.

அதுவரை மாநில அரசுகளின் மீதான ஒன்றியக் கட்டுப்பாடுகள் எவற்றையும், தமிழக அரசு ஏற்காது. ஏற்கனவே ஒத்திசைவு தந்த இனங்களிலும், சட்டமன்றத் தீர்மானம் இயற்றி மறுதலிப்புச் செய்யும்.

இக்கொள்கை திராவிட இயலின் வேரடியாக இருக்கும்.

♦

## 3. வரம்புகளையும், செயல்பாடுகளையும் பரவலாக்குதல்

ஆரியம், வேதீயம், பிராமணீயம், சர்வாதிகாரம், முடியாட்சி போன்ற பிற தத்துவங்களிலிருந்து வேறுபட்டிருக்க வேண்டும் எனில் திராவிட இயலிலும், திராவிடக் கல்விக் கோட்பாட்டிலும், அதிகாரம் அல்லது ஆளுமைப் படிமங் களும், செயல் வடிவங்களும் பரவலாக்கப்பட வேண்டும்.

பிற யாவும் முன்னிறுத்துவது மையமாதலில் தொடங்கி மையமாதலில் முடியும். செயற்கையானப் படிமங்களை அதிகாரப் படிமங்களாக உருவாக்கிக்கொண்டு, அந்தந்த கட்டங்களில் இருக்கும் மாந்தர்களைத் தரம் பிரிப்பது இந்த மையமாதலின் ஊற்றுக் கண். படிமத்தின் உயர் தளங்களில் இருக்கும் மாந்தர்களுக்கு உயர் அறிவு மதிப்பீட்டைச் செயற்கை யாகத் தந்து, கட்டுப்படுத்தும் அதிகார வரம்புகளையும், அவர் களிடம் மட்டுமே ஒப்படைப்பது இந்த நடு உச்சிக் கனல்கள்.

கல்விக்கானப் பொருண்மைகள் கீழடியில் இருந்து ஊற்றெடுக்க வேண்டும். இதைத் திராவிட இயல் இனி கடைபிடிக்கும்.

இதன் வெளிப்பாடாகவும், செயல்பாடாகவும் முதற்கண் கல்வி நிர்வாகங்கள் தல ஆட்சிகளிடம் ஒப்படைக்கப்படும். உலகம் முழுவதும், தல ஆட்சிகளே பள்ளிகளையும், கல்லூரிகளையும், பல்கலைக் கழகங்களையும் நடத்தி நிர்வகிக்கின்றன. எந்த ஒரு மாநில அரசோ, ஒன்றிய அரசோ கல்வி நிறுவனங்களை நடத்துவதில்லை. இதனால் கல்வி அங்கெல்லாம் பரவலாக்கப்பட்டுள்ளது. ஆசிரியர்கள் நியமனம், மாணவர் சேர்க்கை, கற்பித்தல் முறைகள், பாடநூல் உள்ளீடுகள், நிர்வாகம், நிதி ஈட்டலும், செலவு செய்தலும் ஆகிய அனைத்துக் கல்வி தொடர்பான செயல்பாடுகளும், வகைப்பாடுகளும், தரக் கட்டுப் பாடுகளும், கட்டுப்பாடுகளும், ஆளுமைப் பாடுகளும் ஆகிய பாடுகள் அனைத்தும் தல ஆட்சிகளாலேயே அறுதி

இடப்படுகின்றன. நிதி வழங்கும் வளமையை மட்டும் மாநில ஒன்றிய அரசுகள் மனமுவந்து ஏற்றுக்கொள்கின்றன.

**காலனி ஆதிக்கத்தில் இருந்த நாடுகளில் தான்,**

அ). அடிமை நாட்டில் யாரொருவரை வைக்கலாம்; யாரொருவரை உடலுழைப்புக்குக் குறைந்த ஊதியத்தில் அமர்த்தலாம் என்பதாக வகைதொகை பிரிக்கவும்,

ஆ). தரக் கட்டுப்பாடு என்ற பெயரில் அதிகாரத்தையும், மேலாண்மையையும் கையில் வைத்துக் கொள்ளவும்,

அந்நிய ஆட்சிகள் புகுத்தியது தான் "நடுவண் கவ்வும் கல்வி". எந்த மக்களாட்சி முறைகளிலும் இது நடைபெறக் கூடாது. குறிப்பாகச் சாதி சார்ந்தவர், சாதி சாராத சான்றோர் (SC) என்ற சமூகப் பிளவு இருக்கும் இந்திய நாட்டில் இது எந்த வகை யிலும் நிலவக் கூடாது. ஏனெனில் எந்த ஒன்றிய அரசுகளோ, மாநில அரசுகளோ, சான்றோர் (SC) ஆளுமையில் இல்லை. மாறாகத் தல ஆட்சிகளில் குறைந்தது 25% சான்றோர் / ஆன்றோர் ஆளுமையில் உள்ளன.

ஆகவே தமிழ்நாட்டில் முதற்படியாக எல்லா அரசுத் துவக்கப் பள்ளிகளும், நடுநிலைப் பள்ளிகளும், கிராமப் பஞ்சாயத்துகளிடமும் ஒப்படைக்கப்படும். எல்லா மேல் / உயர்நிலைப் பள்ளிகளும், நகரப் பஞ்சாயத்துகளிடம் ஒப்படைக்கப்படும். இதற்கு முன்னோடியாகச் சென்னை யிலுள்ள அரசுப் பள்ளிகள் சென்னை மாநகராட்சியிடம் ஒப்படைக்கப்படும் எனத் தமிழ்நாடு அரசு அண்மையில் முடிவெடுத்துள்ளது. அடுத்த படியாக அரசுக் கல்லூரிகளும், அவ்வாறே தல ஆட்சிகளிடம் ஒப்படைக்கப்படும். இதை நடைமுறைப்படுத்தும் விவரங்களை அலச, அரசு அதிகாரிகள் மட்டுமல்லாமல் ஆசிரியர் முகமைகள், பஞ்சாயத்து முகமைகள் உள்ளடங்கிய பரிந்துரைக் குழுக்களை அரசு அமைக்க வேண்டும்.

பரவலாக்கல் என்பது வெறும் நிர்வாக நடைமுறை களில் மட்டுமல்லாமல், பாடத் திட்டங்களை வகுப்பதிலும்

அமைய வேண்டும். தற்போதைய நடைமுறைகளான NCERT/ SCERT பாடத்திட்ட நூல் வகுப்புக் குழுக்கள் யாவும் சில சித்தாந்தங்களை இளம் மதிகளில் விதைக்கும் வல்லந்தச் செருகல்களாக மாறிக் கொண்டு வருகின்றன. ஓர்மை என்ற ஓரங்க நாடகங்களை நடத்த முனைகின்றன. உள்ளூர்ச் செய்தி களும், சிந்தனைகளும் சில்லியானவையாகக் கருதப்பட்டு கல்வி மடல்களில் ஒன்றப் படுவதே இல்லை. நம் வாழ்வோடு தொடர்பில்லாத அமேசான் நதி, வோல்கா ஆறு, ஆல்ப்சு மலை, யூரல் (Ural) மலைத் தொடர் பற்றியும், விம்பிள்டன் டென்னிசு, மான்செஸ்டர் யுனைடெட் கால்பந்து பற்றியும், நேர்முகத் தேர்வில் பேசக் கூடியவர்கள் தாம் அறிவுக் கூர்மை உள்ளவர்கள் என்ற தலைச் செருக்கான பாட அணுகு முறைகள் தாம் நாட்டில் நிலவுகின்றன. எமக்கு நேரடியாகத் தொடர்புள்ள கூவம், அடையாறு ஆறுகளைப் பற்றி விவரம் கற்பிக்கப்படாததால் அவை அழுகிக் கொண்டு போகின்றன.

ஆகவே சமச்சீர்ப் பாடங்களை மேலும் சமத்துவப்படுத் துவதற்குத் தமிழ்நாட்டில் இனி பாட நூல்கள் (Syllabus/ Curriculam) கீழ்வரும் உள்ளடக்கம் கொண்டதாக அமையும்.

1. 20% அனைத்துலகம் சார்ந்தவை
2. 20% இந்திய நாடு தழுவியவை
3. 20% தமிழ்நாடு மாநிலம் தழுவியவை
4. 20% அந்தந்த மாவட்டங்கள் தழுவியவை
5. 20% அந்தந்த உள்ளூர்ச் செய்திகள் சார்ந்தவை.

பாடம் பற்றிய பரிந்துரைகளையும், அந்தந்த எல்லைக்குள் இருப்பவர்களிடமிருந்தே பெற வேண்டும். பாட நூல்களின் அளவைப் பொறுத்து வெட்டிப் பொருத்தும் கோர்ப்புப் பணியை மட்டும் பன்முகங் கொண்ட குழு அறுதியிடலாம்.

♦

## 4. பள்ளிகளில் சமூகச் சமத்துவத்தைக்கொண்டு வரலும், தளிச்சைத் தன்மைகளை (Meritocracy) நீக்கலும்

எந்தக் கல்வி நிறுவனங்களையும், தரம் பிரித்தல் என்பது கூடாது. நிறுவனங்களுக்குத் தரம் தருதல் அவற்றிற்கு இலவச விளம்பர வரம் தருவதாக மாறிப் போகிறது. எல்லாத் தரம் தரப்பட்ட நிறுவனங்களும், தரங்கெட்ட பணங்களை வசூல் செய்யும் வாணிபக் கிடங்குகளாக மாறி இருக்கின்றன. கல்வியில் 'சமத்துவம்' தான் வேறு எல்லா வகையானக் குணக் கூறுகளையும்விட மேலோங்கி நிற்பது. கல்வியின் உயிர்நாடியானது யாவரும் அறிவரே யாவரும் தெரிவரே என்ற சமூகச் சமத்துவமாகும். இதன் அடித்தளத்ததைத் தகர்ப்பதுதான் Meritocracy என்னும் தளிச்சைத்தனம். திராவிட இயல் தளிச்சையை (Meritocracy)விடச் சமத்துவத்தை மேலான கோட்பாடாக வழிமொழியும்.

சமத்துவத்தை நாட்டுவதற்குக் கீழ்வரும் நிறுவன நடைமுறைகள் வகுக்கப்படும்.

1. எல்லாவகைப் பள்ளிக் கூடங்களும், (துவக்கம் முதல் மேல்நிலை வரை) அண்ணிய (Neighbourhood) பள்ளிகளாகத்தான் செயல்பட வேண்டும். அண்ணியம் என்பது மூன்று அடுத்தடுத்த மாவட்டங்களைச் சேர்ந்த எல்லையாக இருக்கும்.

2. அண்ணிய பகுதிக்குள் இருக்கும் எந்தப் பள்ளியும், அண்ணிய எல்லைக்குள் வதியும், வாழும், பணியாற்றும் மக்களின் பிள்ளைகளை மட்டும் சேர்க்கலாகும். 10 - 20% வரை மட்டுமே வேறு அண்ணிய மண்டலம் அல்லது மாநிலம் அல்லது தேசியம் சார்ந்த மாணவர்களைச் சேர்க்கலாகும்.

3. எந்த வகைத் தனியார் பள்ளியாக இருந்தாலும் அதில் சேரும் மாணவர் எண்ணிக்கையில் 20% சான்றோர் (SC)

ஆன்றோர் (ST) மாணவராகவும், 5% பொருளாதாரம் குன்றிய மாணவராகவும் இருத்தல் வேண்டும். மொத்தம் 25% மாணவர்க்கு எந்தவொரு கற்கை தொடர்பான கட்டணங் களும் (கற்கைக் கட்டணம், சிறப்புக் கட்டணம், பாட நூல்கள், சீருடை, தேர்வு பற்றிய எவையும்) விதிக்கப்படவும் கூடாது; வேறு எந்த வகையிலும் பெறப்படவும் கூடாது. பிற மாணவர்களுக்கான கட்டணத்தை அந்தந்தப் பள்ளிகளே முடிவு செய்து கொள்ளலாம். அரசு இதில் தலையிடாது.

அண்ணியப் பள்ளிகள் (Neighbourhood Schools) என்பதால் மாணவர் சேர்க்கையில், அந்தந்த மாவட்டங்களில் உள்ள பல்வேறு சமூகப் பிரிவினரின் பிள்ளைகளும் வாய்ப்புப் பெற்றே தீர வேண்டும். ஆகவே அரசு இப்பள்ளிகளில் 25% கட்டணமில்லாச் சேர்க்கையை உறுதிப் படுத்துவதற்கு மட்டும் தலையீடு செய்யலாம். பிற சேர்க்கைகளிலோ, கட்டண விதிப்புகளிலோ தலையிட வேண்டுவதில்லை. சுயக் கட்டுப்பாடு தன்னிச்சையாக நடக்கும்.

25% மாணவர்க்காக அரசு இழப்பீடு என்று எதையும் பள்ளிகளுக்குத் தர வேண்டுவதில்லை. அரசின் குறுக்கீடு இல்லாததால் 75% மாணவரிடமிருந்து பெறும் தொகையில் இந்த 25% மாணவர் செலவினப் பொறுப்பை நிறுவனங்களே நிரவல் செய்து கொள்ளும். தனியார் பள்ளிகளும் ஒப்புரவை ஓம்புபவர் என்ற பெயர் பெறுவர்.

கல்லூரி நிறுவனங்களுக்கு இந்த அண்ணிய வகைப் பாடு பொருந்தாது. எல்லா வகைக் கலைக் கல்லூரிகளுக்கும் தனியான பரிந்துரை தரப்படுகிறது. (‘தமிழ்நாட்டில் பட்டப் படிப்புகளைக் கட்டணம் இன்றி நடத்தும் திட்டம்’ தலைப்பைக் காண்க)

♦

## 5. ஆன்றோர் கல்வி
## ( Edcation For Scheduled Tribes )

*தமிழ்நாட்டின் ஆன்றோர் மக்கள் தொகை, மொத்த மக்கள் தொகையில் 1% மட்டுமே. இந்த 36 ஆன்றோர் குடிகளில் மலையாளிகள் மட்டுமே 50% இருக்கிறார்கள். இருளர்கள் 25% ஆக இருக்கிறார்கள். இருளர், காட்டு நாயக்கர், குரும்பர், பணியர், தோடர், கோத்தர் ஆகிய ஆறு குடிகள் 'அழியா நிலைக் குடிகளாக'* (Particularly Vulnerable Tribal Group - PVTG) *வகைப்படுத்தப்பட்டுள்ளனர். பிற 29 குடிகளுள் காடர், மலசர், முதுவார், இறவாளர் ஆகிய நான்கு குடிகள் வால்பாறையிலும், இருளர், சோளகர், ஊராளி ஆகிய மூன்று குடிகள் ஈரோடு மாவட்ட மலைகளிலும், காணியர் கன்னியாகுமரி பேச்சிப் பாறையிலும், குற்றால மலையிலும், பளியர், கொடைக்கானல், திருவில்லிபுத்தூர் மலைப் பகுதி யிலும் வாழ்கிறார்கள். மற்ற குடிகளை மக்கள் எண்ணிக்கை அடிப்படையில் கீழ்வருமாறு தொகுக்கலாம். இருளரும், காட்டுநாயக்கர்களும் நீலகிரியைத் தவிர்த்துச் சமவெளிகளில் அதிகமாக வாழ்கின்றனர். இருளர்கள் சமவெளிக் காடுகள் மிகுந்துள்ள 15 வட மாவட்டங்களில் உள்ளனர். (ஈரோடு, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவண்ணாமலை, விழுப்புரம், கள்ளக் குறிச்சி, இராணிப்பேட்டை,வேலூர், கிருட்டிணகிரி, கடலூர், அரியலூர் ஆகியன குறிப்பிடத் தக்கவை.) தென் மாவட்டங்களில் இருளரைக் காண்பது அரிது. காட்டுநாயக்கர் இங்கும், அங்குமாக நகர்ப்புறப் பகுதிகளில் வாழ்கின்றனர். மலையாளிகள் சவ்வாது, ஏலகிரி, கல்வராயன், சேர்வராயன், ஏற்காடு, பால மலை, போத மலை, பச்சை மலை, கொல்லி மலைப் பகுதிகளில் வாழ்கின்றனர். ஏற்காடு தவிர பிற இடங்களில் இவர்களே பெரும்பான்மையராக வாழ்கின்றனர். தல ஆட்சிகள் மலையாளிகள் கையில்தான் உள்ளன. ஆன்றோர்களின் மக்கள் தொகை அடர்த்தி, அவர்களது இருப்பிடத் தொலைவுகள், அவர்களது மொழி*

இவற்றைப் பொருத்து ஒவ்வொரு குடிக்கும் வெவ்வேறு வகையான கல்வி ஊட்டம் அமைய வேண்டி உள்ளது.

முதற்கண் மற்றவர்க்கானப் பொதுக் கல்விமுறை ஆன்றோர்க்குப் பொருந்தாது. அடுத்து மாநிலம் முழுவதுமான ஆன்றோர்க்கென்ற ஒரே விதமானக் கல்வி முறைகளையும், நிறுவனங்களையும், திணிப்பதும் பொருந்தாது. ஒவ்வோரிடத் திற்கும் தக்க தனித்த கல்வி வழிமுறைகளை அந்தந்த இடத் தின் தன்மைகளை அறிந்து கல்விமுறைகள் வகுக்கப்பட வேண்டும். இதைத் 'தல நுணுக்கக் கல்வி' (Micro Level Education) எனலாம். இதற்குப் பொருள் செலவு பொது முறைக் கல்வியை விடக் குறைவாகவே அமையும்.

தமிழ்நாட்டில் 1960 க்கு முன்னரே ஆன்றோர்க்கான உண்டுறைப் பள்ளிகள் அனைத்து இடங்களிலும் பெரும் எண்ணிக்கையில் உருவாக்கப் பட்டன. இந்த நாட்டின் முன்னோடிப் பள்ளிகளாக இவை அமைந்திருந்தன. ஆயினும் காலத்திற்கேற்ப மாற்றங்களைக் கொண்டு வராமையாலும், ஆன்றோர்களைக் கல்விப் பணியில் ஈடுபடுத்தாமையாலும் இப்பள்ளிகள் களை இழந்து போயின. இவை மீண்டும் உயிரோட்டம் பெற வேண்டும் என்பது திராவிடக் கல்வியின் கோட்பாடாக அமையும்.

திராவிட ஆன்றோர்க் கல்வியின் தனித்தன்மைகளாகப் பிறங்குவன :

1. ஆன்றோர்க் கல்விக்கான தனி அமைப்புகள் தனித்துச் செயல்படும்.

2) ஆன்றோர்க் கல்வி நிறுவனங்களில் ஆன்றோர் மட்டுமே அமர்த்தப்படுவர். அதுவும் அந்தந்த தலக் குடிகளாகவே அவர்கள் இருப்பர். பிள்ளைகளுக்குக் கல்வி புகட்டுவதோடு ஆன்றோர்களைக் கல்வியாள ராக்குவது திராவிடக் கல்வியின் நோக்கமாக இருக்கும்.

3) அ) மலையாளிகளுக்கென்ற தனிக் கல்விக்குழு மலையாளிகளைக் கொண்டும்,

ஆ) இருளர்க்கென்ற தனிக் கல்விக்குழு இருளர்களைக் கொண்டும்,

இ) ஊட்டி அழியாநிலை ஆன்றோர்க்கானக் கல்விக் குழு ஊட்டி ஆன்றோரைக் கொண்டும்,

ஈ) வால்பாறை ஆன்றோரைக் கொண்ட தனிக் கல்விக் குழுவும்,

உ) ஈரோடு ஆன்றோர்க்கான தனிக்கல்விக் குழுவும்,

ஊ) பிற ஆன்றோர்க்கான கல்விக்குழு அந்த ஆன்றோர்களைக் கொண்டும்,

தனித்தனியாக உருவாக்கப்படும். ஒரு முதுநிலைப் பட்டம் பெற்றவர்கள் தலைமைக் கல்வியாளராகவும்,துணைக் கல்வி யாளராகவும், அந்தந்த இடங்களிலேயே செயல்படுவர்.

மலையாளிகளுக்கும், இருளர்க்கும் ஐந்தைந்து குழுக் களை அமைக்கலாம். மொத்தமாக 14 - 20 குழுக்கள் செயல் படலாம்.

இந்த குழுத் தலைவர்களைக்கொண்ட மாநிலக்குழு ஆன்றோர் இயக்குநரின் கீழ் மாதம் ஒருமுறை Zoom இல் மாநில அளவில் கூடி முடிவுகளை எடுப்பர்.

ஆன்றோர்க்கானத் துவக்கப் பள்ளிகளை உருவாக்கு வதும், 5 ஆம் வகுப்பு வரை கல்வி வழங்குவதும், சவாலான செயல்பாடுகளாகும். 5 ஆம் வகுப்பு வரை ஆன்றோர்ப் பிள்ளைகளைப் பெற்றோரிடம் இருந்து பிரிக்காமலும், அவரவர் குடியிருப்புகளிலிருந்தே கல்வி புகட்டப்படுவதை யும், உறுதிப்படுத்துவதே சவால். வேறு எந்த விதமான பொதுக்கல்விப் பாடங்களையும், பள்ளிக் கட்டமைப்பு களையும் ஆன்றோர் சிறார்கள் மீது திணித்தல் ஆகாது.

குறைந்தது 100 இடங்களிலாவது
அ) 1-5 வகுப்புகளை நடத்தவும்,

ஆ) 0-5 வயது மழலையரை வளர்ப்புகளை பேணவும்,

இ) பேறு காலத் தாய் நலன் காக்கவும்

ஒரு பட்டதாரிப் பெண் அமர்த்தப்பட வேண்டும். இவர் அதே இருப்பிடத்தைச் சார்ந்தவராக இருப்பது கட்டாயம். 10 குழந்தைகளுக்கு ஒருவர் என்ற எண்ணிக்கையில் இவர்கள் அமர்த்தப்படலாம். ஆன்றோர்க் கல்விக் குழுக்கள் அந்தந்த குடிகளைப் பற்றிய பாடங்கள் பற்றியும், அவரவர் வளங்களைப் பற்றியும், அவரவர் மொழிப் பாடங்களைப் பற்றியும், தக்க பரிந்துரைகளை வழங்குவர். இருளர், பளியர், ஆதியர் ஆகிய மூன்று குடிகளின் பள்ளிக் கல்வி, இவர்களது பொருளாதாரச் சூழல்களாலும், கொத்தடிமைக் கொடுமை களாலும், கடந்த 50 -60 ஆண்டுகளாகக் கடும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளது. இதன் எச்ச மிச்ச நிழல்கள் இன்னும் இவர்கள் மீது படிந்துள்ளன. ஆகவே இந்தக் குடிகளுக்கான பள்ளிக் கல்வியில் தனிக் கவனம் தேவை.

♦

# 6. ஆன்றோரின் பள்ளிகள்

ஆன்றோர்க்கென்ற தனித்த உண்டுறைப் பள்ளிகள் தேவையான எண்ணிக்கையில் உள்ளன. இந்தப் பள்ளிகளை வளப்படுத்தினால் இன்னொரு மடங்கு ஆன்றோர்ப் பிள்ளை களுக்குக் கல்வி வாய்ப்பை வழங்க முடியும். இதற்கான சில மாற்றங்களை வலுவோடு கொண்டு வர வேண்டும்.

**மாற்றம் ஒன்று**

அனைத்துத் துவக்கப் பள்ளிகளையும், உதவி பெறும் பள்ளிகளாக மாற்றி ஆன்றோர் பட்டதாரிகளிடம் ஒப்படைக்க வேண்டும். பள்ளிகளில் மாணவரின் எண்ணிக்கையைப் பொருத்து இரண்டு அல்லது மூன்று ஆசிரியர்கள் இப் பொறுப்பை ஏற்கலாம். துவக்க/நடுநிலைப் பள்ளிகளுக்கு ஆசிரியர் மாணவர் விகிதம் 1:25 ஆகவும், உயர்/மேல்நிலைப் பள்ளிகளின் விகிதம் 1:30 ஆகவும் விதிக்கப்படலாம்.

தற்போதுள்ள 201 துவக்க/நடுநிலைப் பள்ளிகளின் சராசரி மாணவர் எண்ணிக்கை 50 ஆக உள்ளது (2022 இன்படி). 1:25 விகிதப்படி பள்ளிக்கு 2 ஆசிரியர்கள் வீதம் 201 X 2 = 402 ஆசிரியர்கள் தேவைப்படுவர்.

இவர்கள் 2030 ஆம் ஆண்டில் பள்ளி மாணவர் எண்ணிக் கையைச் சராசரியாக 100க்குக் கொண்டுவரும் இலக்கை நிர்ணயித்துச் செயல்பட வேண்டும். அப்போது ஆசிரியர் எண்ணிக்கையைப் பள்ளிக்கு 4 ஆக உயர்த்தலாம்.

ஆன்றோர் பள்ளிகளில் ஆன்றோர் மட்டுமே பணி புரியலாம். இவர்களுக்கு TET போன்ற கழித்துக்கட்டும் தேர்வுகள் தேவை இல்லை. நியமனத்திற்குப் பிறகு தொடர் பயிற்சிகளை ஆசிரியர்க்குத் தருவதே போதுமானது. இப்பள்ளிகளில் மாணவர் எண்ணிக்கை 100 ஐத் தொட்டால்

2030 இல் ஆன்றோரின் மாணவர் சேர்க்கை விகிதம் (GER) 100% ஐத் தொட்டு விடும் என எதிர்பார்க்கலாம்.

**மாற்றம் இரண்டு**

தற்போது இருக்கும் 59 உயர் / மேல்நிலைப் பள்ளி களில் சராசரியாக 200 ஆன்றோர்கள் பயில்கின்றனர். இருக்கும் 31 உயர்நிலைப் பள்ளிகளையும் ஒன்று அல்லது இரண்டு ஆண்டுகளில் மேல்நிலைப் பள்ளிகளாக மாற்ற வேண்டும். இதற்கு மேல் மேல்நிலைப் பள்ளிகள் ஆன்றோர்க்குத் தேவைப்படா. இவை தவிர எட்டு ஏகலைவர் பள்ளிகளும் செயல்படுகின்றன.

அனைத்துப் பள்ளிகளையும் ஏகலைவர் சங்க அடிப்படையில் ஆன்றோர்களே நடத்த வேண்டும். 5 அல்லது 6 பள்ளிகளைக் கொண்ட தனிச் சங்கங்கள் 10 -12 செயல் படலாம். இந்தச் சங்கப் பொறுப்பாளர்கள் அடங்கிய மாநிலச் சங்கம் இயக்குநரை உறுப்பினர் செயலராகக் கொண்டு செயல்படலாம்.

இனி கூடுதல் உயர் /மேல்நிலைப் பள்ளிகளை உருவாக் கத் தேவையில்லை. இருக்கும் பள்ளிகளை அவ்வப்போது சீராக்கம் செய்து கொள்வது போதுமானது. ஒவ்வொரு பள்ளியும் தற்போதுள்ள சராசரி மாணவர் எண்ணிக்கையான 200 ஐ அடுத்த 5 ஆண்டுகளில் இரண்டு மடங்காக, அதாவது 400 ஆக உயர்த்தும் இலக்குடன் செயல்பட வேண்டும். சராசரி 400 ஐ பெறும் போது ஆன்றோர் சேர்க்கை விகிதம் (GER) 100/ ஐத் தொட்டுவிடும்.

♦

# 7. ஆன்றோர்க் கல்லூரிக் கல்வி

ஆன்றோரின் மேல்நிலைக் கல்விக்கானத் தனித்துவச் செயல்பாடுகள் எதுவும் தமிழ்நாட்டில் இதுவரை மேற்கொள் ளப்படவில்லை. பள்ளிகளுக்குத் தரப்பட்ட அக்கறை கல்லூரிக் கல்விக்குத் தனித் திட்டங்களாகக் காட்டப்பட வில்லை.

ஒன்றிய அரசின் போஸ்ட் மெட்ரிக் கல்விக் கொடை ஒன்றே இன்னும் செயல்பாட்டில் உள்ளது.

ஆன்றோரின் சேர்க்கை விகிதம் மேற்கல்வியில் பின் தங்கி இருப்பதற்கு இதுவே மூல காரணமாக இருந்துள்ளது. இதை மாற்றிப் பல புதிய தனி அணுகுமுறைகள் கொண்டு வரப்படும் என்பது திராவிடக் கல்வி ஆன்றோர்க்குத் தரும் வாக்குறுதியாக இருக்கும்.

மலையாளிகளும், இருளர்களும்,தமிழ்நாடு ஆன்றோர் மக்கள் தொகையில் சற்றொப்ப 75%ஆக இருப்பதால் இந்த இரு குடிகளுக்கான தனி உயர்கல்வி அமைப்பு ஒன்று செயல்பட வேண்டும். இந்த இரு ஆன்றோர் குடிகளைச் சார்ந்த கல்லூரி, பள்ளி ஆசிரியர்கள் 10 பேர் இந்த அமைப்பில் செயல்படலாம். 6 பேர் மலையாளிகளாகவும், 4 பேர் இருளர் களாகவும் இருக்கலாம். இக்குழு அவ்வப்போது கூடி அரசுக்குத் தேவையான பரிந்துரைகளை வழங்கும்.

இது தவிர்த்து ஊட்டிக்கு ஒரு உயர்கல்விக் குழுவும், ஈரோட்டிற்கு ஒன்றும், வால்பாறைக்கு ஒன்றும் காணிக்காரர், கணியார், பளியர்களுக்கு ஒன்றும் மற்ற குடிகளுக்கு ஒன்றும் எனக் கூடுதலாக 5 குழுக்கள் செயல்படலாம். இவை தனியர் (One man) குழுக்களாக இருப்பது போதுமானது.

10,11,12 பயிலும் அனைத்து ஆன்றோர் மாணவர் களுக்கும், ஆண்டுக்கு இருமுறை உயர்கல்வி வழிகாட்டு

மையங்கள் நடத்தப்பட வேண்டும். துறை அதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும். அதே வேளை ஆன்றோர் பெருமக்களை இந்தக் கூட்டங்களில் பங்கேற்க வைக்க வேண்டும். கல்வியாளர், கல்வி ஆலோசகர் என்ற பெயரில் ஆன்றோர் அல்லாதவர்கள் பங்கேற்பதைத் தவிர்க்கலாம் 12 வது தேறும் அனைத்து ஆன்றோர் மாணவர்களும் கல்லூரிப் படிப்பை எட்டுவதற்கு வாய்ப்புகள் உருவாக்கித் தரப்பட வேண்டும். அனைத்து ஆன்றோர் கல்விக் குழுக்களும், இதற்கான தொடர்பு வசதிகளைக் கணிணி வழியாக உருவாக்க வேண்டும் (Helpline).

ஊட்டியிலுள்ள பாலாடா ஆன்றோர் ஆய்வு மையம், நிகர்நிலைப் பல்கலைக் கழகமாக மாற்றப் பட்டு முதுநிலைப் பட்டங்கள், ஆய்வுப் படிப்புகள் ஆன்றோர்க்கு என்றே புகட்டப்படுவதற்காக மாற்றப்பட வேண்டும். இந்தியா முழுவதிலும் இருந்து ஆன்றோர் மாணவர்கள் சேர்க்கப் படலாம். இது தவிர்த்து ஆன்றோர்க்கென்றத் தனி மருத்துவக் கல்லூரி உருவாக்கப்பட வேண்டும். 50% தமிழ்நாட்டு ஆன்றோரும், 25% அனைத்திந்திய ஆன்றோரும் மற்றும் 25% தமிழ்நாட்டுச் சான்றோரும் சேர்க்கப்படலாம்.

போஸ்ட் மெட்ரிக் கல்விக் கொடையில் பேணல் படி (Maintenance Grant) மிகக் குறைவாக வழங்கப் படுகிறது. இதை ரூ.50,000 ஆக உயர்த்தி ஒன்றிய அரசு தருவது போக மீந்ததை மாநில அரசு வழங்க வேண்டும்.

வெளிநாட்டுக் கல்விக்காக ஆண்டுக்கு 10 ஆன்றோர் அனுப்பப்பட வேண்டும். Ph.D மேற்கொள்ளும் ஆன் றோர்க்கு ஆண்டுக் கொடை ரூ.6 இலட்சமாக உயர்த்தப்பட வேண்டும்.

♦

# 8. சான்றோர்க் கல்வி
# (Education For Scheduled Caste)

சான்றோர்களுக்காக எதையும் சிந்திக்கவோ, செயல் படவோ முனைவதற்கு முன்னர் சான்றோர் ஆகிய பட்டியல் இனத்தவரைப் பற்றிய பார்வைகள் முதலில் மாற்றிக் கொள்ளப்பட வேண்டும். பட்டியலிலுள்ள அனைத்து வகைச் சான்றோர்களையும், ஒரே தொகுப்பில் கொண்டு வருவதற் கான முதற்காரணம்,

‘அவர்கள் பிராமணத் தலைமையை ஏற்காதவர்கள்‘

‘அவர்கள் பிராமணச் சடங்குகளை ஏற்காதவர்’

இவ்விரண்டு வரையறைகளையும், உலகம் எடுத்துப் பேசுவதே இல்லை. மாறாகப் பிற இழிவரல்களை மட்டும் அடையாளப் படுத்தி, ‘சான்றோர்கள் இழிவரல்களுக்கும், இரக்கத்திற்கும் மட்டுமே சொந்தக்காரர்’ என்பது போல அவர்களையே நம்பவைக்க முனைகிறது உலகம். சான்றோர் களின் உளத்தியலைச் சொட்டை ஆக்குவதே இவர்களது நோக்கமாகும்.

தீண்டாமை, கல்லாமை, ஏழ்மை போன்ற எல்லா வரையறைகளும் சான்றோர்க்கு உள்ளது போன்று பிற்பட்டோர்க்கும் (BC, MBC, OBC) பொருந்தும்.

சான்றோரைப் பிற யாவரிடமிருந்தும் பிரித்துக் காட்டும் பெருமையான அடையாளம் இந்த பிராமண மறுப்பும், சாதி தழுவாமையும் தான். பல்வகைச் சான்றோர்களுக்கிடையே காணப்படும் ஒரே வகையான அடையாளமும் இவைதான்.

அதே போன்று சான்றோரைக் கல்வியில் பின்தங்கியவர் என்றும், கல்வி மறுக்கப்பட்டவர் என்றும் (2000 ஆண்டு களாகக் கல்வி மறுக்கப்பட்ட சமுதாயம் என்பர்) சான்றோரது மாண்பைக் குறைக்கும் வகையாகக் கீறிக் கீறிப் பேசுகின்றனர். சான்றோரின் சமுதாயப் பெரியவர்களும், அரசியல்

தலைமைகளும், இதனால் சுய மாண்பு அடிபடுகிறது என்பதை உணராமல் இவ்வகையாகவே பீறிப் பீறிப் பேசுகின்றனர். இந்த எடுகோளில் சரித்திர உண்மைகளும் இல்லை; நவீன உலகத்து நடப்பு நிலவரத்திலும் இதற்கு மாறான புள்ளி விவரங்கள் தாம் கிட்டுகின்றன.

பண்டைக் காலத்தில் வள்ளுவர் முதற்கொண்டு கணியன் பூங்குன்றன் தொடர்ந்து ஔவை எனச் சான்றோர் அறிவர் திரட்டு விரியும். தஞ்சைப் பெருங்கோவிலின் பெருந் தச்சன், குஞ்சுர மள்ளன் போன்றோர் சான்றோரின் மூதாதையராகத் தான் இருந்துள்ளார்.

1800 களிலிருந்து ஊர்ப்புறங்களில் பள்ளிகளை நிறுவிய திலும், நடத்தியதிலும், சான்றோர் முன்னிலை வகித்தனர். நாடு விடுதலை பெற்றதிலிருந்து தமிழ்நாட்டில் 1 முதல் பள்ளி இறுதிப் படிப்பு வரை சேர்க்கை விகிதத்தில் சான்றோர் பிள்ளைகள் மற்றவர்க்குச் சரிநிகராகவே வளர்ந்துள்ளனர். இன்றைய சேர்க்கை விகிதத்தில் (GER) தமிழ்நாட்டுச் சான்றோர் மாணவர், இந்திய நாட்டின் பொது மாணவர் விகிதத்தை விட குறைந்தது 1.5 மடங்கு அதிகமாக உள்ளனர்.

எல்லா வயதினரையும் உள்ளடக்கிய கல்லாமைப் புள்ளியை (Illiteracy rate)மட்டும் எடுத்துக்கொண்டு (GER) ஐக் கணக்கிலேயே எடுத்துக் கொண்டு வராமல் இருந்துள்ளனர். இது சான்றோரைக் கல்லாதவர் என்ற பொதுப் படையில் காட்டுவதற்கான ஒரு திரிபாகவே கடைபிடிக்கப்பட்டு வந்துள்ளது. சான்றோரைச் சாதி இல்லாதவர் என்றே பகர வேண்டும். அவர்களைக் கீழ்சாதி என்று சாதி அடுக்குக்குள் வலிந்து திணிப்பது என்பதும் ஒரு திட்டமிட்ட திரிபு தான். சான்றோரைப் பட்டியல் இனம், அரிசன், தாழ்த்தப் பட்டோர், ஒடுக்கப் பட்டோர், தலித் என்ற அடையாளக் குறியீடுகளால் இனி அழைத்தல் ஆகாது.

சான்றோர் மாணவர்களது சேர்க்கை விகிதம் 1 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை மற்றவர்க்குச் சரி நிகராகவே உள்ளது. ஏற்கனவே உள்ள பள்ளிகளின்

கட்டமைப்பு வாய்ப்புகளைச் சான்றோர் நன்கு பயன்படுத்தி வந்துள்ளனர் என்பதன் அறிகுறியே இது. இது தவிர அரசு தனித்து நடத்தி வரும். சான்றோர்ப் பள்ளிகளும், விடுதிகளும் இதற்கு உறுதுணையாக இருந்துள்ளன.

ஆகவே, எதிர்காலத்தில் சான்றோர் மாணவர்க்கும் பிறருக்குள் உள்ள இடைவெளியைக் குறைக்க வேண்டும் என எடுகோள் பொருளற்றதாகிவிட்டது. பள்ளிப் படிப்பைப் பொருத்த அளவில் இந்த அணுகுமுறை அலசல் கை கழுவப் பட வேண்டும்.

மாற்றாகச் சான்றோரது சேர்க்கை விகிதம் 100 சதவீத முழுமையை எட்டுவதற்கான நோக்குகளும், இலக்குகளும் வகுக்கப்பட வேண்டும். ‘இன்னொருவரைப் போல’ என்ற ஒப்பீட்டுப் பார்வை முற்றிலும் கைவிடப்பட வேண்டும்.

சான்றோர் மாணவர்களைப் பள்ளிக் கல்வியில் விதந்து வரச் செய்தல் எவ்வாறெல்லாம்நடக்கலாம் எனில்,

1. ஆதி திராவிடர் நலத்துறை நடத்தி வரும் அனைத்துத் துவக்க, நடுநிலைப் பள்ளிகளையும், சான்றோரிடம் ஒப்படைக்க வேண்டும். உதவி பெறும் பள்ளிகள் போல இவை சான்றோர் இனத் தனியர்களிடம் விடப்பட வேண்டும்.

2. இருக்கும் உயர்நிலைப் பள்ளிகள் யாவும் மேல் நிலைப் பள்ளிகளாக மாற்றப்பட வேண்டும்.

3. மேல்நிலைப் பள்ளிகளை ஆசிரியர்களைக் கொண்ட தனி அமைப்பு நடத்த வேண்டும்.

4. இந்தப் பள்ளிகளில் சான்றோர் அல்லது கிருத்துவச் சான்றோர் மட்டுமே ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாப் பணி களில் அமரலாம் என விதித் திருத்தம் செய்யப்பட வேண்டும்.

5. இந்த ஒவ்வொரு மேல்நிலைப் பள்ளிகளையும் செழுமைப்படுத்த வேண்டும்.

6. புதிய பள்ளிகளைத் துவக்க வேண்டுவதில்லை.

7. உதவி பெறும் பள்ளிகளிலும், மெட்ரிக், CBSE,

International School போன்ற பல்வேறு பள்ளிகளிலும், 11 வது, 12 வது, பயிலும் சான்றோர்களுக்குப் போஸ்ட் மெட்ரிக் கல்வித் தொகையை விடுவிக்க வேண்டும். ஒன்றிய அரசு தரும் இந்த நிதியைத் தமிழ்நாடு அரசு தர மறுத்து வருகிறது என்பதை இங்கு சுட்டிக் காட்ட வேண்டி உள்ளது.

8. அரசுப் பள்ளிகள், அரசு உதவி பெறும் பள்ளிகள், மெட்ரிக் பள்ளிகள் அடங்கிய சற்றொப்ப பத்தாயிரம் பள்ளிகளில் சான்றோர் மாணவர் சேர்க்கை 18%க்குக் கீழ் உள்ளது. அரசு இப்பள்ளிகளின் மீது தனித் தனியாகக் கவனம் செலுத்தி இத்தகைய பள்ளிகளை நேர் செய்ய வேண்டும்.

♦

## 9. சான்றோர் பெண் கல்வி

*சான்றோர் பெண் கல்வியை ஊக்குவிக்கும் வண்ணம் தற்போது ஆதி திராவிடர் நலத் துறையில் துவக்க வகுப்பு மற்றும் நடுநிலை வகுப்புச் சிறுமியர்களுக்குத் தரப்படும் சின்மைய நிதித் திட்டத்தை மாற்ற வேண்டும். மாற்றி முதுநிலையை முடிக்கும் ஒவ்வொரு சான்றோர் மகளிருக்கும் தற்போது வழங்கப்பட்டு வரும் திருமண உதவித் திட்டத்தை நீடிக்கலாம். ஓராண்டுக்கு இத்தகைய 100 சான்றோர் மகளிருக்கு அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடித் திட்டத்தின் கீழ் தொழிற்கடனும் வழங்கலாம்.*

♦

## 10. சான்றோர் உயர்கல்வி

தமிழ்நாட்டுச் சான்றோர் உயர்கல்வி விகிதமான 41% (2018) அகில இந்தியப் பொது விகிதமான 29% விட அதிக மாக இருப்பது நிறைவைத் தரும். ஆயினும் இத்தோடு நில்லாமல் இந்தச் சேர்க்கை விகிதத்தை (GER) 85% க்கு 2030க்குள் உயர்த்த இலக்கு வைத்துச் செயல் திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும்.

1940களில் அண்ணல் அம்பேத்கர் பெற்றுத் தந்த போஸ்ட் மெட்ரிக் கல்விக் கொடைத் திட்டத்தைத் தவிர்த்துத் தமிழ்நாட்டில் வேறெந்த உயர்கல்வித் திட்டமும் சான்றோர் களுக்காக உருவாக்கப்படவில்லை. கல்லூரி மாணவர் விடுதிகளை நடத்துவது மட்டுமே ஒரு மாற்றமாகத் தெம்பளிக்கிறது.

கடந்த 10 ஆண்டுகளுக்குள் தான் ஆய்வுப் படிப்பிற்கான (Ph.D) கொடைத் திட்டமும், வெளி நாட்டுக் கல்விக்கான திட்டமும் கொண்டுவரப் பட்டன. போஸ்ட் மெட்ரிக் கல்விக் கொடைத் திட்டம் முழுமையாகவோ, முறையாகவோ, சரியான காலக்கட்டத்திலோ இதுவரை நடைமுறைப் படுத்தாமை சான்றோர்களிடையே பெருத்த ஏமாற்றத்தையும், வருத்தத்தையும் கொண்டு வந்துள்ளது.

கல்வி ஆண்டு துவக்க மாதத்திலேயே 50 % போஸ்ட் மெட்ரிக் கல்விக் கொடையை விடுவித்தாலே போதும், சான்றோரின் கல்லூரிச் சேர்க்கை 30 % கூடி விடும். போஸ்ட் மெட்ரிக் கல்விக் கொடைத் திட்டத்தின் நடைமுறையைக் கண்காணிக்க கல்லூரி முகவர்கள், மாணவர்கள், சமூகத் தொடர்பாளர்கள் கொண்ட நிரந்தரக் குழு ஒன்று செயல்பட வேண்டும்.

பொறியியல் மற்றும் சட்ட பட்டப் படிப்புகளில் சான்றோர் பங்கேற்பு கணிசமாக உயர்ந்துள்ளது. இதை வளர்த்துவிடும் வண்ணமாக இப்படிப்புகளில் முதுகலைப் படிப்புகளுக்கும்,

அயல் நாட்டுக் கல்விக்கும், ஆய்வுப் (Phd) படிப்பிற்கும் தனித்த திட்டங்களை உருவாக்க வேண்டும்.

தற்போது Phd பயிலும் 1500 பேர்களுக்கு மட்டும் தமிழ்நாடு அரசு ஆண்டுக்கு ரூ.1 இலட்சம் வழங்கி வருகிறது. இந்தத் தொகை UGC வழங்குவது போல ரூ.6 இலட்சமாக உயர்த்தப்பட வேண்டும். அதே சமயம் மொத்த ஆய்வு மாணவர்களின் எண்ணிக்கையும், 5000 ஆக உயர்த்தப்பட வேண்டும். ஆண்டுக்கு ரூ.300 கோடி மட்டுமே செலவின மாகும். வெளிநாட்டுப் படிப்பிற்காக வழங்கப்படும் 10 பேருக்கான கொடை 100 பேருக்காக விரிவுபடுத்தப்பட வேண்டும்.

♦

# 11. சான்றோர் ஆளுமையும் 100 சதவீத வாய்ப்பும்

**சான்றோர்க்கான புதிய திட்டங்கள்**

*சான்றோர் கல்வியை வளர்ப்பது என்பதில் சான்றோரின் கல்விக் கூடங்களை நடத்தும் ஆளுமையும் அடங்கும். இதை ஊக்குவிக்கும் பொருட்டு புதிய திட்டங்கள் புகுத்தப்பட வேண்டும்.*

**அவற்றுள் சில**

*1. ஏற்கனவே சான்றோர்களால் நடத்தப்பட்டு வரும் பள்ளி, கல்லூரிகளுக்கு தற்போது அரசு மற்றவர்களுக்கு வழங்கி வரும் நிதி உதவியை நீடிக்கலாம்.*

*2. சான்றோர்கள் தனியார் கல்வி நிர்வாகத்தில் பங்கு பெறும் வகையாக நிறுவனத்தில் பங்குதாரராகச் சேர சான்றோர்க்கு நிதி அளிக்கலாம்.*

*சான்றோர் வளர்திட்ட நிதி* (DAPSC) *ஆண்டுக்கு ரூ.20000 கோடியாக உள்ளது. இதில் ஆண்டுக்கு ரூ.1000 கோடி ஒவ்வொரு மாவட்டத்திலும் சான்றோர்க்கான ஒரு மருத்துவக் கல்லூரியை அமைக்க செலவிடப்பட வேண்டும். 20 -30 ஆண்டுகளில் இத்தகைய மருத்துவக் கல்லூரிகள் 20 -30 உருவாக்கப்பட வேண்டும். இதில் 70% சான்றோர் அரசுக் கட்டணத்தில் சேர்க்கப்படுவர். மீதி 30% உயர் கட்டணத்தில் சான்றோர் உட்பட யாவரும் சேரலாம். பள்ளி இறுதி வகுப்பில் 90% க்கு மேல் மதிப்பெண்கள் பெறும் எவரும் விண்ணப்பிக்கலாம். அந்த விண்ணப்பங்களில் இருந்து தேவையான மாணவர்கள் குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்படுவர். எந்தவித நுழைவுத் தேர்வும் கூடாது.*

*சான்றோர்க் கல்வியில் கருத்தில் கொள்ள வேண்டியக் கருத்தியல் உருமாற்றம் ஒன்று உண்டு. அது தான் இவ்வளவு காலம் பழகிப் போன பங்கீடு* (Reservation) *தத்துவத்தைத்*

தாண்டி வருவதாகும். பங்கீடு (Reservation) கோட்பாடு ஒரு குறும எண்ணிக்கைக்குள் சான்றோரை முடக்கும் ஒரு மறைமுகச் சதியாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஆகவே கல்வியைப் பொருத்த அளவில் சான்றோர்களுக்கு 100 க்கு 100 சதவீதம் வாய்ப்புகளை வழங்கும் நெறிமுறைகள் கடை பிடிக்கப்படும் என்பது திராவிடக் கல்விக்கோட்பாட்டின் மிக மெச்சத்தக்க ஓர் அங்கமாக இருக்கும்.

♦

## 12. பல்கலைக் கழகங்களின் உருமாற்றமும், செயல்பாடுகளும்

தற்போது தமிழ்நாட்டில் செயல்படும் பல்கலைக் கழகங்களின் எண்ணிக்கையை அடுத்த 15 ஆண்டுகளுக்காவது கூட்ட வேண்டுவதில்லை. மாறாக அவற்றின் அமைப்பு வரையறைகளையும், செயல்பாடுகளையும் தீர்க்கமாக மாற்ற வேண்டும்.

பல்கலைக் கழகங்களில் ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் ஊடுருவல் வேந்தர்கள் மூலமாகவும், துணை வேந்தர்கள் மூலமாகவுமே அரங்கேற்றப்படுகின்றன.

வேந்தர் பதவி என்பது காலனி ஆட்சியில் ஆதிக்க அரசுகளின் கைப்பிடிக்குள் பல்கலைக் கழகங்கள் செயல்பட வேண்டும் என்பதற்காகவே உருவாக்கப்பட்டது. குடி ஆட்சி களுக்கு இந்தப் பதவி முரணானது. திராவிடக் கல்விக் கோட் பாட்டில் பல்கலைக் கழகங்களைக் கல்வியாளரின் கருத்துக் கூடமாகச் செயல்பட வைப்பது முன்னுரிமை பெறும்.

இதன் முதற்படியாக வேந்தர் (Chancellor) பதவிகள் அகற்றப்படும். பல்கலைக் கழகங்கள் மாநிலச் சட்டங்களால் உருவாக்கப் படுவதால் வேந்தர் பதவியை ஒழிப்பது மாநில அரசின் ஆளுமைக்குள் வரும். இதற்கான முயற்சிகள் அடுத்த சட்டமன்றக் கூட்டத்திலேயே எடுக்கப்படும்.

வேந்தர், துணை வேந்தர் என்ற மன்னராட்சி மதப்பு கொண்ட சொல்லாடல்கள் நீக்கப் படும்.

பல்கலைக் கழகம் இரண்டு அடுக்கு அமைப்புகளால் நடத்தப்படும். முதல் அடுக்கு அவை என்றும்,(தற்போதைய செனட்), மேலடுக்கு மேலவை (தற்போதைய சிண்டிகேட்) என்றும் அழைக்கப்படும்.

அவை என்பது பல்கலைக் கழக வரம்பிற்குள் வரும் அனைத்துக் கல்லூரிகளின் முதல்வர்களைக் கொண்டு அமைக்கப் படும். வேறு யாரும் பங்கேற்கலாகாது. அவையில் 50% ஆண்களும், 50% பெண்களும், 20% சான்றோர்/ஆன்றோர்களும் இருப்பது உறுதி செய்யப்பட வேண்டும். பெண் முதல்வர்கள் 50% குறையும் போது அந்தக் குறைவு எண்ணிக்கைக்கு அந்தக் கல்லூரி பரிந்துரைக்கும் பெண் பேராசிரியர் (Professor) அவை உறுப்பினராக அமர்த்தப் படுவார். குறை எண்ணிக்கை அளவிற்கு எந்தக் கல்லூரிகள் பெண் பேராசிரியர்களை அனுப்ப வேண்டும் என்பது குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்படும்.

இந்த நடைமுறை சான்றோர்/ ஆன்றோர் நியமனங் களுக்கும் கடைபிடிக்கப்படும்.

முதலில் 20% சான்றோர்/ஆன்றோர் பதவிகள் அறுதி இடப்படும். சான்றோர்/ஆன்றோர் தேவையான அளவு முதல்வராக இல்லாத வேளை, குறைவு எண்ணிக்கைக்கு எந்தக் கல்லூரி வரும் என்பது குலுக்கல் முறையில் முடிவு செய்யப் படும். அந்தக் கல்லூரி நியமனம் செய்யும் சான்றோர்/ஆன்றோர் பேராசிரியர் (Professor) அவை உறுப்பினராக நியமிக்கப் படுவார். இதில் பெண்களும் அடங்குவர். அவை உறுப்பினர் ஆயுட்காலம் 5 ஆண்டுகளாக இருக்கும். குறுகிய கால மாற்றங்கள் பல குழப்பங்களுக்கு வழி வகுக்கின்றன. தனியர் இரண்டு முறைகளுக்கு மேல் பதவி வகிக்க முடியாது. தனியர்கள் கல்லூரியிலிருந்து இடைக் காலத்தில் ஓய்வு பெற்றாலும், 5 ஆண்டு அவை பதவிக் காலம் முடியும் வரை அவர் தொடர்ந்து இருப்பார். பதவிக் காலத்தில் யாராவது காலமானார் எனில் அதே வகையினரை (முதல்வர், ஆண், பெண், பேராசிரியர், சான்றோர், ஆன்றோர்) அதே கல்லூரி நியமிக்கும். இவர் அவையின் மீந்த காலத்திற்குச் செயல் படுவார். எஞ்சிய காலம் ஓராண்டுக்குக் கீழ் எனில் பதவி காலியாக விடப்படலாம்.

இந்த அவை தமக்குள் ஒரு தலைவரைத் தேர்ந்தெடுக்கும். சான்றோர்; பெண்; பொது என்ற சுழற்சி முறையில் அவைத்தலைவர் தேர்ந்தெடுக்கப்படுவார். சுழற்சி முறை சான்றோரில் தொடங்கி, அடுத்துப் பெண், அடுத்துப் பொது என்று வரும். 'அவை' உறுப்பினர்கள் 5 இல் ஒரு பங்கினரைக் குலுக்குச் சீட்டு முறையில் பேரவை உறுப்பினர்களாக அமைக்கலாம். இவர்களுள்ளும் சான்றோர் 20% முதலில் தேர்ந்தெடுக்கப்படுவர். மொத்தமுள்ள 'பேரவை' உறுப்பினருள் குறைந்தது 50% பெண்கள் இருக்க வேண்டும். பேரவை உறுப்பினர்கள் தமக்குள் ஒருவரைப் பேரவைத் தலைவராகக் குலுக்கல் முறையில் தேர்வு செய்வர். அவரே பல்கலைக் கழகத் தலைவராகச் செயல்படுவார். இந்தத் தேர்வு சான்றோர்; பெண்; பொது என்ற சுழற்சி முறையில் 5 ஆண்டு களுக்கு ஒருமுறை நடைபெறும். பதிவாளர், தேர்வுக் கட்டுப் பாட்டாளர் ஆகிய இருவரும் இதே போன்று பேரவை உறுப்பினர்களில் இருந்து, குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்படுவர். சுருக்கமாகச் சொல்லப் போனால் பல்கலைக் கழகப் பதவிகளுக்குத் தேர்தல் இராது. ஆனால் உறுப்பினர் தேர்வுகளில் சனநாயகமும், நேர்மையும் நிலவும்.

அந்தந்தப் பல்கலைக் கழகங்கள் அந்தந்தப் பல்கலைக் கழகக் கல்வியாளர்களால் ஆளுமை செய்யப்படும். முன்பு போல் இல்லாமல் தற்போது எல்லாப் பல்கலைக் கழகங்களிலும், கல்வியாளர் நிரம்பி உள்ளனர். இன்னும் சொல்லப் போனால் தமிழகத்தின் எல்லாப் பல்கலைக் கழகங்களிலும், துணை வேந்தர், பதிவாளர், தேர்வுக் கட்டுப் பாட்டாளர்கள் போன்றோர் தமிழகத்திலுள்ள இன்னொரு பல்கலைக் கழகத்திலிருந்து தான் நியமிக்கப்படுகின்றனர். இந்நியமனங்களில் ஆளுநர் தலையீடும், அரசுத் தலையீடும் பெரும் நிதிக் கேடுகளுக்கும், தன்னிச்சைப் போக்கிற்கும் வழி வகுத்துள்ளன. ஆகவே திராவிடக் கல்விக் கொள்கையில் பல்கலைக் கழகங்களில் எல்லாவித வெளித் தலையீடுகளும் நிறுத்தப் படும்.

முறைகேடுகளில் ஈடுபடும் தலைவர்,பதிவாளர்,

தேர்வுக் கட்டுப் பாட்டாளர்கள் ஆகியோரை மேலவையும், அவையும் சேர்ந்த கூட்டமைப்பில் 60%உறுப்பினர்கள் முடிவெடுத்து அவர்களைப் பதவியிலிருந்து நீக்கலாம். 40% கூட்டமைப்பு உறுப்பினர்கள் இப்பதவியில் உள்ளோருக்கு எதிராகத் தீர்மானம் கொண்டு வந்தால், இவர்கள் மீதான நடவடிக்கைக்கு வாக்கெடுப்பு நடத்தப்படும்.

அரசு நிதிப் பங்களிப்பைத் தீர்மானிக்க உயர் கல்வி அமைச்சர் தலைமையில் அனைத்துப் பல்கலைக்கழகத் தலைவர்களும் ஒன்று கூடி மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை முடிவெடுப்பர். கல்வி அமைச்சருக்கு உதவியாகக் கல்வித் துறை அதிகாரிகள் மட்டுமே பங்கு பெறுவர். நிதித் துறை அதிகாரிகள் பார்வையாளராக மட்டுமே பங்கு பெறலாம். நிதித் தணிக்கை மட்டும் மாநில அரசின் கட்டுப் பாட்டில் இருக்கும்.

♦

# 13. தமிழ்நாட்டில் பட்டப் படிப்புகளைக் கட்டணம் இன்றி நடத்தும் திட்டம்

*38 மாவட்டங்களுக்குச் சராசரியாக 10 கலை அறிவியல் கல்லூரிகள் எனில் 380 அல்லது 400 கல்லூரிகள் தேவை. 2022 கணக்கின்படி 8 இலட்சம் மாணவர் 12 ஆம் வகுப்பு தேறி வருகின்றனர். அனைவரும் கல்லூரி ஏகுவது எனில் 8 இலட்சம் மாணவர் X 3 ஆண்டு பட்டம் = 24 இலட்சம் மாணவர்.*

*இவர்களுள் 50 % (12 இலட்சம்) மாணவர்களைக் கலை அறிவியல் பட்டப் படிப்புகளுக்குச் செல்ல வைப்பதும், கட்டணம் இன்றிப் படிக்க வைப்பதும் நோக்கம். எனில் ஒரு கல்லூரிக் குச் சராசரியாக 3000 மாணவர் வருவர். (12, 00,000 % 400 கல்லூரி = 3000).*

*400 கல்லூரிகளிலும் காலை, மாலை இரு நேரப் படிப்பு களாகப் பாடம் புகட்டலாம். எனில் ஒரு நேரத்திற்கு 1500 மாணவர் தேறுவர்.*

*50 மாணவர்க்கு ஓர் ஆசிரியர் வீதம், 3000 மாணவர்க்கு 60 ஆசிரியர்கள் தேவைப்படுவர். ஓர் ஆசிரியர்க்கு ஆண்டுக்கு ரூ.10 இலட்சம் தொகுப்பூதியமாக அரசால் வழங்கப்படலாம். எனில் ஒரு கல்லூரிக்கு,*

*60 X ரூ.10 இலட்சம் = ரூ.600 இலட்சம் அல்லது ரூ.6 கோடி நிதி வேண்டும். 400 கல்லூரிகளுக்கு, 400 X ரூ. 6 கோடி = ரூ.2400 கோடி / ஆண்டுக்கு செலவாகும். பிற செலவுகளுக்காக இன்னொரு மடங்கு எனில் ரூ.4800 அல்லது ரூ.5000 கோடி /ஆண்டு தேவைப்படும். 400 கல்லூரிகளையும் அரசு உதவி பெறும் கல்லூரிகளாக மாற்றி, பட்டப்படிப்பு பயிலும் அனைத்து வகை மாணவர்களையும், கட்டணம்*

இன்றிப் படிக்க வைக்கலாம். தமிழ்நாட்டில் ஏற்கனவே 400 கலை அறிவியல் கல்லூரிகளுக்கு மேல் இருப்பதால், புதிய கட்டுமான முதலீடுகள் எங்கும் தேவை இல்லை.

ஒவ்வொரு கல்லூரியிலும், குறைந்தது 21% சான்றோர் (SC) ஆன்றோர் (ST) மாணவர்கள் கண்டிப்பாகச் சேர்க்கப்பட வேண்டும்; ஆசிரியர் நியமனங்களும் செய்யப்பட வேண்டும்.

இது குறித்து எழக்கூடிய கேள்விகள்

1. ஆசிரியர் ஊதியம் காலமுறை ஊதியமாக இல்லை.

2. எல்லாக் கல்லூரிகளிலும் சீராக 3000 மாணவர்கள் சேரும் வாய்ப்பு உள்ளதா?

♦

## 14. ஐந்து வயது வரையான மழலையர்க் குழந்தைகளுக்கானப் பரிந்துரை

5 வயது வரையான மழலையர்க்குக் கல்வி என்ற பெயரில் எண்ணும், எழுத்தும் பாடநூல் வடிவில் ஏதும் தரப்படக் கூடாது என்பதே அரசின் கோட்பாடாக இருக்கும். ஆகவே 5 வயது வரையான மழலையர் பற்றிக் கல்வித்துறை எவ்விதக் கல்விக் கருத்தியலும் வடித்தலாகாது. தாய் சேய் நலன் பேணும் துறையே மழலையர் வளர்ப்பு பற்றிய கோட்பாடுகளை வகுக்கும்.

எந்த வகையான பள்ளி வளாகத்திற்குள்ளும், 5 வயது வரையான மழலையர் தொடர்பான எந்த விதமான ஏற்பாடு களோ, நிறுவனப் பயிலரங்குகளோ, நிகழ்ச்சிகளோ நடத்தப் படலாகாது என்பது மட்டுமே கல்வித் துறையின் எடுகோளாக இருக்கும்.

♦

## 15. மாற்றுத் திறனாளிகளின் கல்வி

மாற்றுத் திறனாளிகளுக்குத் தனிப் பெரும் செயல்பாடுகள் பல வடிவெடுக்க வேண்டி உள்ளன. அவர்களுக்கான கோட்பாடுகளும், செயல்பாடுகளும் என்னவாக இருக்க வேண்டும் என்பதை அவர்களே எடுத்துச் சொல்ல வேண்டும். அதற்கு வாய்ப்பாகப் பல்வகை மாற்றுத் திறனாளிகளையும் உள்ளடக்கிய நிலைக்குழு ஒன்று உருவாக்கப்பட வேண்டும். கல்வி மட்டும் இன்றி தொழில், விளையாட்டு, மருத்துவம், போக்குவரத்து, உல்லாசப் பயணம், சொத்து பற்றிய பல்வேறு துறைகளில் அவர்களுக்குத் தேவையானதை அவ்வப்போது இக்குழு அரசுக்கும், சமூகத்திற்கும் முன் வைக்கும்.

♦

## 16. பெண் கல்வி

தமிழ்நாட்டில் பெண்கள் ஆண்களைவிடக் கல்வியில் மேம்பட்டு இருக்கிறார்கள் என்ற புள்ளி விவரம் மனநிறைவை அளிக்கிறது.

இதைத் தக்கவைக்கவும், மேலும் முன்னேற்றம் காணவும் புதிய கோட்பாடுகளையும், செயல் திட்டங்களையும் வகுக்கப் பெண்களைக் கொண்ட ஒரு குழு அமைக்கப்படலாம்.

♦

# 17. மாணவர் தேர்வு முறைகள்

இந்தியா முழுமையும் மாணவர்களது திறமையை எடைபோடுவது தனிமனித செயல்பாட்டின் (Individual Assessment). அடிப்படையில் மட்டுமே மேற்கொள்ளப் படுகிறது. அதாவது தனியர்களை எழுத்துத் தேர்வு மூலமாக எடை போடுவது மட்டுமே நடைபெறுகிறது. மதிப் பெண்கள் தனிமனித முயற்சிக்கு வழங்கப்படுகிறது.

இந்நாட்டுக் குடிமகனை அல்லது உலக மாந்தரை ஒரு கூட்டியக்க வாழ்க்கைக்கும் பிறரோடு கூடித் தமது பங்களிப்பை அளிப்பதற்கும் இந்நாட்டின் கல்வி பயன்படுவதில்லை.

இந்திய நாட்டின் கொடுமையான சாதிப் பிரிவினைகள், தனி மனிதனையும், தனிமனித ஆற்றலையும், தனிமனிதரின் சுயமேன்மை அல்லது சுயநன்மைக்கு மட்டுமே பயிற்றுவித்து சமூகப் பிளவுகளை வளர்க்கின்றன. ஒரு தனிமனிதன் தன் அறிவையும், ஆற்றலையும், ஈட்டிய பொருளையும் சமூகத்தில் பிறருக்காக வழங்கப் பழகாவிடில் ‘என்ன பயத்தலோ சால்பு’ என்றார் வள்ளுவர்.

ஆனால் இந்தியக் கல்வியோ ’மற்றவரை விஞ்சுவது’ எப்படி என்பதைத்தான் கல்வியூட்டலின் மூலமாக வலியுறுத்துகிறது. கூடிச் செய்வதை ’காப்பி அடித்தல்’ என்று பொருள்படுத்தித் தனிமனிதச் சிலுப்புகளுக்கே மரியாதையும், வாய்ப்பும் வழங்கப்படுகின்றன.

ஒரோவழி இந்தக் கல்விமுறைதான் இந்திய நாட்டில் சாதி மோகத்தை இன்னும் இறுகப் பிடித்து வைத்திருக்க உதவுகிறது எனலாம்.

இதனை மாற்றும் வகையாகக் கட்டாய இலவசக் கல்விச் சட்டம் இயற்றப்பட்டபோது, தனிமனிதத் தேர்வுகளே 8ஆம் வகுப்பு வரை வேண்டுவதில்லை என்பதை இந்நாடு கொண்டு வந்தது. இப்புரட்சிகர மாறுதல்கள் திராவிடக் கோட்பாட்டில் வகுத்துச் செயல்படுத்தப்படும். துவக்கத்தில் தௌிச்சர்களிடம் (Meritocracy proponents) இருந்து பலத்த எதிர்வினை வரும் என்பதை உணர்ந்தே திராவிடம் இதைக் கையிலெடுக்கிறது.

♦

## 18. வகுப்பறை மாற்றம்

வகுப்பறைகள், தனியர்கள் வரிசையாகக் குந்தும்படி இருக்கக்கூடாது. ஒரு வகுப்பிலுள்ள மாணவர்கள் 5 பேர் கூடிய குழுவாக அமர வேண்டும். ஒரு வகுப்பில் 5 அல்லது 6 குழுக்கள் எண்ணிக்கைக்குத் தக அமையும், ஒவ்வொரு குழுவிலும் அமையும் மாணவர்களைக் குலுக்கல் முறையில் தேர்வு செய்ய வேண்டும். இன, மொழி, பால் பேதங்களுக்கு அப்பாற்பட்டு குழு அமைவதால் இயற்கையாக நேயம் வளரும். எந்தவொரு பயிற்சியையும் குழு தமக்குள் கலந்துரையாடிக் கூட்டாகச் செய்யும். இதற்கான பயிற்சிகளை ஆசிரியர்கள் எடுத்துக்கொள்ள வேண்டும்.

♦

## 19. பாடம் புகட்டல் அல்லது கற்றல்

ஒவ்வொரு வகுப்பிலும் ஒவ்வொரு குழுக்களும் மாறிமாறி, ஆசிரியர்கள் பயிற்றுவிக்கும் பாகத்தை, ஆசிரியரைப் போல வகுப்பெடுக்கும்.

வாரத்தில் சில மணி நேரங்கள் மாணர்கள் தமக்குள் சுதந்திரமாக உரையாடிக் கொள்ள ஒதுக்கப்பட வேண்டும். திறந்த வெளியில், இயற்கைச் சூழலில், மரத்தடிகளில் உரையாடுவது நலம்.

**எழுத்துத் தேர்வுகள் :**

வினாத்தாட்களுக்கான விடைகளை ஒவ்வொரு குழுவும் தாமாக கலந்துரையாடி அளிப்பர். இதனால் ஆசிரியர்களுக்குத் தாள் திருத்தும் சுமை பெரிதாகக் குறையும். குழு பெறும் மதிப்பெண் குழு உறுப்பினர் யாவர்க்கும் ஒரே மதிப்பெண்ணாக வழங்கப்படும். விளையாட்டு, கலை, கைவினைகள் யாவும் குழு சார்ந்தே நடத்தப்பட்டு மதிப்பீடுகளும் வழங்கப்படும்.

12 வரை இதே பாணி தொடரும். குழு பெறும் மதிப்பெண்கள் அக்குழு உறுப்பினர்க்கு ஒரே மதிப்பெண் களாக வழங்கப்பட்டு அனைவரும் 12ஆம் வகுப்பை நிறைவு செய்வர்.

கல்லூரிச் சேர்க்கைகள் (Admission) மதிப்பெண் வரிசையில் மட்டும் அமையாது. எல்லா மதிப்பெண்கள் பெறுவோர்க்கும் வாய்ப்புகள் பிரித்து வழங்கப்படும். வகுப்புச் சேர்க்கை 50% க்குக் கீழ் பெறுவோர்க்கு 30% உம், 50% - 80% பெறுவோர்க்கு 30% உம், 80% க்கு மேல் பெறு வோர்க்கு 40% உம் என எல்லா கல்லூரிகளிலும் ஒரே விதமாக நடைபெறும். இருக்கைகளின் எண்ணிக்கைக்கு மேல் விண்ணப்பங்கள் பெறும் கல்லூரிகள் அந்தந்த மதிப்பெண் பிரிவுகளில், குறுக்கல் முறையில் தேர்வு செய்து சேர்த்துக் கொள்ளும்.

## 20. மானவர்களை மதிப்பீடு செய்தல்

ஒரே எழுத்துத் தேர்வில் மானவர்களைத் தனித்தனியாக எடை போடுவது முற்றிலும் மாற்றப்படும். ஒரு மூன்று மணிநேரத் தற்காலிக நிகழ்வு ஒரு மாணவரின் எதிர்காலத் திற்கான வாய்ப்புகளை முடிவுசெய்யும் கொடிய ஆயுதமாக தேர்வுகள் உருமாறி வருகின்றன.

1. பள்ளிகளில் கற்பிக்கப்படுவதைவிடக் கூடுதலாகச் சந்தைப் படிப்புகளை (Private Tution) மேவுவோர்க்கு ஆதரவாக அமைவது.

2. வளர் பருவத்திலேயே நெஞ்சில் பதை பதைப்பையும், அச்சத்தையும் வளர்த்து உளத்தியலை உடைசலாக்குவது.

3. தோல்வி என்றாலே உதவாக்கரை என்ற முத்திரையைக் குத்திச் சமுதாயத்தில் தலையைக் குனிவைத் தருவது.

4. ஒருசிலத் தனியர்களை மட்டும் தேவையின்றி ஓங்கிப்பிடித்துச் சமுதாயத்திலிருந்து அவர்களை விலகி நிற்கச் செய்வது.

5. உருப்போடலைத் தவிர வேறெந்த மானுடப் பண்புகளுக்கும் இடந்தராமல் தனிமனிதனை எந்திரமாக்குவது;

6. வேறெந்த வித்தகங்களுக்கும் மதிப்பீடு இல்லாமல் ஆற்றல்களைத் துச்சமாக்குவது.

போன்ற பல்வேறு தீவினைகளை இன்றைய எழுத்துத் தேர்வு முறை வளர்த்து வருகிறது. யாவற்றிற்கும் மேலாக மாணவர்களைச் சமுதாயக் கூட்டியக்கத்தின் ஓர் அங்கம் என்பதை உணரவிடாமல், தனி மனிதனைப் பிரித்து, தனியர் மட்டும் தளைத்தால் போதும் என்ற கேவலமான வாழ்வியலுக்கு மாந்தர்களை இந்தத் தேர்வு முறை ஆயத்தப்படுத்துகிறது.

பரம்பரை பரம்பரையாக (Ethnogically) எந்தெந்த இனங்கள் உடல்சார்ந்த செயல்பாடுகளில் முடியாமல்

இருக்கிறார்களோ அவர்களுக்குக் கூடுதல் வசதியாக அமைக் கப்படுவது தான் இந்நாள் எழுத்துத் தேர்வு முறையாகும். திராவிடக் கல்விக் கோட்பாடு வெறும் எழுத்துக்கு மட்டும் இல்லாமல் மனிதத்திற்கு எதிப்பீடுகள் தரும். இக்கோட்பாடு ஒரு வளர் பிள்ளையின் மொத்த உணர்வுகளுக்கும், தன்னிச்சையாக ஊறிவரும் ஆற்றல்களுக்கும் வாசல்படி அமைப்பதோடு நில்லாமல் அவற்றிற்கான பலன்களையும் மதிப்பீடாக வழங்கச் செய்யும்.

முதல் வகுப்பிலிருந்தே எல்லா மாணவர்களின் உடல் திறனுக்கு மதிப்பீடு வழங்கப்படும். ஓட்டம், துள்ளல், தாண்டல் போன்ற பயிற்சிகளில் மதிப்பீடு செய்யலாம். யார் முதலில் வருவது என்ற போட்டி கூடாது. 100 மீட்டரை எவ்வளவு நேரத்தில் கடக்கிறார்கள்; எத்தனை மீட்டர் நீளம் தாண்டுகிறார்கள் என்பதைப் பொருத்து மதிப்பீடு வழங்கப் படும். 20-25 நொடிகளில் தொலைவைக் கடப்பது, 15-20 நொடி, 10-15 நொடி, 10 நொடிக்குக் கீழ் என்று வகைப் படுத்தி மதிப்பீடு வழங்கப்படும். யார் முதலில், இரண்டாவது, மூன்றாவது வருகின்றனர் என்பதற்குப் பரிசு வழங்கலாகாது.

சிலம்பம், மல்லர்கம்பம், ஓகம் (யோகம்) போன்ற உடற்கலைகளுக்குப் பாராட்டுச் சான்று வழங்கப்படும். போட்டிகள் நடத்தப்படக்கூடாது. ஒருவர்க்குச் சிலம்பம் தெரியுமென்றால், சிலம்பம் தெரியாத மாணவர்கள் அவருக்குக் குறைந்தவர்கள் என்று எடை போடலாகாது. தெரிந்தவரைத் தெரிந்தவர் என்று உலகிற்கு அடையாளப் படுத்திக் காட்டுவதற்காகச் சான்று வழங்கப்படும். இசை, ஓவியம், நடனம், நடிப்பு போன்ற கவின் கலைகளுக்குச் சான்று வழங்கப்படும். எல்லோருக்கும் எல்லாமும் தெரிய வேண்டும் என வற்புறுத்தக் கூடாது.

5ஆம் வகுப்பு வரை எழுத்துத் தேர்வு என்ற மதிப் பெண் போட்டி நடத்தப்படக் கூடாது. மாறாக ஒரு மணி நேரம் எவ்வளவு எழுத முடிகிறது என்ற பயிற்சியைத் தரலாம்; ஒரு மணி நேரத்தில் எவ்வளவு பாடங்களை

நினைவு கூர முடிகிறது என்ற எழுத்துப் பயிற்சியை அளிக்கலாம்; வினா விடையாக அது இருக்க வேண்டுவ தில்லை. மாணவர்களைக் குழுக்களாகப் பிரிதது Quiz போன்ற வினாவிடை நிகழ்ச்சிகளை உற்சாகமாக நடத்தலாம்.

தனி ஆசிரியர் எவரும் மாணவர்களுக்கான மதிப்பீடு களைச் (Assessment) செய்யலாகாது.

எந்த ஒரு பொதுத் தேர்வும் எந்த வகுப்புகளுக்கும் (பள்ளி கல்லூரி உட்பட) நடத்தப்படத் தேவை இல்லை. யாவர்க்கும் கல்வி வழங்கப் போதுமான கட்டமைப்பு தமிழ்நாட்டில் ஏற்கனவே உருவாக்கப்பட்டுள்ளதால் ‘போட்டி’ என்பதன் தேவையே ‘கல்வியில்’ இனி இராது என்பதே திராவிடக் கல்வியின் தேர்ந்த கோட்பாடாக இருக்கும்.

வாய்ப்புகளைத் தேவையான அளவு உருவாக்கித் தருவதே அரசின் கடமையும் சமுதாயத்தின் பொறுப்பும் ஆகும். இதிலிருந்து வழுவி தேவையற்ற பிரிவினை மனப்பாங்கினை உருவாக்கும் போட்டி முறைகளை அரசுகள் மேற்கொள்வது தமது மக்கள் மீது சுமத்தும் ஒரு கொடும் போராகும். இந்த அசமப் போர் எல்லா விதத்தும் அசோகர் செய்தது போல நிறுத்தப்பட வேண்டும். அந்தந்த வயதில் எவரெவர் எந்த வகுப்பில் படிக்கலாமோ, அவரவர் அந்தந்த வகுப்பில் சேர்ந்து கொள்ளலாம். எந்தப் பள்ளியில் இடமிருக்கிறதோ அங்கு சேர்ந்துக் கொள்ளலாம். வேறு எந்த சான்றுகளும் தேவையில்லை. முந்தைய படிப்பு பற்றி உசாவ வும் வேண்டுவதில்லை. நன்னடத்தைச் சான்றும் கேட்கப்பட வேண்டுவதில்லை. ‘கேடானவர் எனப் பெயர் எடுத்தவர்க்கு ஏன் கல்வி?’ என்ற கேள்வி சமூகத்தில் எழக் கூடாது. அவர்களையும் ஆற்றுப்படுத்துவதுதான் கல்வியின் நோக்கம் என்பதே திராவிட இயல்.

கல்லூரிப் பாடங்களுக்கும் இது பொருந்துமா எனில் பொருந்தும் என்பதே திராவிடத் திராணி.

சுருக்கமாக எந்த வகுப்புகளுக்கும் தேர்வு என்ற போட்டிப் பித்து இனி நடைபெறாது. அவரவர் தம்மைச் சோதித்துக் கொள்ளும் பயிற்சிகள் மட்டுமே நடைபெறும். வெற்றி, தோல்வி என்ற முத்திரை எவர் மீதும் எக்காலத்தும் பதிக்கப்படக் கூடாது. வெற்றி முத்திரை பதிக்கப்பட்ட வர்க்கு மட்டும் வாய்ப்புகள் என்றும், 'தோல்வி முத்திரை பதிக்கப்படுபவர்கள் கைகழுவப்படுவார்கள் என்றும் தற்போதுள்ள வாழ்வியல் நடைமுறை ஒழிக்கப்படும். தோல்வியும் வெற்றியின் அடுத்த படிக்கல் என்ற மானுட நோக்கு மேலோங்க வேண்டும் என்பதே திராவிட விழைவு.

எந்தப் பயிற்சியும் தனிமனித ஆற்றலைப் போட்டி மனப்பான்மையில் வெளிப்படுத்துவதாக இருக்கக் கூடாது. விளையாட்டுகளுக்கும் இது பொருந்தும், எல்லாம் கூட்டு முயற்சியாகவே நடைபெறும். எழுத்துப் பயிற்சியும் கூட்டாகத்தான் இருக்கும். எந்த ஒரு பெயர் போன மருத்துவரும் கூட, தான் ஒருவராக, தமது திறமையால் ஓர் அறுவை மருத்துவம் கூடப் பார்க்க இயலாது என்பதே பட்டவர்த்தமான வாழ்வியல் மெய்மை.

விளையாட்டுகளிலும், விளையாட்டுப் போட்டி களிலும் தனிமனித ஆட்டம், தனி முதல்வருக்குத் தங்கம் பரிசளிப்பு போன்றவையும் கைவிடப்பட வேண்டும். டென்னிசு ஆட்டம் என்றால் 'டேவிசு கோப்பை' போன்று அணிகளுக்கான போட்டிகள்தாம் நடைபெறலாம். 'விம்பிள்டன்' போன்ற தனியர்களுக்கான போட்டிகள் கைவிடப்பட வேண்டும். சடுகுடு, கிளித்தட்டு, கைப்பந்து, கூடைப்பந்து, கால்பந்து, ஆக்கி, கோகோ போன்ற விளையாட்டுகள் கூட்டு முயற்சியை ஊட்டுவன. 100 மீட்டர் தனி ஓட்டம் கைவிடப்பட வேண்டும்; 100மீ. தொடர் ஓட்டமே ஒப்புரவானது. உயரத்தாண்டல், நீளத் தாண்டல், கேரம், செஸ் போன்ற எந்த விளையாட்டாக இருப்பினும் போட்டிகள் குறைந்தது நால்வர் கொண்ட அணிகளுக்கு இடையேதான் நடத்தப்பட வேண்டும்.

'போட்டி'தான் கல்வியை வணிகமயம் ஆக்குகிறது. 'போட்டி' என்ற பெயரில் 'வேறு யாரும் என்னை நிகர் ஆகக் கூடாது' என்ற சாதி உணர்வு வளர்க்கப்படுகிறது. 'போட்டி போட்டு முன்னேறு' என்று பிறரைப் பின்னுக்குத் தள்ளும் மனப்பாங்குள்ள 'தெளிச்சியரை' உருவாக்குவது தான் தேர்வுகளின் எச்சமிச்சம்.

♦

# 21. பள்ளி கல்லூரிகளில் புகட்டுமொழி

தமிழ், ஆங்கிலம் இரண்டும் கலந்த பாடமொழி கையாளப்படும்.

வரலாறு, புவியியல், வாழ்வியல், கணிதம் ஆகிய பிரிவுகள் மட்டுமே இருக்கும். தமிழக்கும் ஆங்கிலத்திற்கும் தனிப்பாட நூல்கள் இரா.

அனைத்துப் பாட நூல்களும் 70% தமிழ் மொழியிலும், 30% ஆங்லத்திலும் அமையும். தேர்வுகளும் இரு மொழி களிலும் கலந்து நடத்தப்படும். 70% தமிழ் வினாக்களும், 30% ஆங்கில வினாக்களும் இருக்கும். மதிப்பெண்கள் தமிழுக்கு 80/100 உம் ஆங்கிலத்திற்கு 20/100 உம் பிரிக்கப் படும்.

வேற்றுமொழிகள் படிப்போர்க்குத் தனிவாய்ப்பு வழங்கப்படும்.

பொறியியல், மருத்துவம் போன்ற படிப்புகளிலும் ஒவ்வொரு செமஸ்டரிலும் ஒரு பாடம் தமிழில் அமைய லாம். இனி ஆங்கிலம் தனியான பயிற்று மொழி, தமிழ் தனியான பயிற்று மொழி என்ற பிரிவினைப் பாகுபாடு தேவை இல்லை. தமிழ்நாட்டிலுள்ள எல்லா வகைப் பள்ளிகளிலும் 70% தமிழ், 30% ஆங்கிலம் எனக் கொண்டு வரப்படும். தேர்வுகளும் 70% தமிழிலும், 30% ஆங்கிலத் திலும் அமையும். ஆனால் 100% இல் 80% மதிப்பெண்கள் தமிழ்ப் பகுதிக்கும் 20% மட்டும் ஆங்கிலப் பகுதிக்கும் அமையும்.

கல்லூரிப் பாடங்களில் 50% தமிழும், 50% ஆங்கிலமும் என மாற்றப்படும். தேர்வுகளில் 60% தமிழ்ப் பகுதிக்கும் 40% ஆங்கிலப் பகுதிக்கும் வழங்கப்படும். தமிழ் இலக்கியப் படிப்பில் 10% ஆங்கிலமும், ஆங்கில இலக்கிய படிப்பில் 20% தமிழும் பாடமாக அமையும்.

தொழிற் படிப்புகளில் எத்தனை சதவீதம் தமிழில் இருக்கும் என்பதைத் தனி ஆய்வுக்குழு முடிவு செய்யும். தமிழ்த் தேர்வு பாகத்திற்குச் சற்று கூடுதல் மதிப்பெண்கள் வழங்கப்படும்.

வேற்று மொழிகள் பயில்வதற்குத் தனி ஆய்வுக்குழு தக்க முடிவுகளை எடுக்கும்.

♦

# 22. கல்வி நிறுவனங்களை நடத்துவதற்கு யாருக்குப் பொறுப்பு உண்டு?

சரித்திர ஏடுகளைத் திறப்பிப் பார்த்தால் எந்த நாட்டிலும் எந்த அரசும் கல்விக் கூடங்களை நிறுவியதாகச் சேதிகள் இல்லை. இந்திய நாட்டில் நாளந்தா, தட்சசீலா பல்கலைக் கூடங்களும் மன்னர்களால் உருவாக்கப்பட்ட தாகவோ, நடத்தப்பட்டதாகவோ விவரம் இல்லை. சோழர்களின் பரந்துபட்ட பல்லாயிரம் கல்வெட்டுகளிலும் கல்வி நிறுவனம் பற்றிய சேதிகளை வெளிக்காட்ட முடியவில்லை. தமிழ்நாட்டில் கல்வி இருந்தது; எவ்விதமான கல்விக் கூடங்கள் இருந்தன என்பதற்கு விளக்கம் காண முடியவில்லை. சங்கப்பலகை கல்வி யாளரைப் போற்றியது; மன்னர்கள் அணை கட்டினர்; நெற்களஞ்சியம் வைத்தனர்; படை வளர்த்தனர்; நிலம் ஈந்தனர்; மடம் செய்தனர் போன்ற பல்வேறு சரித்திரச் சேதிகள் இருப்பினும் கல்விச் சாலைகள் பற்றிய விவரங்கள் எடுக்கப்படக் கூடவில்லை.

பௌத்த சமணப் பள்ளிகள் கல்விச் சாலைகளாக இருந்தமையை அறிய முடிகிறது. இவை சமய நிறுவனங் களே அன்றி அரசு அமைப்புகள் அல்ல.

1800-களில் தொடங்கிக் கல்விக் கூடங்களைப் பற்றி அகழ்ந்து பார்த்தால் சில விவரங்கள் கிட்டுகின்றன. 1857-இல் இந்தியாவின் முதல் பல்கலைக் கழகங்கள் நிறுவப் பட்டன. சென்னை மருத்துவக் கல்லூரி 300 ஆண்டு பழமைத்து என்ற குறிப்பொன்று உண்டு: 1850-களுக்குப் பிறகு பல சான்றோர் (SC) ஊர்களில், சான்றோர்களே துவக்கப் பள்ளிகளைப் பல இடங்களில் நிருவியதை அறிய முடிகிறது. குறிப்பாக 1900க்குப் பிறகு நூற்றுக்கணக்கான பள்ளிகள் சான்றோர் கிருத்துவர்களால் நிருவப்பட்டன. இவை இன்னும் தொடர்ந்து செயல்படுவதையும் காண முடிகிறது.

நகர்ப்புறங்களில் ஆங்காங்கு மேல் நிலைப் பள்ளி களும், கல்லூரிகளும் துவக்கப்பட்டன. சென்னையிலுள்ள மாநிலக் கல்லூரி தவிர வேறெங்கும் அரசுக் கல்லூரி நிருவப் பட்டதாகத் தெரியவில்லை; நகராட்சிகளும், பஞ்சாயத்து போர்டுகளும் பள்ளிகளை நடத்திய விவரம் உள்ளது.

**ஆகவே நாடு சுரந்திரம் பெறும் வரைத் தமிழ்நாட்டில்**

1. தனியர்கள் பள்ளி நிருவி நடத்தினர்.
2. சான்றோர்கள் (SC) பள்ளிகளைச் சிறப்பாக நிருவி நடத்தினர்.
3. தல ஆட்சி நிர்வாகம்தான் கல்வியைக் கையாண்டது.
4. அரசு ஒரு சில கல்வி நிறுவனங்களை மட்டுமே நடத்தியது.
5. சமய நிறுவனங்கள் கல்வி நிறுவனங்களை நடத்துவதில் ஆர்வம் காட்டினர்.

தமிழ்நாட்டில் அரசின் கடமை கல்விக் கூடங்களை நேரடியாக நிர்வாகம் செய்வது என்ற எண்ணம் ஆளும் வர்க்கத்திடமும், பொதுமக்களிடமும், குறிப்பாகச் சமூக அக்கறை கொண்ட கல்வியாளரிடமும் ஆழப் பதிந்துள்ளது. 'பொதுக்கல்வி' என்பதும் 'சமச்சீர்மை' என்பதும் அரசுகள் நேரடியாக எடுத்துச் செய்ய வேண்டிய செயல்பாடுகள் என்ற கருத்தும் வலியுறுத்தப்படுகிறது.

'பொதுக்கல்வி' எனில், எந்த வகைக் கல்வி நிறுவன மாக இருப்பினும், அதில் எல்லா வகை மாணவரும் படிக்க வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும் என்பதாகும். அதுவும், பொருட்சுமை இல்லாமல் படிக்கும் வாய்ப்புகளை தேவையான எண்ணிக்கையில் வழங்கவேண்டும். இந்தச் சமூக நீதி 20% சான்றோர் ஆன்றோர்களையும் (SC-ST) 5% பிறப் பொருள் குன்றியவர்களையும் எந்தக் கட்டணமும் இன்றிப் படிக்க வைப்பதன் மூலம் நிறைவேறும்.

அரசுகள் தமது பங்கிற்கு உள்ளாட்சிகள் மூலம் நடத் தப்படும் அரசுக் கல்வி நிறுவனங்களில் 100% கட்டண மில்லா கல்வியைத் தொடர்ந்து வழங்கலாம். இது அரசின் சமூக நீதிக் கோட்பாட்டை நிறைவேற்றுவதாக அமையும்.

மருத்துவம் போன்ற சில படிப்புகளுக்குத் தவிர பொறியியல், கலை அறிவியல், கல்வியியல் படிப்பு களுக்குத் தேவையான கட்டமைப்புகள் தமிழ்நாட்டில் ஏற்கனவே உருவாக்கப்பட்டுள்ளன. இதில் தனியார் பங்கும் உள்ளது. இன்னும் சொல்லப்போனால், இப்போதிருக்கும் மொத்தக் கட்டமைப்பு வசதிகளைக் கொண்டு கூடுதலாக இன்னொரு மடங்கு மாணவர்களுக்கு இடம் அளிக்க முடியும்.

ஆகவே, மருத்துவம் தவிர்த்த பிற கல்விகளுக்குப் புதிய கல்லூரிகளைத் திறக்க, அடுத்த 20 ஆண்டுகளுக்காவது அரசு முதலீடு செய்யத் தேவை இராது. புதிய கல்வி நிறுவனங்களுக்குத் தேவை ஏற்படும்வரை, இருக்கும் கட்டமைப்புகளை நவீனமாக்கவும் விரிவாக்கம் செய்யவும் அரசு தமது நிதியைப் பயன்படுத்தலாம்.

மருத்துவக் கல்லூரிகளில் ஆண்டுச் சேர்க்கை 50000 ஆக உயர்த்தப்படும் வகையில், புதிய கல்லூரிகள் அரசுச் செலவில் உருவாக்கப்படலாம். அடுத்த ஐந்தாண்டுகளுக்குள் இந்த இலக்கை எட்டலாம். மருத்துவப் படிப்பைப் பரவலாக்கவும், படிப்பின் கட்டணத்தைக் குறைக்கவும், மருத்துவச் செலவுகளைக் குறைக்கவும் இது வழிவகுக்கும். கிராமப்புறங்களை நோக்கி மருத்துவக் கல்வியும், ’மருத்துவர்களும் ஏகுவதற்கும் இது ஏதுவாகும்.

அரசுகள் நேரடியாகப் பள்ளிகளையும் கல்லூரிகளை யும் நடத்துவதால் சில நன்மைகளோடு பல துன்மைகளும் உருவாகி உள்ளன.

1. ஒன்றிய அரசின் தலையீட்டால் மாநில அரசுகளின் சுயம் பறிபோகிறது; மாநிலங்கள் துச்சமாக்கப்படுகின்றன.

2. ஒன்றிய அரசின் தலையீட்டால் பன்முகப் பார்வைகள் இருண்டு போகின்றன.

3. ஒன்றிய அரசின் தலையீட்டால் ஒற்றைச் சித்தாத் தங்கள் நாடு முழுவதும் வலியத் திணிக்கப்படுகின்றன.

இதனால் நாட்டின் சுதந்திரத்திற்கும், அமைதிக்கும், கூட்டிசை வான வாழ்க்கைக்கும் பெரும் பங்கம் உருவாகி வருகிறது.

4. மாநில அரசுகள் கல்வி நிறுவனங்களை நேரடியாக நடத்துவதால், பஞ்சாயத்துகளின் ஆளுமை வளராமல் கருக்கப்பட்டுள்ளது. வேரடி மக்கள் ஆட்சி என்பது பஞ்சாயத்துகள் ஆளுமை பெறும்போதுதான், அறிவும் பொருளும் செறிந்ததாக மாறும்.

5. மாநில நிர்வாகம் பள்ளிகளையும், கல்லூரிகளையும் கையாளுவதால், நியமனங்களிலும், இடமாறுதல்களிலும் பதவி உயர்வுகளிலும் ஊழல் மலிந்து விட்டது.

6. ஆசிரியர்களின் கூட்டணி ஆதிக்கம், ஆசிரியர்கள் நலனை நாட்டுவதில் பட்டுமே நிலை கொண்டுள்ளது. ஒரு கல்வி நிறுவனத்தை ஊன்றி வளர்ப்பதற்கு நிலைத்த ஆசிரியர் களோ, நிர்வாகிகளோ இல்லாமல் போகின்றனர்.

7. உள்ளூர் ஆசிரியர்கள் இல்லாமல் போவதால் பள்ளிகள் மீது பாசமும் உரிமையும் காட்டும் எவரும் இல்லாமல் போகின்றனர்.

8. ஆசிரியர்களின் செயல்பாட்டைக் கண்காணிக்கவே தேவையின்றி நிர்வாகச் செலவுகள் ஏற்படுகின்றன.

9. பள்ளி வளர்ச்சியில் உள்ளூர் மக்கள் பங்களிப்பு குறைந்துகொண்டே போகிறது.

**பஞ்சாயத்துகள் கல்விக் கூடங்களை நடத்துவதன் நன்மைகள் :**

1. உள்ள பள்ளிகளின் கட்டமைப்புகள் அபார வளர்ச்சி பெறும்.

2. உள்ளூர் ஆசிரியர்கள் நியமனம் நடப்பதால், ஆசிரியர்கள் இடமாற்றம் நிகழ்வதற்கு இடமே இல்லை. ஆசிரியர்கள் பள்ளிக்கு வராமை என்பதே இராது,

3. ஆசிரியர்கள் மாணர்கள் சேர்க்கையில் நேரடியாக ஈடுபடுவர்.

4. அரசியல் மற்றும் அதிகாரிகளின் தினவானக் குறுக்கிடுகள் இரா.

5. உள்ளூர் மக்கள் உண்மையான சுதந்திர ஆளுமையை உணர்ந்து, தெம்பான குடிமக்களாக மாறுவர்.

அரசு தற்போது நடத்தி வரும் அனைத்துப் பள்ளி களையும், தொழிற்கல்வி உட்பட அனைத்துக் கல்லூரிகளை யும் அந்தந்தத் தல ஆட்சிகளிடம் ஒப்படைக்கும் பணி 2030-க்குள் முற்றுப் பெறலாம்.

♦

# 23. கட்டணமில்லா கல்வியும், கல்விக்குக் கட்டணமும்

ஒரு செல்வந்தரின் பணம் வறியவர்க்குச் செல்லலாம். ஆனால் வறியவரின் பணம் செல்வர் பொருட்டுக் கசியக் கூடாது. அரசின் நிதி செல்வரிடமிருந்து மட்டுமல்லாமல் வறியவரிடமிருந்தும் பெறும் வரிகளாலும் வளர்கிறது. பலவேறு மக்கள் தரும் உழைப்பின் பலனாகவும் அரசு நிதி ஈட்டுகிறது. *(உழவர் செய் தொழில், தொழிலாளி தரும் உழைப்பு போன்றவற்றில் விளையும் விளைச்சல், உற்பத்திப் பொருட்கள் மூலமாக வரும் நிதி)*

ஆகவே செல்வர், ஏழை என்ற பாகுபாடு பார்க்காமல், இல்லாதவர்க்கு வழங்கப்படும் நன்மையை அதாவது கட்டணமில்லா கல்வியை இருப்பவர்க்கு அரசு நீடிக்க லாகாது. யாவர்க்கும் இலவசக் கல்வி என்பது ஏழையின் வயிற்றில் அடித்துச் செல்வர்க்கு ஈவதை ஒக்கும்.

கல்விக்காக இயலாதவரிடம் பணம் கறப்பது எவ்வளவு பாவமோ, அதைவிட இருப்பவர்க்குக் கல்வியை இலவசமாக வழங்குவது மாபெரும் பாவமாகும்.

ஆகவே அரசுகளும், ஆட்சியாளர்களும், அரசிய லாளரும், சமூகச் சிந்தனையாளரும் பொதுக் கல்வியாளரும் 'யாவாக்கும் கட்டணமில்லா கல்வி' என்பதை வழி மொழிதல் கூடாது, அதே வேளை இயவாதவர்க்குக் கட்டணம் இல்லா கல்வி என்பதை அரசுக் கல்விக் கூடங்களில் *(உள்ளாட்சிக் கல்விக் சுடங்கள்)* வழங்கினால் மட்டும் போதாது. அரசின் கடமை அத்தோடு நின்றுவிடாது தனியாரும் கல்வி நிறுவனங்களை நடத்துவதால், அங்கும் சில சதவீதம் கட்டணம் இல்லா கல்வியைத் தனியார் தமது ஈட்டலில் இருந்து வழங்குவதையும் அரசு உறுதி செய்ய வேண்டும். இதைத்தான் முன் பக்கங்களில் ***20:5:75*** என்ற விகிதப்படி *(சான்றோர்-ஆன்றோர் (SC-ST)* ***20:*** *பிற வறியவர்*

*5: தனியார் விதிக்கும் கட்டனம் 75) சேர்க்கையை உறுதி செய்வதன் மூலம் அரசு தம் சமத்துவ நீதிக் கடமையை நிறைவு செய்யும்.*

*தனியார் விதிக்கும் கட்டணங்களை அரசு வரன்முறை செய்ய வேண்டுவதில்லை. 25%-ஐக் கட்டணமில்லாமல் நிறைவேற்றி விட்டு. 75% இருக்கைகளுக்கு அந்தந்தக் கல்வி நிறுவனங்கள் சந்தை நிலவரப்படி அவர்களே கட்டணங் களை விதித்தும் வசூலித்தும் கொள்வர்.*

*தற்போது நடைமுறையிலுள்ள 'கட்டண நிர்ணயக் குழு' செயல்பாடு நிறுத்தப்படலாம். அதே போன்று கட்டாய இலவசக் கல்விச் சட்டத்தின் கீழ் பள்ளிகளுக்கு அரசு வழங்கும் ஈவு நல்கைகளையும் நிறுத்தலாம்.*

*அரசும் சமூக நீதியை நிலை நாட்டும்; தனியரும் சமூக நீதிக்கானத் தமது பங்களிப்பை உறுதி செய்வர்; நாடு செழிக்கும்.*

♦

## 24. ‘சமச்சீர் கல்வி‘ப் பாடநூல்கள்

NCERT, SCERT, UGC போன்ற பாடநூல் செய்யும் நிறுவனங்கள் முனைவோர் முகமையாக (Educational Pundits) இருந்து மெல்ல மூளைச்சலவை செய்யும் சலூன் களாக (Birin-wash Saloon) மாறிப்போயுள்ளன. சீர்மை யையயும் ஓர்மையையும் பகுத்தறிய மறுக்கிற மேதாவித்தனம் தான் அதிகம் தெறிக்கிறது. ‘எல்லோரும் ஓர் நிரை’ என்பதை ‘எல்லோருக்கும் ஒரே மொழி; எல்லோருக்கும் ஒரே பாடம்’ என்று வரித்து வாசிக்கிறது கற்றோர் அவை, இது சமத்துவம் தராது; சலனமே கிளத்தும்.

இதுவரை இருந்த பாடநூல்களில் அல்லது NCERT, SCERT நூல்களில் கிடைக்காதவை:

1. சரித்திரம் எனில் எமது உள்ளூர்ச் சரித்திரம், எமது மாவட்டச் சரித்திரம், எமது மாநிலச் சரித்திரம் ஆகியன காணக் கிடைக்காது. பிரெஞ்சு தொழில் புரட்சி பற்றிப் புகட்டிவிட்டு, தமிழ்நாட்டில் தொழில் புரட்சி பற்றிய வாசிப்பே வராது, எகிப்து சரித்திரத்தி லிருந்து துவங்கி மொகலாய சரித்திரம் வரை சேர்த்து வாசிக்க வைத்துவிட்டு கீழடி சரித்திரங்களை மட்டும் விட்டு விடுகிறார்கள்.

2. நிலவியலில் கண்டங்களைக் காட்டிவிட்டு எமது பச்சை மலையைச் சேர்க்க மாட்டார்கள். அமேசான், நைல், தேம்ஸ் நதிகளைப் பற்றி மட்டும் பாடங்களில் சேர்த்துவிட்டு, எமது அடையாறு, கூவம், பொருநை களை விட்டுவிடுவார்கள். ஐந்திணை பற்றி இலக்கியம் தான் பேசுகிறதே அன்றி நிலவியல் (Geography) பேச வில்லை.

3. *மருத்துவத்திலும் ஆண்டர்சன் நூல்தான் உள்ளதே அன்றி, அதற்குப் பல நூற்றாண்டுகள் பழமைத்த 'குணபாடம்' (சித்த மருத்துவம்) பாடமாக வைக்கப் படுவதில்லை.*

இவ்வாறு கணக்கு பௌதீகம், இரசாயனம், இலக்கியம், சமயம், உளவியல், பொறியியல், வாணிகம் என்று எல்லா பாடத்திட்டங்களயும் விரித்துக்கொண்டே போகலாம்.

அடுத்து மாநிலத்தின் சமச்சீர் பாடநூல்கள் மூலம் மாநிலம் முழுவதும் திருக்குறளில் ஒரு சில அதிகாரங் களைத்தான் எல்லா மாணவர்களையும் படிக்க வைக்க முடியும், சரித்திரம், நிலவியல், அறிவியல் எதுவாகினும் மாநிலம் முழுவதும் ஒரு 20 அதிகாரங்களில் அடங்கிவிடும். இதனால் படிக்க வேண்டிய விரிவு கருங்குகிறது. எல்லோரும் எல்லாமும் படிக்க இயலாது. ஆனால் பலரை பலபடப் படிக்க வைக்க வேண்டும்.

இது பாடநூல் இயக்குவதைப் பரவலாக்குவது மூலமாக எளிதாக நிறைவேறும். ஒற்றைப் பொதுத் தேர்வுகளைக் குறிக்கொண்டே அனைத்து கல்விச் சாதனங் களும், முகவர்களும், முகமைகளும் வடிவமைக்கப்படு கின்றன; பயிற்சி அளிக்கப்படுகின்றன. ஏற்கனவே தேர்வு என்பது கிடையாது என்று இயங்கியல் ஆகும்போது ஒற்றைச் சாளரம் என்ற ஓர்மைப் பாடம் பொருளற்றதாகி விடும்.

பரவலாக்கப்படும் பன்முகப் பாடநூல் ஆக்கம் எப்படிச் செயல் வடிவம் பெறும் என்பதை விவரிக்கலாம்:

- தமிழ்நாட்டிலுள்ள 38 மாவட்டங்கள் எதிர்காலத்தில் 40 அல்லது 50 ஆகக்கூட உயரலாம். மூன்று அண்ணிய மாவட்டங்களைக் (Neighborhood Districts) கொண்டு கல்வி மண்டலங்கள் உருவாக்கப்பட வேண்டும். 3 முதல் 5 மாவட்டங்களை உள்ளடக்கிய பத்து மண்டலங்கள் உருவாக்கப்படலாம்.

- பள்ளிகளைப் பொருத்த அளவில் பத்துவகைப் பாடநூல் தொகுப்புகள் தமிழ்நாட்டில் விரியும். இன்னொரு வகையாகச் சொல்ல வேண்டுமானால் தமிழ்நாட்டுக் கூட்டு மொத்த மாணவர்கள் குறைந்தது 5 மடங்கு அதிகமான அறிவு வெளிச்சங்களைப் பெறுவர்.
- கல்லூரிகளைப் பொருத்த அளவில் தற்போது உள்ளபடியே ஒவ்வொரு பல்கலைக் கழகங்களும், தன்னாட்சிக் கல்லூரிகளும் பாடநூல்களை வகுத்துக் கொள்ளலாம்.
- அடுத்து, பாடநூல் தயாரிப்புகளைத் தனி ஒருவரிடமோ, தனியர்களைக் கொண்ட குழுவிடமோ ஒப்படைக்கக் கூடாது. பாடநூல் பரிந்துரைகள் (முதல் வகுப்பு அரிச்சுவடியிலிருந்து ஆய்வுப் படிப்பு வரை) வேரடி மக்கள் தொட்டு, யாவரிடமிருந்தும் பாடநூல் குழுவால் வரவேற்கப்படவேண்டும். அவற்றிலிருந்து தெரிவு செய்யும் பணியை மட்டும் பாடநூல் குழுக்கள் மேற்கொள்ளலாம். பல்கலைக் கழகங்களும் இதே நடைமுறையைக் கையாளலாம்.

பாடநூல்களின் உள்ளடக்கம் கீழ்வருமாறு எல்லைப் பகுப்புகளைக் கொண்டதாக அமைய வேண்டும்.

1. 20% அனைத்துலகம் சார்ந்தவை
2. 20% இந்திய நாடு தழுவியவை
3. 20% தமிழ்நாடு மாநிலம் தழுவியவை
4. 20% அந்தந்த மாவட்டங்கள் தழுவியவை
5. 20% அந்தந்த உள்ளூர்ச் செய்திகள் சார்ந்தவை,

♦

## 25. எதிர்கால இலக்குகள்

கல்வி உயர்வின் அளிப்பீடு, மொத்தச் சேர்க்கை விகிதத்தில் (Gross Enrolment Ratio GER) வெளிப்படும். அந்தந்த வகுப்புக்கு ஏற்ற வயதில் உள்ள மக்கள் (Population) எண்ணிக்கையில் எத்தனை பேர் அந்தத்த வகுப்பில் பயில்கிறார்கள். என்பது GER என்னும் சேர்க்கை விகிதம்

பள்ளிக் கல்வியிலும், உயர்கல்வியிலும் தமிழ்நாட்டு GER, தேசிய சராசரி விகிதத்தைவிட உயர்வாக இருக்கிறது என்பது போற்றப்பட வேண்டியது. எனினும் இவ்வளவில் போதும் என்ற சுணக்கம் கூடாது.

ஒரு சமுதாயத்தில் உடல், மன வளர்ச்சி தொடர்பாகப் படிக்க இயலாதவர் கண்டிப்பாக இருந்தே தீருவர். தமிழ் நாட்டில் பள்ளிக் கல்வியைப் பொருத்த அளவில் இதற்காக ஒரு 5% குறைக்கலாம்; ஆக 95% GER ஐ எட்டுவது முழுமையான நிறைவைக் காட்டும் என எடுத்துக் கொள்ள லாம்: அதே போன்று உயர்கல்வியில் 80%-ஐ எட்டுவது உலக அளவில் தமிழ்நாட்டை முன்னிலையில் நிறுத்தும்.

தற்போது தமிழ்நாட்டில் 12-ஆம் வகுப்பில் GER, சற்றொப்ப 75% ஆகவும், உயர்கல்வி சதவீதம் 52% ஆகவும் உள்ளன. பள்ளிக் கல்வியைப் பொருத்த அளவில், ஒவ்வொரு 5 ஆண்டுகளிலும் 3% கூடுதலாக எய்த இலக்கு விதிக்கணம் இதனால் அடுத்த 20 ஆண்டுகளில் முழுக் கல்வியை எய்தலாம். உயர் கல்வியைப் பொருந்த அளவில் ஒவ்வொரு 5 ஆண்டுகளிலும் 10% உயர்வு எய்த இலக்கு விதித்து, அடுத்த 15 ஆண்டுகளில் உச்சம் எய்தலாம்.

2023-இல் +2 படிப்போர் 9 லட்சம் என்றும் உயர் கல்வியில் படிப்போர் 6 லட்சம் என்றும் எடுத்துக் கொள்வோமானால் GER, வளர்ச்சி கீழ்வருமாறு அமையும்;

GER இலக்கு

*+2 எழுதுபவர்*

| ஆண்டு | சேர்க்கை விகிதம் | பயில்வோர் எண்ணிக்கை | கூட்ட வேண்டிய சதவிகிதம் | கூடுதல் மாணவர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| *2023* | *75*% | *9,00,000* | *5*% | *45,000* |
| *2028* | *80*% | *9,45,000* | *5*% | *47,250* or *47,000* |
| *2033* | *85*% | *9,92,000* | *5*% | *49,650* or *50,000* |
| *2038* | *90*% | *10,42,000* | *5*% | *52,100* or *52,000* |
| *2043* | *95*% | *10,94,000* or *11* லட்சம் | | |

உயர்கல்வி

| ஆண்டு | சேர்க்கை விகிதம் | பயில்வோர் எண்ணிக்கை | கூட்ட வேண்டிய சதவிகிதம் | கூடுதல் மாணவர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| *2023* | *52*% | *6,00,000* | *10*% | *60,000* |
| *2028* | *62*% | *6,60,000* | *10*% | *66,000* |
| *2033* | *72*% | *7,26,000* | *10*% | *72,600* |
| *2038* | *82*% | *7,98,600* or *8* லட்சம் | | |

இந்த மாணவர் சோக்கை வளர்ச்சியை எட்டுவதற்கு 2023-இல் இருக்கும் கட்டமைப்பு வசதிகளே போதுமானது. பள்ளிகளும், கல்லூரிகளும் மாநிலத்தில் பரவலாக எல்லா இடங்களிலும் அமைந்துள்ளன.

ஆகவே புதிய பள்ளிகளையும், கல்லூரிகளையும் உருவாக்கும் செலவுகளை மிச்சப்படுத்தி, இருக்கும் கல்வி நிறுவனங்களின் கட்டமைப்பை செம்மைப்படுத்தவும் செழுமைப்படுத்தவும் செலவிடலாம். இப்போது இருக்கும் நிறுவனங்களிலேயே மாணவர் சேர்க்கையை இரு மடங்காக்கும் வழிமுறைகள் நல்ல ஆதாயம் தரும்.

ஒவ்வோராண்டும் ஒவ்வொரு மாவட்டத்திலும், மாநில அளவிலும் தனித்தனிக் கல்விக் குழுக்கள் இந்தச் சேர்க்கை விகித GER வளர்ச்சியைக் கூர்மையாகக் கண் காணிப்பதுடன், உடனுக்குடன் தேவையான நடவடிக்கை களையும் எடுக்க வேண்டும்.

♦

# 26. அரசின் கொள்கைகள்

எந்தவிதப் பொருண்மையாக இருப்பினும், இந்தியாவின் தேசியக் கொள்கையாக இருந்தாலும் சரி, மாநிலக் கொள்கையாக இருந்தாலும் சரி, கொள்கைகளை ஒரு தனி மனிதரையோ அல்லது குழுவையோ கொண்டு உருவாக்கிப் பரிந்துரை பெறக்கூடாது.ஒன்றிய அரசு, ஒன்றியப் பட்டியலில் உள்ள பொருண்மைகள் மீது மட்டுமே 'கொள்கை' என்று வகுக்கலாம்.

'கொள்கை' என்று வரும்போது வேரடி மக்களின் (அடிமட்ட மக்கள் என அழைக்கப்படல் கூடாது) கருத்துக் களும் கேட்கப்பட்டே ஆக வேண்டும். ஆகவே 'கொள்கை' என்று வகுக்கப்பட வேண்டுமென்றால் முதலில் அனைத்து பஞ்சாயத்துகளின் கருத்துக்களைக் கேட்டுச் சேர்க்க வேண்டும். "ஒரு எடுகோளை முன்வைத்து இதன் மீது பஞ்சாயத்தின் கருத்து என்ன?" என்பது போன்ற ஒத்திசைவைக் கேட்கும் படியாக இது இருக்கக்கூடாது. கல்வியில் என்ன மாற்றங் களைக் கொண்டு வரலாம்? வேளாண்மை வளர என்ன செய்யலாம்? என்பது போன்ற கருத்துக்களைப் பஞ்சாயத்திடம் கோரிப் பெற வேண்டும்.

பஞ்சாயத்துச் சபை கூடித் தமது தீர்மானம் மூலமாகப் பரிந்துரைகளை அளிக்கும். வேறு குடிமக்கள் அமைப்பு களும் கருத்துக்களை அனுப்பலாம். மாநில அரசு ஒரு குழுவை அமைத்து, வந்த பரிந்துரைகளிலிருந்து பொருத்த மானவற்றைத் தெரிவு செய்து அரசுக்குத் தரும். அரசு சட்ட மன்றத்தில் வாதிட்டுத் தக்க தீர்மானம் இயற்றும். ஒன்றிய அரசு இதே நடைமுறையைக் கடைபிடிக்க பஞ்சாயத்துகளின் கருத்தைச் சேகரித்து மாநிலங்கள் திர்மானம் இயற்றி ஒன்றிய அரசுக்கு அனுப்பும்.

தேசிய மற்றும் மாநிலக் கொள்கை வேரடி மக்களிட மிருந்து உருவெடுக்க வேண்டும். ஆளுங்கட்சிகளின் அலங்காரப் பதுமையாக வடிவமைக்கப்படலாகாது.

## 27. திராவிட இயல்

ஆரியத்திலிருந்து திராவிடத்தை, வேறுபடுத்திக் காட்டுவது பிராமணிய மறுப்புக் கொள்கை என்பது உரத்து உரைக்கப்பட வேண்டும்.

திராவிட இயல்பில் பிராமணர்கள் அல்லது பார்ப்பனர் களுக்கு வாழ்வுரிமை என்பது யாவர்க்கும் இருப்பது போலவே இருக்கும். ஆனால் ஆளும் ஆட்சிகளும், அரசியலும் பிராமணத் தலைமைகளையோ, பிராமணச் சடங்கு களையோ, பிராமண மரபுகளையோ, பிராமணப் புராண, இதிகாச இச்சகங்களையோ, பிராமணச் சமயச் தந்திரங் களையோ கிஞ்சித்தும் செவிமடுக்கா; ஏற்கா.

சான்றோர்க்கு (SC) இருக்கும் வரையறை இலக்கணத்தில் இவை தலையாயவையாக நூறு ஆண்டுகளுக்கு முன்பாகவே நிருவப்பட்டுள்ளன என்பதைத் திராவிடம் உணர்ந்து சான்றோர்களது (SC) நிலைப்பாட்டை மதிக்கிறது.

♦

# ANNEXTURES

## ANNEXTURE - I

**A Delegation consisting of R.Christodas Gandhi IAS (Rtd), Fr.Kumar SJ, Director, TN – Social –Watch, Prof.Aranga Mallika, Rajendran (Rtd), Regional Manager, Canara Bank and Ms.Rajeshwari , Research Assistant in TN – Social – Watch called on Justice.Murugesan and Mrs. Aruna Rathinam, Chair person and member respectively of the State Education Policy Committee on 15.05.2023 at Anna University.**

The essence of the Two –hour dialogue between the State Education Policy committee on 15.05.2023 at Anna University and the Saandror representatives.

1) **"Education should be shifted from the concurrent list back to the state list."** The committee queried about states losing flow of funds from GOI to the states. It was asserted by Saandror that budget concerns are negligible. Anyhow GOI does not undertake funding for any state formulated schemes. Centrally shared schemes (CSS) is a federal trick to force GOI conceptions on the states for federal breast – beating States will no way suffer if CSS is totally stopped. CSS also are gradually gobbling up nearly 60% state budgets for scheme conceived by GOI without state consultations. CSS brow – beats the states and are a looming threat like invasive weeds of drying up state funds and of trimming state's autonomous ideals. The committee expressed its willingness to recommend this proposition to the state government.

2) **"All central regulatory powers and regulatory bodies should go."** Committee wondered if GOI is not in the right of exercising its powers mandated under the list.

Saandrors were of the firm belief that concurrent list does not give any power to the GOI to boss over the states. Saandrors gained a feeling that the committee may ponder over this proposition in more depth.

**3) "Preparation of curriculum and texts should be broad spread and dispersed and not left to singular expert groups of experts or bodies like SCERT/ NCERT". The committee seemed to have grasped the logic for diversity in preparation of syllabus materials.**

4) **"The states may not have the powers to drop the ubiquitous post of governor which will require constitutional amendment. However as the universities are set up under state acts, a Dravidian model of education should bring amendments to its acts to shed the posts of chancellor which a creation of the colonial rule to preserve alien power over the universities."** The committee gave a keen hearing to this drastic recommendation. Saandrors did not get the feeling that though the committee gave a unhindered hearing, the members will recommend this proposition unequivocally.

5) **"The committee should devote exclusive chapters on Saandrors and Aandrors (SC/STs)."** The committee conceded to this recommendation.

**6) "Saandrors and Aandrors should above all be acknowledged as knowledge people and knowledge seeking people . TN Saandrors and Aandrors are high performers. TN SC's GER in higher education (50% ) far exceeds the general GER of the country which stands at a poor 29%. Therefore policy recommendation should germinate for further achievements of Saandrors and not from the point of view of filling gaps.**"

The committee was quite keen to this assertion and wondered why even learned experts have not projected this view point till now.

**7) Saandror's main pleas for Saandrors are:**

a) There need be no exclusive component for Saandrors (SCs) in school concepts. This is in view of Saandror's ability to access school education and achieve well. This is evidenced in the number of enrolment as well as in Gross Enrolment Ratio of Saandrors.

b) At the same time extensive exclusive attention needs to be given to them in higher education.

c) As for as Aandrors (STs) are concerned very focussed and micro level policy direction as well as implementation methodology are sine – qua – non from pre school stage to school completion.

d) Raising the GER (Gross Enrolment Ratio) of Saandrors and Aandrors as a stand alone policy push should be adopted. Erstwhile approaches of seeking parity with others performance should yield place to a surpassing stand alone drive. Elevation of GER of Saandrors should be planned in such a way that they do not merely achieve general GER of the state but go past the best in the globe.

e) Appreciating the historical fact that Saandrors have been fore runners in the establishment of educational institutions in Thamilnadu the state government should come out with the policy of funding Saandrors for setting up new instituitions, expanding existing ones, taking over running institutions and switching over government run institutions (both school and colleges) to Saandrors.

f) This should be complemented with providing teaching aid to a minimum of 50 institutions run by Saandrors every year.

g) For Saandrors and Aandrors 100% elevation policy should be put in place in lieu of reservation policy in the matter of admission at all levels.

The committee gave a solid hearing to these exclusive approaches for Saandrors and wondered why not.

Chennai
19.05.2023

**R. Christodas Gandhi IAS (Rtd)**
Former Additional Chief Secretary
rcg1952@gmail.com
9444045215

♦

## ANNEXTURE - I I
## பின்னிணைப்பு - 2

**இரா.கிருத்துதாசு காந்தி இ.ஆ.ப,(ஓய்வு)** *26.04.2022*
**சென்னை**

---

### தமிழ்நாடு கல்விக் கொள்கை வகுப்புக் குழுவிற்கு..

*வாழ்த்துகள்.*

*குழுவின் ஆய்விற்கு எமது பரிந்துரைகளை அனுப்பி உள்ளோம்.*

I. **தலையாயதாகக் 'கல்வி பொருண்மை' மீண்டும் மாநிலப் பட்டியலில் கொண்டு வரப்படல் வேண்டும்.** *இணைப்பட்டியலில்* (Concurrent list) *கொண்டு வரப்பட்ட பின்னர் ஒன்றிய அரசின் ஆதிக்கமும் ஆக்கிரமிப்பும் கூடிவிட்டது.*

அ. *ஒன்றியம் " தேசியக் கல்விக் கொள்கை"என்பதைத் தனியே வகுக்கலாகாது.*

ஆ. *ஒன்றிய அரசின் பங்களிப்பு கல்விக்காகத் தனியே மாநிலங்களுக்கு நிதியைப் பகிர்ந்தளிப்பதோடு நிற்க வேண்டும்.*

இ. *அனைத்து ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டு நிறுவனங்களும்* (AICTE, IMC, AIC for Teacher Education CBSE Regulatory Board *போன்றவை)களையப்பட வேண்டும். அந்தந்த பல்கலைக் கழகங்களையும், மாநில அரசுகளையும் தாண்டி பிற கட்டுப்பாட்டு நிறுவனங்கள் இருத்தல் ஆகாது.*

ஈ. *ஒன்றிய அரசு, பள்ளிக் கூடங்களை நேரடியாக நடத்தக்கூடாது.* (Kendra Vidyalaya, Navodhaya *போன்றவை). தேவைப்படி மாநில அரசுகளே ஒன்றிய அரசின் நிதி உதவியுடன் இவற்றை நடத்தலாம்.*

உ. ஒன்றியப் பட்டியலில் (Union list) உயர்கல்வி வரல் ஆகாது. நடுவண் பல்கலைக் கழகங்கள் போன்ற சில தேர்ந்தெடுத்த பொருண்மைகள் மட்டும் கூட்டுப் பொறுப்பாக இணைப்பட்டியலில் சேர்க்கப்படலாம். கல்வி ஒன்றியப் பட்டியலிலோ, இணைப் பட்டிய லிலோ இருக்கக் கூடாது என்பதன் விளைவுகளாகக் கொண்டு வர வேண்டிய மாற்றங்களில் சில:

க). CBSE பள்ளிகளை அந்தந்த மாநிலங்களே ஏற்று நடத்த வேண்டும். CBSE நிர்வாகம் மாநில அங்கத் தினரைக் கொண்டு அமைக்கப்பட வேண்டும்.

ச). NCERT போன்றவை பரிந்துரை நிறுவனங்களாக மட்டுமே இருக்க வேண்டுமே அன்றி, கட்டுப்பாட்டு நிறுவனமாக (Regulatory Bodies) இருத்தலாகாது. தேசிய அளவிற்கு ஒரே ஒரு நிறுவனம் என்பதும் கூடாது. ஆறு அல்லது எட்டு மண்டலங்களில் அந்தந்த மாநில உறுப்பினர்களைக் கொண்டு இவை அமைக் கப்பட வேண்டும். மாநிலங்களும் ஒன்றியமும் நிதிப்பங்களிப்பு செய்யும். மாநில உறுப்பினர்கள் சுழற்சி முறையில் தலைவர் பொறுப்பை வகிக்கலாம். ஒன்றிய அரசு உறுப்பினராக மட்டும் இருக்கலாம். தலைவர் பதவிக்கு நிற்கலாகாது.

ட). பல்கலைக்கழக வேந்தர் (Chancellor) ஆக ஆளுநர் இருப்பதை மாற்ற வேண்டும். ஆளுநர்களுக்கோ, ஒன்றிய அரசுக்கோ பல்கலைக்கழக நிர்வாகத்தில் பங்கு இருக்கலாகாது.

த). AICTE, MCI போன்ற ஒன்றியக் கட்டுப்பாட்டு நிறுவனங்கள் ஒழிக்கப்பட வேண்டும். மாறாக நாட்டில் 20-30 பல்கலைக் கழகங்கள் தமக்குள் ஒரு கட்டுப்பாட்டு அமைப்பை உருவாக்கிக் கொள்ள லாம். அந்தந்தப் பல்கலைக் கழக உறுப்பினர்கள், மாநில அரசு உறுப்பினர்களைக் கொண்டு இவை கட்ட மைக்கப் படலாம். பாடநூல் முறைகள் (Syllabus),

தேர்வு முறைகள் பிற கற்கை நடைமுறைகள் போன்றவற்றை ஒவ்வொரு அமைப்பும் தனித்தனியே முடிவு செய்து கொள்ளலாம். கல்வியில் பரவலும், பன்முகத் தன்மையும், உள்ளூர் பங்கேற்பும் இதனால் உறுதி செய்யப்படும்.

ப). நடுவண் பல்கலைக் கழகங்கள் (Central Universities) மாநிலத்திற்கு ஒன்றாக அமையலாம். ஒன்றியமும் அந்தந்த மாநிலமும் 50% நிதிப் பங்களிப்பையும், நிர்வாகப் பொறுப்பையும் பகிர்ந்து கொள்ளலாம். மாநில உறுப்பினர்களே இப்பல்கலைக் கழகத் தலைவராக வரலாம்.

ற). ஒரே தேசியக் கல்விக் கொள்கை என்பது கூடாது. அந்தந்த மண்டலங்கள் தமக்குள் ஒரு தேசியக் கல்விக் கொள்கையைப் பத்தாண்டுகளுக்கு ஒரு முறை வகுத்துக் கொள்ளலாம். மாநிலங்கள் தத்தமது கல்விக் கொள்கையையும், பத்தாண்டுகளுக்கு ஒருமுறை வகுத்துக் கொள்ளலாம்.

II. **நுழைவுத் தேர்வுகளும், சேர்க்கைத் தகுதித் தேர்வுகளும் அறவே நிறுத்தப்பட வேண்டும்.**

அடுத்த வகுப்பிற்கு முன்னேறுவதற்கான தகுதி முந்தைய வகுப்புத் தேர்ச்சியில் முடிவு செய்யப் படுகிறது. தேர்ச்சி பெறுவதற்கான குறும மதிப்பெண் அறுதி செய்யப் பட்ட பின் அதற்கு மேலான எவ்வளவு மதிப்பெண் பெறுபவர்களும் அடுத்த வகுப்பிற்கு முன்னேறத் தகுதி படைத்தவர்களே.

இன்றைய சூழலில் கல்லூரிப் பட்டப்படிப்புக்கு (BE உட்பட) விண்ணப்பிக்கும் யாவர்க்கும் வாய்ப்பு அளிக்கக் கூடிய அளவில் இடங்கள் உள்ளன. (குறிப்பாகத் தமிழ்நாடு போன்ற மாநிலங்களில்) விண்ணப்பங்களுக்கு மேலான எண்ணிக்கையில் இடங்கள் இருக்கும் போது நுழைவுத் தேர்வுக்கான தேவையே எழுவதில்லை.

அந்தந்த சமூகப் பிரிவுகளுக்கான விகிதங்கள் (சான்றோர் (SC), ஆன்றோர் (ST), பிற்பட்டோர் (BC), பெண்கள், மாற்றுத் திறனாளிகள் போன்ற பிரிவுகள்) முடிவு செய்யப்பட்ட பின்னர், அந்த எண்ணிக்கையில் முந்தைய வகுப்பில் பெற்ற மதிப்பெண்கள் அடிப்படையில் சேர்க்கை முடிவு செய்யப்படலாம்.

அனைத்திந்தியத் தேர்வுகளுக்கான ஒரே நுழைவுத் தேர்வு என்பது எந்தப் படிப்பிற்கும் கூடாது. அந்தந்த மாநிலம் சார்ந்தவர்களுக்கான இடங்கள் முடிவு செய்யப்பட்ட பின்னர் மீதியுள்ள இடங்கள் முன்சொல்லப்பட்ட மண்டலங்களிலுள்ள விண்ணப்பங்களுக்கு நீடிக்கப்படலாம். ஒரு சில சதவீதம் மண்டலம் கடந்த மாநிலங்களுக்கும் வெளிநாட்டவர்க்கும் நீடிக்கப்படலாம். ஆகவே மண்டல அளவில் உயர் கல்விக்கான சேர்க்கை முறைகள் முடிவு செய்யப்படலாம்.

**'ஒரே நாடு; ஒரே தேர்வு' என்பதோ,'ஒரே நாடு; ஒரே படிப்பு'** என்பதோ சர்வாதிகாரப் போக்குகளுக்கும், ஒரு சிலரது ஆதிக்கத்திற்கும், பாகுபாடுகளுக்கும் வழிவகுக்கும்.

### III. புதிய அணுகுமுறைகள்:

ய). பாடநூல் ஆக்கம். (Syllabus)

'ஒரே நாடு; ஒரே பாட நூல்' என்பது எப்படி கல்வி விரிவாக்கத்தையும், பன்முகப்பார்வைகளையும் முடக்குமோ அதே போன்றுதான் 'ஒரே மாநிலம்; ஒரே பாட நூல்' என்பதும் செய்யும்.

சமச்சீர்மை என்பதை ஒரே பாடத்தை எல்லோரும் படிக்க வைப்பதில் மட்டும் காண முடியாது. எந்த வகையானக் கல்விக் கூடமாக இருந்தாலும் சரி, எந்த வகையான பாட நூல்களாக இருந்தாலும் சரி, எவ்வளவு கட்டணம் இருந்தாலும் சரி, யாவற்றிலும் எல்லாவகைச் சமூகத்தினரும் ஒருங்குகூடிப் பயிலும் வாய்ப்பளிப்பதே சமச்சீர்மை, பல்வேறு சமூகப் பிரிவுகளும், மூவகைப் பாலர்களும், மாற்றுத் திறனாளிகளும் சேர்ந்து பயிலும் வாய்ப்பளிக்கப்

பட வேண்டும். பணம் உள்ளவர் செலவு செய்யலாம். பணம் இல்லாதவரும் செலவில்லாமல் பயில அந்தந்த நிறுவனங்களும் அரசும் பொறுப்பேற்க வேண்டும். இதுவே சமச் சீர்மையை முழுமையாக்கும்.

திருக்குறளையும், அருட்பாவையும், அம்பேத்கரையும் பாடநூலில் சேர்க்கிறோம், எனில் மாநிலம் முழுதும் உள்ள இலட்சக் கணக்கான மாணவர்கள் ஒரே அதிகாரம் அல்லது பாடலை மட்டுமே பயில்வார்கள். மாறாகத் தமிழகத்தை 12 மண்டலங்களாகப் பிரித்து 1 முதல் 12 வகுப்பு வரை தனித்தனி பாடநூல்களை வகுப்பது கல்வி விரிவாக்கத்தைக் கொண்டு வரும். உள்ளூர் செய்திகளையும் புகுத்துவதற்கு ஏதுவாகும். தற்போதுள்ள நடைமுறையில் உலகச் சரித்திரம் ஆனாலும் சரி, தேசியச் சரித்திரம் ஆனாலும் சரி, மாநிலச் சரித்திரம் ஆனாலும் சரி, அமெரிக்க பிரெஞ்சுப் புரட்சி களைப் படிப்பதும், முகலாயர்களைப் பற்றிப் படிப்பதும், ஆற்காடு நவாபுகளைப் பற்றிப் படிப்பதும் தான் சரித்திரம் என்றாகி விட்டது. உலகச் சரித்திரத்தில் இந்தியா இல்லை என்பது போலவும், இந்தியச் சரித்திரத்தில் தமிழ்நாடு இல்லை என்பது போலவும், தமிழ்நாட்டுச் சரித்திரத்தில் இராமநாதபுரத்திற்கும், தேனிக்கும் பங்கில்லை என்பது போலவும் மாணவர்களுக்குப் புரிதல் புகுத்தப் படுகிறது.

உள்ளூர் அறிவுகளும், காட்சிகளும் தலைப்பெய்த வேண்டும். உள்ளூர் புவியியல்,உள்ளூர் சரித்திரம், உள்ளூர் இலக்கியம், உள்ளூர் கலைகள், உள்ளூர் அறிவியல் கண்டு பிடிப்புகள், உள்ளூர் நிர்வாகம், உள்ளூர் அரசியல், உள்ளூர் இயற்கைச் சூழல், தட்ப வெப்பம், உள்ளூர் வேளாண்மை, உள்ளூர் தொழில்,உள்ளூர் மக்கள்,உள்ளூர் மொழி இவையும் பாடநூலில் சேர்ப்பதற்கு வழிவகுக்கப்பட வேண்டும். இதுவே யாவர்க்கும் சுயமதிப்பை நிலை நிறுத்தும்.

எந்த வகையான பாடமாக (Subject) இருந்தாலும் கீழ்வரும் நடைமுறையைக் கையாளலாம்.

1). உள்ளூர் பாடங்கள் -உள்ளூர் எழுத்தாளரது படைப் புகள், சரித்திரம், ஏரி, குளம், குட்டை, வானியல், சுற்றுச் சூழல் (Physics and Chemistry) பஞ்சாயத்து நிர்வாகம், திருவிழாக்கள், பழமைச் சின்னங்கள் போன்ற இவற்றை அந்தந்த மண்டலப் பாடநூல் குழுக்களே உருவாக்கலாம்.

2). தமிழ் மாநிலம் தழுவியவை - இவற்றையும் மண்டலப் பாடநூல் குழுக்களே உருவாக்கலாம்.

3). நாடு தழுவியவை-மாநிலப் பாடநூல் குழுக்கள் பல்வேறு தலைப்புகளில் உருவாக்கித் தரலாம். தேவையான அளவு மண்டலங்கள் இவற்றைப் பயன் படுத்திக் கொள்ளும்.

4). உலகம் தழுவியவை - மாநிலம் தழுவியதைப் போன்றே ஒரு பெரும் பட்டியலை மாநிலக் குழு உருவாக்கித் தரலாம். அதிலிருந்து தேவையான அளவு மண்டலக் குழுக்கள் தேர்வு செய்து கொள்ளலாம்.

இவை முறையே 10:30:30:30 உள்ளூர், மாநிலம்,நாடு, உலகம்என்ற விகிதத்தில் இருக்கலாம்.

இறுதித் தேர்வுகளும் மண்டல அளவிலேயே நடத்தப் படலாம்.

**ர). கல்வி நிறுவனங்கள்**

'அனைவருக்கும் இலவசக் கல்வி'என்பதையும், 'அனைவருக்கும் பொதுக் கல்வி (அரசு நிறுவனம் தரும் கல்வி)', என்பதையோ உலகின் எந்த நாடுகளிலும் நிறை வேற்றுவது இயலாது. வெகு சில பெரும் வருவாய் ஈட்டும் சிறு சிறு நாடுகளால் இதைச் செய்ய முடிகிறது. நார்வே போன்ற நாடுகள். இந்நாடுகளில் மக்கள் தொகை மிகக் குறைவு. உபரி வருவாய் பெருஞ் செல்வமாகக் குவிந்துள்ளது. இதே சூழலைக் கொண்டுள்ள வளைகுடா நாடுகளில்கூட இலவசக் கல்வியும், அரசுக் கல்வியும் அளிக்கப்படுகிறதா என்பது தெரியவில்லை.

இந்தியாவின் ஒன்றிய அரசும் சரி, மாநில அரசுகளும் சரி, யாவும் பற்றாக்குறை நிதி நிலையிலும் இலட்சக் கணக் கான கோடி ரூபாய் கடனிலும் தான் இருக்கின்றன. இவற் றால் தேவையான அரசுக் கல்வி நிறுவனங்களை உருவாக்க வும் முடியாது; இலவசக் கல்வியை யாவர்க்கும் வழங்கவும் முடியாது.

இந்தியாவில் பணம் தேவையான அளவு உள்ளோரும் உள்ளனர்; கல்விக்காகச் செலவழிக்க முடியாதவர்களும் உள்ளனர். பணம் உள்ளவர்க்கு அரசுச் செலவில் இலவசக் கல்வியை அளிப்பது என்பது, பணம் இல்லாதவரைக் கல்விக் கட்டணம் செலுத்த வைப்பதை விடக் கொடுமை யானது. ஏனெனில் அரசு நிதி என்பது எளியோராலும் வழங்கப்படும் வரிகளிலிருந்தும் திரளுகிறது. இப்படிச் செய்வது வறியோரி டமிருந்து பணத்தைப் பறித்துச் செல்வர்க்கு ஈவதற்குச் சமானமாகும்.

தமிழ்நாட்டில் தனியார் முதலீடுகள் பெருமளவு கல்வி நிறுவனங்களில் செய்யப்பட்டுள்ளது. மொத்த சேர்க்கை விகித (GER-Gross Enrolement Ratio) வளர்ச்சிக்கு உறுதுணை யாக இருந்து வருகிறது. ஆனால் இங்கு பணம் இல்லாதவர் படிக்க இயலாது என்ற சூழல் உருவாகி உள்ளது. இதை மாற்ற வேண்டும். அதற்காகக் கீழ்வரும் நடைமுறைகளைக் கையாளலாம்.

1. அரசுப் பள்ளி / கல்லூரிகளில் என்ன கட்டணம் விதிக்கப்படுகிறதோ அதையே அரசு உதவி பெறும் பள்ளி / கல்லூரிகளுக்கும் நீடிக்கலாம்.

2. அரசு உதவி பெறும் பள்ளி / கல்லூரிகளில் சேர்க்கை ஒரு வருமான வரம்பிற்கு உட்பட்ட மாணவர்களுக்கே வழங்கப்பட வேண்டும். இதை எல்லாச் சமூகப் பிரிவினர்க் கும் (இதர பிரிவினர் உட்பட) நீடிக்கலாம். 20% இருப் பிடங்கள் மட்டும் எல்லாப் பிரிவிலும் வருமான வரம் பில்லாமல் வழங்கலாம்.

3. அவ்வாறு வருமான வரம்பில்லாதவர்க்குக் கட்டணத்தை அந்தந்த கல்வி நிறுவனங்களே முடிவு செய்து கொள்ளலாம்.

4. சுயநிதிப் பள்ளி/கல்லூரிகளில் வருமான வரம்பிற்குட் பட்ட 20% ஆன்றோர் (SC), சான்றோர் (ST), மற்றும்10% பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் ஆகியோருக்கு இலவசமாகக் கல்வி வழங்கப் பட வேண்டும், எந்தவிதக் கட்டணமுமின்றி. மீதி உள்ள இடங்களுக்கானக் கட்டணத்தை அந்தந்தப் பள்ளி/கல்லூரி களே முடிவு செய்து கொள்ளலாம். அரசு கட்டுப்படுத்த வேண்டுவதில்லை.

இந்நடைமுறை சமச்சீர்மையைக் கொண்டு வருவ தோடு அரசுக்குப் பொருள் சுமையைக் குறைக்கும். அதே வேளை ஒட்டுமொத்தமான கல்வி வாய்ப்பு வளர்ச்சி தொடர்ந்து நடைபெறும்.

## IV. தேர்வு நடைமுறை

எந்த நிலையிலும் தனியரது தகுதியைச் சோதிக்கும் தேர்வுமுறை கூடாது. தனியர்க்குத் தரம் பிரித்தல் முறையும் ஆகாது.

கூட்டுத் தேர்வு நடைமுறை கொண்டுவரப்பட வேண்டும். ஒவ்வொரு வகுப்பிலுள்ள மாணவர்களையும் (40 உச்ச வரம்பு) 5 பேர் கொண்ட அணிகளாகப் (உச்சமாக 8) பிரிக்க வேண்டும். இந்த ஐவரும் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்பட வேண்டும். எந்த விதமான தேர்வுகளாக இருந் தாலும் சரி, பயிற்சிகளாக (Tasks) இருந்தாலும் சரி, இந்த ஐவரும் கூட்டாக இருந்தே செய்வர். குழு பெறும் மதிப்பீடுகள் ஐவருக்கும் ஒரே முகமாகச் சேரும். வகுப்பில் உச்சமாக எட்டு வகையான மதிப்பீடுகளுக்கு மேல் இராது. எந்தக் குழுவும் தோல்வி அடையாது.

**இதனால் விளையும் நன்மைகளும் மாற்றங்களும்:**

1. இந்திய நாட்டில் இன்றியமையாது தேவைப்படும் சமூக

நல்லிணக்கம் ஊட்டி வளர்க்கப்படும்.

2. மக்களிடையே சகோதரத்துவம் ஊன்றித் தளைக்கும்.
3. தனிநபர் அகந்தைகளும், பாகுபாடுகளும் மறையும்.
4. தேர்வு தோற்றுவிக்கும் அச்சங்கள் மறையும்.
5. தேர்வில் தற்போது ஊடுருவும் பல்வேறு புரட்டுகள் நடைபெறா.

## V. தல ஆட்சிகளிடம் (Local Bodies), கல்வி.

வளர்ந்த நாடுகள் எனச் சொல்லப்படும் நாடுகளில் எல்லாம் கல்வி தல ஆட்சிகள் மூலமாகவே தரப்படுகிறது. இந்தியாவிலும் தமிழ்நாட்டிலும் 1950கள் வரை பஞ்சாயத்துகளே பள்ளிகளை நடத்தின. பின்னரே அரசுப் பள்ளிகளாக, அவை மாற்றப்பட்டன. இன்னும் பள்ளிகளின் கட்டிடப் பராமரிப்பு போன்றவை பஞ்சாயத்துகளிடம் தான் உள்ளன. அனைத்து நகராட்சிகளும்/மாநகராட்சிகளும் இன்றும் பள்ளிகளை நடத்தி வருகின்றன.

ஒன்றிய அரசோ / மாநில அரசோ நேரடியாகக் கல்வி நிறுவனங்களை நடத்துதல் கூடாது. உலக நாடுகள் பெரும்பாலானவற்றில் இதுவே நடைமுறை. பொதுப் பள்ளிகள் என்பவை தல ஆட்சிகளால்தான் நடத்தப்படுகின்றன. ஒன்றிய அரசின் கடமை மாநிலங்களுக்குக் கல்விக்கான நிதியை வழங்குவதும் மாநில அரசுகளின் கடமை தல ஆட்சிகளுக்குக் கல்வி நிதி வழங்குவதுமாக மட்டுமே அமைய வேண்டும்.

தமிழ்நாடு மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாகப் பஞ்சாயத்துகளிடம் கல்வியை ஒப்படைக்க வேண்டும். கீழ்வரும் துவக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

1. அனைத்து அரசு துவக்க/நடுநிலைப் பள்ளிகளையும் அந்தந்த ஊராட்சி/பேரூராட்சி/நகராட்சி/மாநகராட்சிகளிடம் ஒப்படைக்க வேண்டும். அந்தந்த தல ஆட்சித் தலைவர்கள் அவரவர் பள்ளிகளின் தாளாளராகச் செயல்படுவார்.

2. அனைத்து உயர் மேல்நிலைப் பள்ளிகளையும்

அந்தந்த ஒன்றியம் /பேரூராட்சி /நகராட்சி /மாநகராட்சி களிடம் ஒப்படைக்க வேண்டும்.

3. தற்போதைக்குக் கல்லூரிகள் மட்டும் தொடர்ந்து மாநில அரசின் நிர்வாகத்திற்குள் இருக்கலாம்.

**இதனால் ஏற்படும் நன்மைகளும் மாற்றங்களும்**

அ) அனைத்து உள்ளூர்வாசிகளுக்கும் வேலை கிடைக்கும்.

ஆ) வெளியூர் ஆசிரியர்கள் வந்தும் வராமலும் கடமைக்காக இருந்துவிட்டுப் போவது நிற்கும்.

இ) ஆசிரியர் நியமனக் குழப்பங்களும் புரட்டுகளும் நிற்கும்.

ஈ) மாற்றல் (Transfer) தொடர்பான தள்ளுமுள்ளுகள் நிற்கும்.

உ) உள்ளூர்ப் புரவலர்கள் பள்ளி மேம்பாட்டில் பங்கேற்பர்.

ஊ) தமது பள்ளி என உள்ளூர் சொந்தம் பள்ளிகளை ஊக்குவித்து மேம்படுத்தும்.

## VI. சான்றோர் (SC) ஆன்றோர் (ST)க்கான கல்வி ஊக்கம்

19-ஆம் நூற்றாண்டு; இறுதியில் இருந்து (1898 கல்வி விதிகள்) தமிழ்நாட்டில் சான்றோர்க்கும் (SC) ஆன்றோர்க்கும் (ST) ஆன கல்விக்கான முற்போக்கான கொள்கைகளும், நடைமுறைகளும் இருந்து வருகின்றன. முதன் முதலில் கல்வி விதிகள் உருவாக்கப்பட்ட போதே அனைத்து சான்றோர்/ஆன்றோர் (SC/ST) சேர்க்கைகளுக்கும் கட்டணம் கிடையாது என்றும், எத்தனை விண்ணப்பங்கள் வரினும் அனைவருக்கும் இடம் வழங்க வேண்டும் எனவும் விதி வகுக்கப்பட்டது. 1900-1940-க்கு இடைப்பட்ட காலங்களில் கிருத்துவத் துவக்கப் பள்ளிகள் மாநிலத்தின் பல மாவட்ட ஆன்றோர் அடர்ந்த சிற்றூர்களில் துவக்கப்பட்டு இன்றும் செயல்பட்டு வருகின்றன. இதே காலகட்டத்தில் சில நூறு

துவக்கப் பள்ளிகளாவது சான்றோராலேயே நிறுவப்பட்டு அவற்றில் பல செயல்பட்டும் வருகின்றன.

சுவாமி சகஜானந்தர் சிதம்பரத்திலும், கருப்பன் அறக்கட்டளை தூத்துக்குடி, கப்பிக்குளத்திலும், குரு இராமதாசு ஊட்டியிலும் சான்றோர்க்கான புரட்சிகரமான பெரும் பள்ளிகளை உருவாக்கினர். சிதம்பரம் நந்தனார் ஆண்/பெண் மேல்நிலைப் பள்ளிகள் 1990-2010 கால கட்டத்தில் சற்றொப்ப 5,000 மாணாக்கரைக் கொண்டிருந்தன. கருப்பன் அறக்கட்டளைப் பள்ளி வளர்ந்து தற்போது 3,000 மாணாக்கரைக் கொண்டுள்ளது; கல்லூரியும் தற்போது துவக்கப்பட்டுள்ளது.

1970 இறுதியில் கல்லூரி வரை பயிலும் எல்லா சான்றோர்/ஆன்றோருக்கும் கட்டணம் கிடையாது என்று தமிழ்நாடு அரசு அறிவித்திருந்தது.

1943-இல் அண்ணல் அம்பேத்கர் உருவாக்கிய, போஸ்ட்மெட்ரிக் கல்விக் கொடைத் திட்டம் இன்றும் தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. 2012-இல் ஆய்வு மாணவர்க்கான (Ph.D) தனிக் கொடைத் திட்டம் தமிழ்நாட்டில் உருவாக்கப்பட்டது. 2021-இல் அயல்நாட்டுப் படிப்பிற்கான கொடைத் திட்டம் விரிவு படுத்தப்பட்டது.

1980-களில் முதன்முறையாகச் சுயநிதிப் பொறியியல் கல்லூரிகள் உருவாக்கப்பட்டதில் ஒன்றாகக் 'கல்சார்; பொறியியல் கல்லூரி அருந்ததியினரால் உருவாக்கப்பட்டது.

இன்று பல கலைக் கல்லூரிகளும், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளும் பாலிடெக்னிக்குகளும், ITI-களும், துவக்கம் முதல் மேல்நிலை வரைப் பள்ளிகளும் சான்றோரால் நடத்தப்பட்டு வருகின்றன.

2012-இலிருந்து அம்பேத்கர் கல்வி நூற்றாண்டு இயக்கம் (அகம் - AKAM) சான்றோர்/ஆன்றோர் உயர் நிலைக் கல்லூரிகளில் நுழைவதற்கான ஒரு தளமாகச் செயல்பட்டுவருகிறது. அகம் போன்றவர்களின் அயராத

*முயற்சியால் சான்றோர்/ஆன்றோரின்* (SC/ST) BE *சேர்க்கை 2012-இல் 10,000-இலிருந்து 2017-இல் 35,000 ஆக உயர்ந்தது.*

*கடந்த 100 ஆண்டு காலக் கல்வித் தூண்டலினால் இன்று சான்றோரின் சேர்க்கைவிகிதம்* (GER-Gross Enrolement Ratio) *மற்றவர்க்கு இணையாகத் தமிழ்நாட்டில் வளர்ந்துள்ளது. கல்லூரி விகிதத்தைப் பொருத்த அளவில் இந்தியப் பொது விகிதத்தைவிடத் தமிழ்நாட்டு சான்றோர் விகிதம் 15 புள்ளிகள் அதிகமாக உள்ளது.*

*இந்த வளர்ச்சியைத் தக்க வைப்பதுடன் புதிய ஏற்றமான கொள்கையாகச் சான்றோர்/ஆன்றோர் கல்வி நிறுவனங்களை நடத்துவதற்கான திட்டம் புகுத்தப்பட வேண்டும்.*

**இரண்டு விதமான புதிய கோட்பாடுகள் வகுக்கப்படலாகும்.**

1. *புதிய கல்விக்கூடங்களைச் சான்றோரும், ஆன்றோரும் உருவாக்குவதற்கான தொடர் நிதி வழங்கப்பட வேண்டும். தற்போது நடைமுறையிலுள்ள அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களுக்கு வழங்கப்படுவதைப் போன்ற நிதி உதவி மாநில அரசால் வழங்கப்பட வேண்டும். ஆண்டுக்கு 5 நிறுவனங்களுக்கு வழங்கப்படலாம்.*

2. *தற்போது சான்றோர்/ஆன்றோரால் நடத்தப்பட்டு வரும் எந்த வகையான பள்ளி/கல்லூரிகளாக இருப்பினும்* (State Board Schools / Matric Schools / Self Financing College Institutions) *அவர்களுக்கு அரசு உதவி வழங்கப்படலாகும்.*

*இந்த நிறுவனங்கள் மாணவர் சேர்க்கையில் 30% சான்றோர்/ஆன்றோரைக்* (SC/ST) *கொண்டிருக்க வேண்டும். இந்நிறுவனங்களில் பணி ஆற்றும் எல்லா சான்றோர்/ஆன்றோருக்கும் அரசு நிதி உதவி வழங்கலாகும்.*

*இந்த நிறுவனங்களின் உரிமையாளர்கள் யாவரும் சான்றோர்/ஆன்றோராக மட்டுமே இருக்கவேண்டும்.*

இவர்கள் SC / SCA / ST / SC-கிருத்துவர்களாக இருக்கலாம். பினாமிகளைத் தவிர்ப்பதற்காக வேறு யாருடனும் கூட்டு வைத்தலாகாது.

**இரா.கிருத்துதாசுகாந்தி இ.ஆ.ப,(ஓய்வு),**
*முன்னாள் கூடுதல் தலைமைச் செயலாளர்*
*பாலம் நிறுவனர்*
rcg1952@gmail.com
*9444045215*

**அருட்பணி. ஜான்குமார்**
*இயக்குநர், சமூகக்கண்காணிப்பகம்*
*தமிழ்நாடு, சென்னை*
*9444469685*

**பரதன்**
*அகம் நிறுவனம்*
*திருநெல்வேலி*
*8870718086*

♦

## ANNEXTURE - II I
## பின்னிணைப்பு - 3

# கல்வியில் சமூகநீதி

*சமத்துவம் (Equality) அல்லது ஒப்புரவு (Equity) என்பதே சமூக நீதியின் ஊற்றுக் கண்ணாகும். கல்வியில் ஒப்புரவைக் கொண்டு வருவதைப் பல கோணங்களில் அணுக வேண்டும்.*

*1. 'யாவர்க்கும் கல்வி' என்பதைத் தாண்டி யாருக்குக் கல்வி வேண்டுமோ அவர்க்கு அரசு திட்டம் வகுப்பது என்பது சமூக நீதியின் பாற்படும்.*

*2. பொருள் இல்லார்க்கும் ஆளுமை எய்த வேண்டிய மக்களுக்கும் கல்வியைச் சேர்ப்பது சமூக நீதி ஆகும்.*

*3. இந்தியச் சமூகச் சூழலில் சாதியை ஏற்க மறுத்த, பட்டியல் இனத்தவர்க்கு ஆளுமை தரும் உயர்கல்வியை அளிப்பது, ஒப்புரவின் உச்சமாகும்.*

*4. கல்வி நிர்வாகம் மாநில அரசுகளிடமும், தல ஆட்சி களிடமும் இருத்தல் வேண்டும். மைய அரசு நேரடியாக நிறுவனங்களை நடத்துவதும், மேலாண்மை செய்வதும் சமன்பாடு தராது. கல்வியை மீண்டும் மாநிலப் பட்டியலுக்கு மாற்ற வேண்டும்.*

*பொது நோக்கில் பல பொல்லாங்குகள் உண்டு; யாவர்க்கும் இலவசக் கல்வி என்பது பொது நோக்கு. பணம் இல்லாதவர்க்குக் கல்வியை இலவசமாகத் தர மறுப்பது தீவினை; அதனினும் தீவினை பணம் உள்ளவர்க்கு இலவசக் கல்வி வழங்குதல். புதிய கல்விக் கொள்கையில் 'ஒப்புரவு' என்பது ஒப்புக்குத்தான் சொல்லப்பட்டுள்ளதே அன்றி செயல் வடிவங்கள் தரப்படவில்லை.*

*பட்டியல் இனப் பார்வையில் 'கல்விக் கோட்பாடுகள்' எவ்வாறு வகுக்கப்படலாம்?*

*1. பள்ளிக் கல்வி மாநில / உள்ளாட்சி அதிகாரங்களின் கீழ் மட்டுமே வரலாகும். மாநில அரசுகள் கொள்கைகள் வகுப்பதோடு நிற்க வேண்டும். நிதி வழங்க வேண்டும். பள்ளிக் கல்வி நிறுவனங்கள் ஊராட்சி மன்றங்களாலும், ஒன்றியங்களாலும் மட்டுமே நடத்தப்பட வேண்டும்.*

*2. அனைத்து வகை மேல் / உயர்நிலைப் பள்ளிகளிலும் (தனியார் பள்ளிகள் உட்பட) 10-20% க்கு மேல் பிற மாநில / பிற நாட்டு பிள்ளைகளைச் சேர்க்கலாகாது. கட்டணம் வசூலிக்கும் பள்ளிகளில் கட்டணத்தை வரையறுப்பதைவிட, அப்பள்ளிகளில் 20% பட்டியலின / பழங்குடி மாணவர்களைக் கட்டணமின்றி பயில வைப்பது ஒப்புரவின் பாற்படும். பள்ளிகளே தமது நிதியிலிருந்து இதை மேற்கொள்ள வேண்டும்.*

*3. பட்டியல் இனத்தவரின் உயிர்ப்பும் வளப்பமும் உயர்கல்வியில் உள்ளது. இதை உறுதிப்படுத்திக் கொண்டிருப்பது 1942 - இல் அம்பேத்கர் பெற்றுத் தந்த போஸ்ட் மெட்ரிக் கல்விக் கொடை* (Post Matric Scholarship - PMS). *இத்திட்டம் குலையாமல் வளர்த்தெடுக்கப்பட வேண்டும்.*

*4. பட்டியல் இனத்தவரில் பள்ளி இறுதி வகுப்பை முடிக்கும் அனைவரும் உயர்கல்விக்குச் செல்லும் கோட்பாடு வகுக்கப்பட வேண்டும்.*

♦

## ANNEXTURE - IV

## பின்னிணைப்பு - 4

# 2016 புதிய தேசிய கல்வி கொள்கையும் பட்டியல் இனத்தவர் கல்விக் கோட்பாடுகளும்

*இந்தியப் பட்டியல் இனம் முழுமையாக உயர்கல்வி எய்தும் போதுதான் இந்தியாவின் அறிவுப்புலம் மெச்சத்தக்க உச்சம் பெறும். இந்தியாவின் கூட்டுமொத்த பொதுவான அறிவு நிலையும் மற்றும் பெறும்.*

*இந்தியப் பட்டியல் இனங்கள் தொன்றுதொட்டு அறிவுசார் இனமாக இருந்து வந்துள்ளன. வள்ளுவரிலிருந்து வியாசர் வரையிலும் கனியன் பூங்குன்றனாரில் இருந்து வால்மீகி வரையிலும் தொல் அறிவர்களும் தெரிவர்களும் இருந்து வந்துள்ளனர். கலை, இலக்கியம், கணக்கியல், வானியல், பொறியியல், நிலவியல், விலங்கியல், தாவரவியல், மருத்துவம், இறையியல், தத்துவதும், அரசியல், மெய்ப் பாட்டியல் என வகைவகையாக பட்டியல் இன அறிவுப் புலமைக்கு இன்னும் வரலாற்று விவரங்கள் விராவிக் கிடக் கின்றன. (விவரங்களுக்கு பெங்களூரு குணாவின் 'வள்ளு வத்தின் வீழச்சி',பேராசிரியர் நெடுஞ்செழியனின் 'ஆசீவகம்' காண்க). தமிழ்நாடு போன்ற மாநிலங்களில் (அன்றைய மதராஸ் ராஜியம்* - Madras Presidency) *1800களிலிருந்தாவது கிராமப்புறங்களில் பட்டியில் இனத்தவர் பெருவாரியாகத் துவக்கப் பள்ளிகளை நிறுவி நடத்திய விவரங்கள் இன்னும் காணக்கிடக்கின்றன. வேறு யார் யாரோ அங்கொன்றும் இங்கொன்றுமாக, அதுவும் 10 அல்லது 20 குறிப்பிட்ட இனச்*

சிறுவர்க்காக மட்டும் (சிறுமியரை சேர்த்தார்களா என்பது தெளிவில்லை) வேத பாடசாலைகளை நடத்தியுள்ளனர். இவற்றைக் கல்விச் சாலைகளாக கருதக்கூடாது. மாறாக பௌத்த பள்ளிகளில் பலதுறைக் கல்வி பயிலப்பட்டதை அறிய முடிகிறது. எப்படி இன்றைய இந்தியக் கிருத்து வர்களில் பெரும்பான்மையோர் பட்டியல் இனத்தவரோ அவ்வண்ணமே பூர்வ பௌத்தர்கள் என்போர் பட்டியல் இனத்தவரே என்பதைப் பண்டிதர் அயோத்திதாசர் போன்றோர் சுட்டிக்கட்டி காட்டுவர். 1800 களிலிருந்து நிருவப்பட்ட ஊர்ப்புற கிருத்துவப் பள்ளிகள் பட்டியல் இனத்தவர் வாழ்விடங்களில் அவரது நில ஒப்பளிப்பிலும், கட்டிட அன்பளிப்பிலும் உருவானவையே. ஆகவே, தொல்காலத்தும் சரி, அண்மைக்காலத்தும் சரி, பட்டியல் இனத்தவர் கல்வியில் நாட்டமும் ஊட்டமும், தோற்றமும், ஏற்றமும் உடையவராய், கையளவாகவும் கரையிலராகவும் (கற்றது கையளவு கல்லாதது உலகளவு) இருந்துள்ளனர் என்பதைச் சரித்திரம் இருட்டடைப்புச் செய்துள்ளது என்பது உண்மை.

நிலவுங் காலத்தில் (Current times) முதல் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பட்டியல் இன மாணவரது சேர்க்கை விகிதம் (GER-Gross Enrolment Ratio) பொதுவிகிதத்திற்கு ஒப்பாகவோ கூடுதலாகவோகத்தான் இருந்து வருகிறது. இவர்களுக்கு ஏற்படும் சமூகத் தடை பொருளாதாரத் தடை இவற்றை எல்லாம் எதிர் நின்று இவர்களால் இந்நிலையை எய்த முடிகிறது என்பது, இவர்கள் கல்வி நாட்டத்திலும் ஈட்டத்திலும் பிறரைவிட விதந்து நிற்கின்றனர் என்பதையே புலப்படுத்துகிறது. இவ்வாறு பள்ளிக் கல்வியில் விதந்து வரும் பட்டியல் இனத்தவரது கல்லூரிக் கல்வியைத் தடுக்கும் வண்ணமாக உயர்கல்விக் கோட்பாடுகள், சேர்க்கை விகிதம், கல்விக்கூட ஆளுமைகள் (governance) அரசுப் பாராமுகங்கள் போன்ற பட்டியல் இனத்தவர்க்கு எதிரிடையானச் செயல்பாடுகளை சுதந்திர இந்தியா கடைப்பிடித்து வருகிறது. எதிரிடை என்பதை வெளிப்படையாகச் சொல்லாமல் பட்டியல் இனத்தவர்க்கான நேரிடையான அல்லது ஆதரவான

சிந்தனைகளை எவரும் தெளித்தாரில்லை. இதுவரை உருவாகியுள்ள இரண்டு தேசியக் கல்விக் கொள்கைகளிலும் சரி, தற்போது வெளிவந்துள்ள 2016 புதிய தேசிய கல்விக் கொள்கையிலும் சரி பட்டியல் இனத்தவர் பற்றிய வாசனையோ வாசிப்போ ஒரு பத்தியிலும், ஒருவரது புத்தியிலும் காணப்படயில்லை என்பதே இதற்குச் சான்று.

பட்டியல் இனத்தவரும், அவரைச் சார்ந்த சமூக அரைசியல் அமைப்புகளும் பிறர் உருவாக்கும் கோட்பாடு களையும், செயல்திட்டங்களையும் திறனாய்வு செய்து, எதிப்புகளைப் பதிவு செய்வதை மட்டுமே மேற்கொண்டு வருகின்றனர். எதிப்புகளைத் தெரிவிக்கிறாரோ இல்லையோ பட்டியல் இனத்தவர்க்கு என்ன வேண்டுமென்ற நேர்மறை யான சிந்தனைகளைச் செயல்திட்டமாக வடிவமைத்துத் தரும் பணியை ஆற்ற வேண்டும். நடப்பு 2016 புதிய கல்விக் கொள்கையில் பட்டியல் இனத்தவர்க்கு ஆக வேண்டுவது என்ன என்பது பற்றி கடந்த ஓராண்டில் பட்டியல் இன அரைசியல் அமைப்புகளான BSP,விடுதலைச் சிறுத்தைகள், புதிய தமிழகம், குடியரசுக்கட்சி போன்றவையும் பல்கிப் பெருகியுள்ள சமுதாய அமைப்புகளும் கூடிக் கருத்துக் கூட்டங்களை நடத்தி இருக்கலாம். அல்லது தனித்தனியாகத் தமது பரிந்துரைகளைத் தந்திருக்கலாம். அறிக்கை சுற்றுக்கு விடப்பட்ட பின்னராவது பட்டியல் இனக் கல்வித் தேவை களை எடுத்தோதி இருக்கலாம். இப்போதாவது செய்வது நன்று.

சுற்றுக்கு விடப்பட்டுள்ள 2016 புதிய தேசிய கல்விக் கொள்கையில் இயற்றப்பட்டுள்ள சில பொதுப் பரிந்துரைகள் மீதான பட்டியல் இனச் சிந்தனைகளை வெளிப்படுத்திக் கொண்டு அடுத்ததாகப் பட்டியல் இனத்தவர்க்கு என்ன தேவைப்படுகிறது என்பதைப் பதிய விரும்புகிறோம்.

1. மொத்தம் மூன்றே இடங்களில் அறிக்கை பட்டியல் இனத்தவர் பற்றிப் போகிற போக்கில் குறிப்பு செய்துள்ளது.

அ. அனைவர்க்குமான தரமான உள்ளடக்கிய கல்வி

வழங்கப்படும். அனைவருக்கும் (all), உள்ளடக்கிய (inclusive) ஆகிய சொல்லாக்கம் பட்டியல் இனந்தவர்க் கும் பொருத்தும் என ஊகிக்கலாம். (Some Inputs - Chap 1, Preamble — Pg 5/43)

ஆ)பட்டியல்இனம், பழங்குடி, முசுலிம் இனக் குழந்தை களுக்கு இன்னும் கூடுதலான (greater) நுண்ணிய (Focussed) பார்வை செலுத்தப்பட வேண்டும் என்பது புலர்கிறது. (The same - Chap.II -Pg 10/43)

இ) உயர்கல்வியின் விரிவாக்கத்தை ஒப்புரவுடன் (Equity) கொண்டு வருவது ஒரு சவாலாக உள்ளது. (The same - Chap.II -Pg 10/43)

இவற்றைத் தாண்டிப் பட்டியல் இனத்தவர்க்கு என்ன செய்யப்பட வேண்டும் என்ற கருத்தாடலே சற்றொப்ப 400 பக்க அறிக்கையில் இல்லை. உள்ளடக்கிய கல்வியும் மாணாக்கர்க்கான துணையும் (Inclusive Education and Student Support - The same – Chap 4- Pg 23/43) என்ற பரிந்துரைகளிலும் பட்டியல் இனப் பதமே அடிபடவில்லை. அடி வாங்கியுள்ளது என்று வேண்டுமானால் சொல்ல முடியும்!!

இந்த மூன்று பரிந்துரைகளும் பட்டியல் இனத்தவர்க்கு ஒப்புரவு செய்பவை என்பதில் ஐயப்பாடோ இரட்டுற மொழிதலோ கிடையாது. ஆயினும் இவை எவ்வாறு நிறைவேற்றப்படும் என்பது அறிக்கையில் விவரிக்கப்பட வில்லை. நோக்கம் வேண்டும். ஆக்கப்பூர்வமான நடவடிக்கை களும் வேண்டும். இப்போது சில பொதுக்கருத்துக்களைப் பார்ப்போம்.

**காவிமயமாதல் (Saffronisation)**

அறிக்கையில் காவிமயமாதல் எங்குள்ளது எனச் சிலர் வினவுகின்றனர். அறிக்கையின் ஆரம்பமே வேதக் கல்வி யைத் தொட்டு வழிபட்டு ஆரம்பிக்கிறது. 'The Education System that was evolved for first in ancient India is Known has the Vethic system' (Preamble)..

ஆரியபட்டர்களும், சுஷ்ருதாக்களும், சாணக்கியரும், வாத்சியானர்களும், கோகலேக்களும் குறிப்பிடப்படு கிறார்களே அன்றி டாக்டர் அம்பேதகர் கூட இவர்கள் கண்ணில் நிழலாடவில்லை (Preamble)..

- ❐ ஆசிரமங்களைப் பள்ளிகளுடன் இணைக்க வேண்டும் என்பது..
- ❐ 10வது படிக்கையில் ஏட்டுக் கல்விக்கான மாணவர், மாட்டை ஓட்டுபவர்க்கான மாணவர் என்று தரங்கெட்ட தரம் பிரிக்கவேண்டும் என்பது..
- ❐ 8வது வரை தேர்வுகள் தேவை இல்லை என்பதை மாற்ற வேண்டும் எனபது...
- ❐ வழக்காற்றில்லாத சமத்கிருத மொழியைத் தூக்கிப் பிடிப்பேன் என்பது..
- ❐ Vocational என்ற போர்வையில் குலத்தொழில் முறைமைகளை மீட்டுருவாக்கம் செய்ய எத்தனிப்பது..
- ❐ மண்ணின் மைந்தர்களாகிய பட்டியல் இனத்தவர், பழங்குடியினர் ஆகியோர் பண்பாடுகளைப் பற்றிப் பேசாமல் தேசியப் பண்பாடு என்று பேசுவது..

இவை போன்றன காவிமயமாக்கலின் சாயலாகத்தான் உள்ளன. உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் திறத்தன இவை.

காவிமயமாக்கலில் பட்டியல் இனம் ஏதும் பலன் பெறுமா பெறாதா என்பது ஒருபுறம் இருக்க, வேறெந்த மயமாக்கலிலும் பட்டியல் இனத்திற்குத் தன்னியல்பாக இடம் கிடைக்குமா என்பதற்கு உறுதிப்பாடில்லை. காவிமயமாக்க லில் பட்டியல் இனத்திற்குப் பங்கு கிடைக்காது என்பது ஒரு பக்கம் இருக்க, புனித ஆவிமயமாக்கலில் பிறந்த கிருத்துவச் சிறுபான்மைக் கல்வி நிறுவனங்களிலும் பெரும்பான்மைப் பட்டியல் இனத்தவர்க்கு இடமளிக்கப்படவில்லை என்பதைக் காண முடிகிறது. ஆரியமயமாதல் ஆகாது எனில்

திராவிடமயமான கல்வி முறையில் இன்னும் குரூரமான புறக்கணிப்புகளைப் பட்டியல் இனம் சந்தித்து வருவதைத் திராவிட அமைப்புகள் உட்பட்ட உலகு அறியும்.

ஆகவே காவியாதல் புனித ஆவி ஆதல், சாமி ஆதல், KVஆதல், ஆரியம் ஆதல், திராவிடம் ஆதல், சமத்கிருதம் ஆதல், தமிழ் ஆதல், வேதாந்தம் ஆதல், சித்தாந்தம் ஆதல், பித்தாந்தம் ஆதல் என்ற யாதொரு மயமாதலினால் மட்டும் பட்டியல் இனத்திற்கு ஏற்பளிப்பு வந்துவிடாது. எந்த மயமாவதானாலும் அதில் பட்டியல் இனத்திற்குப் பங்களிப்பு அளிக்கும் கூறு குறிப்பாகத் தெரிவிக்கப்படாமல் போனால், உள்ளடக்கிய (Inclusive) கல்வி என்பது வெறும் சொல்லாடலோடு செல்லரித்துப் போகும். ஆகவே காவிமயமாதல் பற்றிப் பேசுவதோடுகூட பட்டியல இன மயமாதல் பற்றிப் பட்டியல், இனத்தவர் பேச வேண்டும்.

**கல்வி நிர்வாகம் (Governance of Education)**

இந்த அறிக்கை கல்வி நிர்வாகத்தை மேலும் மேலும் ‘மையமயமாக்கலை’ (Centralisation) முன்னிறுத்துகிறது.

- மை அரசு நடத்தும் கல்வி நிறுவனங்களை வலுப் படுத்துதல்.
- அனைத்திந்திய கல்விப் பணி (All India Education Service) உருவாக்குதல்.
- இந்திய அளவில் அறிவியல் கணிதப் பாடங்களை ஒருமைப்படுத்துதல்.
- உயர்கல்வி நிறுவனங்களை மையக் கட்டுப்பாட் டுக்குள் கொண்டு வருதல்.
- மைய நிதியம் (Central Corpus) உருவாக்குதல்.

போன்ற பரிந்துரைகள் மையமயமாக்கலை முன்னிறுத்து பவை.

பட்டியல் இனப் பார்வையில் இவையாவும் மறுக்கப் பட வேண்டியவை. பட்டியலினப் பார்வையில் கல்வி நிர்வாகம் என்பது கீழமை ஆளுமைக்கு வர வேண்டும். மைய

அரசிடமிருந்து மாநில அரசுக்கு ஆளுமை இறங்க வேண்டும் என்பதோடு மட்டும் நில்லாமல், ஊராட்சி அமைப்புகள் வரை கல்வி ஆளுமை படர்ந்து வரவேண்டும். ஆளுமைகளும் வளமும் பரவலாக வேண்டும் எனில் பஞ்சாயத்து : மாநிலம் : மையம் இவைகளுக்கு 40 : 30 : 30 என்ற விகிதத்தில் நிதி பகிரப்பட வேண்டும். கூட்டாட்சித் தத்துவம், சுயாட்சி உரிமை அல்லது தனியார் மயம் என்று எதுவாகிலும் அது பஞ்சாயத்துகள் வரை நீள வேண்டும். ஒவ்வொரு பஞ்சாயத்தும் ஒரு மேல்நிலைப் பள்ளியை நிருவ நிதி ஒதுக்கப்பட வேண்டும். எந்த பாடமுறை, எம்மொழிக்கல்வி என்பவற்றை அந்தந்த பஞ்சாயத்துகளே முடிவு செய்யலாம். ஒவ்வொரு பஞ்சாயத்து ஒன்றியங்களும் கலை அறிவியல் கல்லூரியை நடத்தலாம். ஒவ்வொரு மாவட்ட பஞ்சாயத்தும் ஒரு பொறியியல் கல்லூரியையும் மருத்துவக் கல்லூரியையும் நடத்தலாம். ஒவ்வொரு கல்வி நிறுவனமும் 50% இடங்களை சுயநிதி இடங்களாக நடத்தலாம். 50% கட்டணமில்லா இடங்களாகவும் குறைந்தது 30% இடங்களைப் பட்டியல் இனம் பழங்குடிக் காகவும், 20% பொருளாதாரமின்மை அடிப்படையிலும் வழங்கி நடத்தலாம். அரசு இந்நிறுவனங்களுக்கு 50% நிதி நல்கை தரலாம். மீதிக் கட்டணத்தை அந்தந்த நிறுவனங்கள் சுயமாக நிர்ணயித்துக் கொள்ளலாம்.

அரசுகள் நேரடியாக நடத்தும் கல்வி நிறுவனங்களை இன்றைய எண்ணிக்கையோடு நிறுத்திக் கொள்ளலாம். இருக்கும் அரசு துவக்கப் பள்ளிகளையும், நடுநிலைப்பள்ளி களையும் அந்தந்த பஞ்சாயத்துகளின் முழுப் பொருப்பில் விட்டுவிடலம். இருக்கும் அரசு மேல்நிலைப் பள்ளிகளை யும், அரசு கலை, பொறியியல், மருத்துவக் கல்லூரிகளை மட்டும் அரசு நடத்தலாம். அரசு நிறுவனங்கள் 30% பட்டியலின பழங்குடியினருக்கு இலவச இடமளிக்க வேண்டும்.

பஞ்சாயத்து அமைப்புகள் கல்வி நிறுவனங்களை அரசு நிதி உதவியுடன் நடத்துவதைப் புதிய கல்விக் கொள்கையாக அறிவிக்க வேண்டும்.

இந்திய ஆட்சிப் பணியே (IAS) இக்குடியாட்சியின் வளாச்சிக்கு தடையாகவும், செல்வாக்கு உள்ளர்களின் முகமையாகவும் செயல்பட்டு வருகிறது. அதேபோன்ற தொரு நிர்வாக அமைப்பைக் கல்வியில் நுழைப்பது பெருங் கேட்டை விளைவிக்கும். அரசு அதிகாரிகள் கல்வி நிறுவனங்களை நேரடியாக நிர்வகிக்கும் அல்லது கண்காணிப்புச் செய்யும் பொருப்புகளிலிருந்து விடுவிக்கப் பட வேண்டும். மாவட்ட அளவில் அந்தந்த பள்ளிகள், கல்லூரிகள் தமக்குள் ஒரு ஆற்றுமைக் குழுவைத் (Council) தேர்ந்தெடுத்துக் கொள்ளலாகும். பள்ளி, கல்லூரிகளுக்கான ஒழுங்கமைதி விதிகளை இவை வகுத்துக் கொள்ளலாம் பொது விதிகளை மீறும் கல்வி நிறுவனங்கள் மீது இந்த ஆற்றுமைகள் (Council) நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம்.

மாவட்ட ஆற்றிமைகள் தமக்குள் ஒரு கூட்ட மைப்பை உருவாக்கிக் கொள்ளலாம். மாநில அரசு ஒரு உறுப்பினரை இதில் அமர்த்தலாம். அரசு, உறுப்பினர் தலைவராகவோ உறுப்பினர் செயலராகவோ செயல்படக் கூடாது.

நாடாளாவிய ஒழுங்கமை அதிகாரப் படைப்புகளை நாடு கைவிட வேண்டும் (UGC, AICTE, AIC, Teacher Edn., AIIMS போன்ற நடுவனரசு முகமைகள் குலைக்கப்பட்டு மாநில அளவில் கட்டுப்பட்டு நிறுவனங்கள் நிறுவப்பட வேண்டும். அவையும் மாநில அரசின் முகமைகளாக இருத்தலாகாது. அந்தந்த மாவட்டங்களில் உறுப்புக் கல்வி நிறுவனங்களால் தேர்வு முறையில் அழைக்கப்படும். கட்டுப்பாட்டு நிறுவனங்கள் (Regulatory Bodies) தமக்குள் மாநில அமைப்பையும் உருவாக்கிக் கொள்ளும். அரசு தமது ஒரு உறுப்பினரை நியமித்துக்கொள்ளலாம்.

புள்ளி விவரங்களைச் சேகரித்தல், புதிய கருத்தாக் கங்களை அறிமுகப்படுத்துதல், நிதிப்பகிர்வு செய்தல் போன்ற பணிகளுக்காக மட்டும் அரசு நிர்வாக அமைப்பு களை வைத்துக் கொள்ளலாம். அரசு ஈடுபாடு, தனியார்

முனைப்பு, உள்ளூர் பங்கேற்பு, திறன் வளர்ப்பு, சமூக ஒப்புறவு, கல்வி பரவலாக்கம் அனைத்தும் இவ்வகை நிர்வாக ஆளுமையில் நிறைவேறும். வீணான அரசுத் தலையீடு, அரசு ஊழல், ஓர்மை, நிர்வாகக் கட்டுப்பாடின்மை இவை மறைவதோடு அரசுச் செலவும் குறையும்.

**தனியார்மயமாக்கல், உலகமயமாக்கல்**

பொதுவுடைமைவாதிகளுக்கு வேண்டுமானால் தனியார்மயமாதலும் உலகமயமாதலும் எட்டிக்காயாகக் கசக்கலாம். பொதுவுடைமை அரசியலே (Communism) உலகமயமாதலின் இறக்குமதிதானே! அவர்களது கொள்கைப் பரப்பு கல்விச் சாதனங்களான செய்தித் தாட்களும், அச்சகங் களும், நூல் விற்பனை நிலையங்களும் தனியார்மயம் தானே! நாடு சுதந்திரம் பெறும் வரை பெரும் பான்மைப் பள்ளிகளைத் தனியார்தாம் நடத்தினர். அதில் கிராமப்புறப் பள்ளிகளை நடத்தியதில் பட்டியல் இனத்தாருக்குப் பெரும் பங்கு உண்டு. டாக்டர் அம்பேத்கரும் தனியார் கல்விச் சாலைகளை நிருவினார் என்பதை நினைவு கூறவேண்டும். அரசுதான் பட்டியல் இனத்தவர்க்குச் சாதகமாக இருக்கும் என்று தனியார்க்கு எதிரிடையான கருத்தியல் பட்டியல் இனத்தவரை மூளைச் சலவை செய்கிறது.

1850களிலிருந்து உயர்கல்வி (கல்லூரிகள், தொழிற் கல்வி கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள்) அரசு வசம்தன் இருந்தது. இந்த காலகட்டத்தில்தான் தனியார் வயமிருந்த பள்ளிக் கல்வி சேர்க்கை (GER) மற்றோர்க்கு இணையாக வளர்ந்திருந்தது. ஆனால் அரசு வயமிருந்த கல்லூரி கல்வியில் பட்டியல் இனத்தவர் மற்றவரைவிட சற்றொப்ப நான்கு மடங்கு பின்தள்ளப்பட்டனர் என்ற பூதாகரமான புள்ளி விவரம் சரியாக வெளியிடப்படவுமில்லை;அலசப்பட படவுமில்லை. ஆனால், இதே காலகட்டத்தில் நடத்தப்பட்ட அண்ணாமலை தனியார் பல்கலைக்கழகத்தில் சற்றொப்ப 30-40% பட்டியலின மாணவர்கள் முதுகலைக் கல்வி பயில முடிந்துள்ளது.

இன்னும் சொல்லப்போனால் 2000ஆம் ஆண்டில் தமிழ்நாட்டிலுள்ள அரசு உட்பட எல்லா பல்கலைக் கழகங்களிலும் எத்தனைப் பட்டியல் இனத்தவர் முதுகலை பயின்றனரோ, அதைவிட அதிக பட்டியலின மாணவர்கள் அண்ணாமலை என்ற ஒரே தனியார் பல்கலையில் பயின்றனர் என்ற ஆச்சரியமான புள்ளி விவரம் உள்ளது. அந்த அண்ணா மலை தனியார் பல்கலை அரசால் எடுத்துக் கொள்ளப்பட்ட பிறகு, என்ன சீராக்கம் நடந்ததோ இல்லையோ பட்டியலின மாணவர் எண்ணிக்கை குறைந்துள்ளது என்பதை அறிய முடிகிறது.

2013லிருந்து சற்றொப்ப 100 தனியார் சுயநிதிப் பொறியியல் கல்லூரிகளில் 50%க்கு மேல் பட்டியல் இனதத்தவர் சேர்க்கப்பட்டுள்ளனர். எந்தவொரு அரசுப் பொறியியல் கல்லூரியிலும் 18%க்கு மேல் பட்டியலின மாணவர் இல்லை. தமிழ்நாட்டில் BE பயிலும் மொத்தம் 1.20 இலட்சம் பட்டியலின மாணவர்களில் வெறும் 10000 பட்டியலின மாணவர் மட்டுமே அரசுப் பொறியியல் கல்லூரிகளில் பயில்கின்றனர்.

அனைத்துப் பொறியியல் கல்லூரிகளையும் அரசு ஏற்பதாக இருந்தாலும் எந்தவொரு கல்லூரியிலும் 50%க்கு மேல் பட்டியல் இனத்தார் சேர்க்கப்படமாட்டார் என்பது உறுதி. தமிழ்நாட்டில் சற்றொப்ப 13000 பள்ளிகளில் (தனியார் பள்ளிகள் உட்பட) 50%க்கு மேல் பட்டியல் இனத்தவர் சேர்க்கப்படு கின்றனர் என்ற நிச்சயமான சமூக ஒன்றிப்பு நடந்து வருகிறது. இதில் அரசுப் பள்ளிகளின் பங்கு ஒரு சிறிதுதான்.

தமிழ்நாட்டில் பட்டியல் இனத்தவரைப் புறந்தள்ளாத பள்ளிகள் கிடையாதா என்ற கேள்விக்கு, 10000 பள்ளிகளில் 10%க்குக் கீழாகவும், 1000 பள்ளிகளில் 3%க்குக் கீழாகவும், 100 பள்ளிகளில் 0%மாகவும், பட்டியல் இனத்தவர் உள்ளனர். இதில் ஊன்றிக் காண வேண்டுவது, இப்புறந்தள்ளும் கல்வி நிறுவனங் கள் தனியார் நிறுவனமாக மட்டுமல்ல; சிறுபான்மைக் கலவிக் குழுமங்களும் அரசுப் பள்ளிகளும் இதில் அடங்குகின்றன.

பட்டியல் இனத்தவரைப் பொருத்த அளவில் தனியார்மயம் என்பது சாதிச்சாயம் பூசியது எனில், அரசுகளோ (நடுவமோ மாநிலமோ) உக்கிரமான சாதிக்கூட்டுச் சோற்றை உண்டு உருவாக்குபவை என்பதை ஊன்றி உணர வேண்டும்.

பட்டியல் இனத்தவர்க்குக் கல்வி சார்ந்த அரசுகளின் ஈடுபாடு கண்டிப்பாகத் தேவை. இத்தேவையை அரசுகள் கல்விக் கட்டண நிதியாக நேரடியாக வழங்குவதே கல்வி விரிவாக்கத்தையும் மேன்மையையும் பட்டியல் இனத்தவர்க்கு கொண்டு வரும். மாறாக அரசுகள் நேரடியாகக் கல்வி நிறுவனங்கள் நடத்துவது பட்டியல் இனத்திற்கு ஒப்புரவும் செய்யாது; உயர்வும் தாராது. மைய அரசு நடத்தும் போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகைத் திட்டத்தினால் (நேரடி நிதி வழங்கல்) பட்டியல் இனத்தவர் அடையும் நன்மையையும், அதே மைய அரசு நடந்தும் AIMS, ITT, IIM, NIFT, மையப் பல்கலைக்கழகங்கள் போன்றவற்றுள் பட்டியல் இனத்தவர் படும்பாட்டையும் ஒப்பிட்டுப் பார்த்து விளங்கிக் கொள்ளலாம்.

தனியார் நிறுவனமோ, உலகமயமான நிறுவனமோ, அரசு நிறுவனமோ அல்லது வேறெதுவோ (நிகர்நிலைப் பல்கலை, சிறுபான்மையர், மதஞ்சார் அறக்கட்டளைகள், அயல்நாட்டுத் தூதரகங்கள் என்றின்னவை) யாவற்றிலும் ஒவ்வொன்றிலும் 25%க்கு குறையாது பட்டியல் இனத்தவரைச் செலவில்லாது சேர்க்கும் வரன்முறை புகுத்தப்பட வேண்டும். இந்நிதிப் பொருப்பை மைய, மாநில அரசுகள் 50:50 விகிதத்தில் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

## யாவர்க்கும் இலவசக் கல்வி (Education to all)

யாவர்க்கும் இலவசக் கல்வி வழங்கும் அளவிற்கு நிதி இல்லாத நிலையில் அரசுகள் இதைக் கோட்பாடாக அறிவிப்பதில் பட்டியல் இனத்தவர்க்குத்தான் ஆபத்து. நிதி சுருங்குவதால் பட்டியல் இனத்தவர்க்கான விரிவாக்கத் திட்டங்கள்தாம் அடி வாங்கும். கல்வி உரிமைச் சட்டம் வந்த கடந்த 10 ஆண்டுகளாகப் பட்டியல் இனத்தவர்க்

கென்று தனியாக வேறெந்தக் கல்வித் திட்டமும் உருவாகப் படவில்லை என்பதைப் பட்டியல் இனத்தவர் ஊன்றி அறிய வேண்டும். அத்தோடு நில்லாது ஏற்கனவே வழங்கப்பட்ட முனைவர்க்கான நிதி உதவிகளும் சுருக்கப்பட்டன. தமிழ்நாட்டில் அனைத்து முதல் தலைமுறை பட்டதாரி களுக்கும் (நிதி வரம்பின்றி) உதவித் தொகைத் திட்டத்தைப் புகுத்தியதால் பட்டியல் இனத்தவர்க்கு வழங்கப்பட வேண்டிய தொகை முதல் தலைமுறைக்குச் சென்றது. அவ்வாறு திசை திருப்பப்படவில்லை என்று கூறப் பட்டாலும் பட்டியலின மாணவர்க்கு ஓராண்டு கழித்துத் தான் ஒதுக்கப்படுகிறது (வழங்கப்படுவதல்ல; பட்ஜெட்டில் ஒதுக்கப்படுவது) என்பதற்கு என்ன விளக்கம் தரமுடியும்? பட்டியல் இனத்தவர்க்கு ஆற்ற வேண்டிய கடனைக் குறைவின்றி முடித்த பிறகு, வேறொருவர்க்கும் எதைச் செய்து கொடுப்பதைப் பற்றியும் பட்டியல் இனத்தவர்க்கு எவ்விதப் பேதலிப்பும் தேவையில்லை.

ஆகவேதான் யாவர்க்குமான பட்ஜெட்டில் பட்டியல் இனம் பங்கு கோரவும் வேண்டுவதில்லை; அதே வேளை பட்டியலினப் பட்ஜெட்டிலிருந்து ஒரு சல்லியும் யாருக்கும் விட்டுத்தரவும் விடலாகாது. யாவருக்கும் இலவசம் என்பதில் 80% பட்டியல் இனத்தவர் அல்லாதவாக்கே செல்லும். இன்னும் சொல்லப் போனால் யாவர்க்கும் இலவசம் என்று சொல்லிவிட்டு பட்டியல் இனத்தவர் சேர்க்கைக்கு ஆகாத விதிகளைப் புகுத்தி அவர்களைக் கல்வியில் சேரவிடாமல் செய்து 100% நிதியும் மற்ற யாவர்க்கும் போகும் ஒரு மருகுதிருகுமடையும் திறந்துவிடப்படும் சூழல் இந்தியாவெங்கும் நிறைந்துள்ளது. யாவர்க்கும் கைக்கூடும் இலவசம் பட்டியல் இனத்தவர்க்கு மட்டும் கைவசமாகாது என்பதுதான் இந்தியச் சாதியக் கட்டமைப்பு.

இதை நன்கு புரிந்து கொண்டு பட்டியல் இனத்தவரும் அவரைச் சார்ந்த அரைசியல், சமூக அமைப்புகளும் கோரிக்கைகளைப் பட்டியல் இனம் சார்ந்து கூர்மையாக வைக்கப் பழகிக்கொள்ள வேண்டும். பொதுத் தத்துவத்திற்

குள் தாமும் நுழைந்து பொத்தாம்,பொதுவில் தாமே பொத்துப் போவதைத் தவிர்ப்பது நலம் பயக்கும்.

**பல்கலைக் கழகங்கள்**

காலனி ஆதிக்கத்தில் உருவாக்கப்பட்ட அடிமைத் தனமான சட்டக்கூறுகளையே இன்றைய பல்கலைக் கழகங்களும் பின்பற்றி வருகின்றன. 1850களில் உருவாக்கப்பட்ட பல்கலைச் சட்ட விதிகளை அப்படியே தொடர்கின்றன. எல்லா பல்கலைக் கழகங்களும், அடிமைக் கூறுகளில் தலையாய கூறு சம்பந்தமே சம்பந்தமில்லாத ஆளுநரை (Governor) வேந்தர்களாக (Chancellor) இன்னும் தொடர்த்து வைத்திருப்பது. உயர் கல்வியில் துணைவேந்தர்களைத் தேர்ந்தெடுப்பதில் நடைபெறும் முறைகேடுகளை அறிக்கையே கட்டிக் காட்டுகிறது. உயர்கல்வி பல்கலைக் கழக ஆளுமையில் (Governance) அடிப்படையான மாற்றங்களைக் கொண்டு வருவது இன்றியமையாதது.

1) வேந்தர், துணைவேந்தர் என்ற இரு தலைமைப் பணியிடங்கள் தேவையற்றன. ஒரே தலைமைப் பதவி போதுமானது.

2) பல்கலை நிர்வாகத்தில் ஆளுநர் பங்கு ஏதும் இருத்தலாகாது. ஆளுநர்தான் வேந்தர் என்ற காலனி ஆதிக்க அதிகாரப் படைப்பை ஒழிக்க வேண்டும்.

3) பல்கலைக் கழகத் தலைவரை வேந்தர் என்ற மன்னராட்சிப் பெயரல்லாத வேறு குடியாட்சிக்கொத்த பெயரைச் சூட்ட வேண்டும்.

4) பல்கலைத தலைவரை அந்தத்த பலகலைக் கழக உறுப்பினர் குழுமமே தேர்ந்தெடுக்க வேண்டும். அரசு நியமனங்கள் கூடாது. தலைவராக வருபவர் அந்தந்த பல்கலைக் கழகத்தில் குறிப்பிட்ட காலமாவது பணியாற்றியவராக இருத்தல் வேண்டும். 5 ஆண்டு சுழற்சியில் பட்டியல் இனம், பிற பிற்பட்டோர் இனம், பொதுப்பிரிவு என்ற வரிசையைக் கடைப்பிடிக்க வேண்டும்.

*5) பல்கலைக் கழகங்களோ, ஒழுங்கு முறை அதிகார அமைப்புகளோ 100-200 உறுப்புக் கல்லூரிகளுக்கு மேல் அதிகாரம் கொண்டதாக இருக்கக்கூடாது. ஆயிரக்கணக்கான கல்லூரிகளை ஒழுங்குபடுத்தும் நாடு தழுவிய ஒரு அலகு (*UGC, AICTE, AICME *போன்றவை) செயல்படக் கூடாது. தேசிய அளவில் சிறு சிறு அலகுகளின் கூட்டமைப்பை உருவாக்கிக் கொள்ளலாம். எந்தவொரு அமைப்பும் அரசால் நியமிக்கப்படுவதாகவோ நிர்வகிக்கப்படுவதாகவோ இருத்த லாகாது. அரசின் சார்பாளராக ஒருவர் அமர்த்தப்படலாம். அவரும் அரசு தரும் மூவர் கொண்ட அணியிலிருந்து பல் கலைக்கழக உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுபவராக இருத்தல் வேண்டும். அலுவல்சார் உறுப்பிர்கள்* (Ex-Officio Members) *இருத்தலாகாது.*

**சிறுபான்மைக் கல்வி**

*சிறுபான்மையினர்க்கு அரைசியல் சட்டம் அளித்துள்ள உரிமைகளையும், கல்வி நிறுவனங்கள் நடத்துவதற்கு நீதி மன்றங்களில் போராடி அவர்கள் பெற்ற தன்னாட்சி உரிமைகளையும் பட்டியல் இனத்தவர் ஆதரிக்க வேண்டும். அவர்கள் போராட்டத்திற்கும் ஆதரவாக நிற்க வேண்டும். அதேசமயம் கிருத்துவமாயினும் சரி இஸ்லாமாயினும் சரி பூர்வ பட்டியலினக் குடிகளால்தான் ஆக்கம் கண்டவை இவை இரு சமயங்களும் என்பதைச் சிறுபான்மை நிறுவனத்தை நிருவகிப்பவர்கள் உணர வேண்டும். நியமனங்கள், மாணவர் சேர்க்கையில் முழு சுதந்திரம் சிறுபான்மை நிறுவனத்திற்கு உண்டு. ஒதுக்கீடு விதி இவர்களுக்குப் பொருந்தாது என்றும் இவர்கள் உரிமை கோருகின்றன. பட்டியல் இனத்தவரைப் பொருத்த அளவில் :*

*1. சிறுபான்மை நிறுவனங்கள் 100 சதவீதம் பயனை அந்தந்த சிறுபான்மையினர்க்கு ஆசிரியப் பணிகளிலும், பிற பணிகளிலும் மாணவர் சேர்க்கையிலும் இடம் அளிப்பர் எனில், சிறுபான்மையர் உரிமைக்குப் பட்டியல் இனம் முழுமனதோடு ஆதரவு அளிக்கும், ஒதுக்கீடு பற்றிப் பட்டியல் இனம் வலியுறுத்த வேண்டுவதில்லை.*

*2. 100% அந்தந்த சிறுபான்மையருக்கு இடம் அளிக்காத போது, 25%க்கு மேல் பட்டியல் இனத்தவர்க்கு வாய்ப் பளிப்பர் எனில் சிறுபான்மை உரிமைக்குப் பட்டியல் இனம் ஆதரவு அளிக்கும். வெறும் ஒதுக்கீடு சதவீதம்தான் அளிப்போம் எனில், அதைத்தான் எல்லா நிறுவனங்களும் செய்யவேண்டுமோ? பின் சிறுபான்மையர்க்கு மட்டும் ஏன் சிறப்பு உரிமை என்ற கேள்வியைப் பட்டியல் இனம் கேட்கும்.*

*3. தமிழ்நாட்டில் உள்ள முசுலிம், கிருத்துவக் கல்வி நிறுவனங்களில் (பள்ளி, கலை, அறிவியல், தொழில்நுட்பக் கல்லூரிகள், நிகர்நிலைப் பல்கலை) 80% நிறுவனங்களில் 50% சிறுபான்மையர் கிடையாது. 10% பட்டியல் இனம் கிடையாது. சிறுபான்மையரைவிட, பட்டியல் இனத்தவர் விட பிற சாதியர் எண்ணிக்கையில் (நியமனங்களிலும், மாணவர் சேர்க்கையிலும்) அதிகமாக உள்ளனர் சிறுபான் மையரையும், பட்டியல் இனத்தவரையும் வளர்க்காமல் சாதியர்களை வளர்ப்பதற்கு ஏன் சிறுபான்மை உரிமை என்ற கேள்வி எழுகிறது.*

*4. கிருத்துவச் சிறுபான்மைக் கல்வி நிறுவனங்கள் பட்டியல் இனத்தவரை (இந்து, பௌத்த, சீக்கியப் பட்டியல் இனத்தவர்) போதிய அளவு சேர்க்காவிடினும், கிருத்துவப் பட்டியல் இனத்தவரை 50% க்கு மேல் சேர்க்கக் கடன் பட்டவர். ஏனெனில் அனைத்து வகைக் கிருத்துவப் பிரிவு களிலும் 60%க்கு மேல் கிருத்துவப் பட்டியல் இனத்தவரே உள்ளனர். அனைத்து வகை கிருத்துவர்க்கும் மேலாகவும், கிருத்துவப் பட்டியல் இனத்தவர்க்கும் மேலாகவும் வேறு யாரைச் சேர்ப்பதற்காகச் சிறுபான்மை உரிமை கோரப் படுகிறது என்ற கோவி எழுகிறது. சிறுபானனமயர் 100% பேரைச் சேர்க்கும் அமைப்புகளுக்கு மட்டுமே சிறுபான்மை உரிமை வழங்கலாகும்.*

**தகுதியும் சமூக ஒப்புரவும் (Merit &Equity)**

*இந்த அறிககையில் தகுதி, தரம்* (Skill, Quality)

போன்றவைகளுக்கு முதன்மை தரப்பட்டுள்ளது. உள்ளடக்கம் (Inclusiveness) ஒப்புரவு (Equity) பற்றிப் பேசினாலும் தரம்தான் மேலோச்சுகிறது. இந்திய நாட்டில் மேலோச்ச வேண்டுவது சமூகககளை உள்ளடக்கி வாய்ப்பு வாயில்களை இதுவரை மறுக்கப்பட்டவர்க்கு விரிவுபடுத்துவதே.

தரம் என்ற போர்வையில், தரம் பிரிப்பது என்ற செயல்பாடுகளில், வேண்டுபவர்களைக் சேர்ப்பதற்கும், வேண்டாதவரைத் தடுப்பதற்குமான விலக்கு விதிகள் ‘தரம்’ (Merit) என்ற புனையில் புகுத்தப்படும். தக்கார், தகவிலர் என்பதை வாய்ப்புத் தருவதற்கு முன்னமே வகுத்தலாகாது.

கல்வி நிறுவனங்களைத் தரம் பிரிப்பதை நிறுத்த வேண்டும். அப்படியே செய்வதானாலும் பிற கூறுகளுக்கு மேலாகப் பட்டியல் இனத்தவர், மாற்றுத் திறனாளி சிறுபான்மையர், பெண்கள் ஆகியோர் எத்தனை விகிதம் சேர்க்கப்பட்டுள்ளனர், தாழ் மதிப்பென் பெற்றவர்கள் எத்தனை பேர் சேர்க்கப்பட்டுள்ளார்கள் என்பதற்குப் பிற கூறுகளைவிடக் கூடுதலான மதிப்புகள் தரப்பட வேண்டும். 90%க்கு மேல் தேர்ச்சி விகிதம் காட்டும் பட்டியல் இனத்தவர் 20%க்குக் கீழுள்ள கல்லூரியைவிட 70% தேர்ச்சி காட்டும் 50%க்கு மேல் பட்டியல் இனத்தவரைச் சேர்ந்துள்ள கல்லூரி தரம் மிக்கது என்பதில் அய்யப்பாடு இல்லை. அதே போன்று 80% மேல் மதிப்பெண்களைப் பெற்றவர்களை மட்டுமே சேர்த்தது 80% தேர்ச்சி காட்டும் கல்லூரிகளை விட 40% மதிப்பெண் பெற்றவரையும் சேர்த்து 60% தேர்ச்சி காட்டும் கல்லூரிகளே முதன்மைத் தரம் பெறவேண்டும்.

சமச்சீர்மை என்பது எந்த வகையான கல்வியானலும், எந்த விதப் பாடத் திட்டமானாலும், எந்தவித மேலாண்மை ஆனாலும் அனைத்துச் சமூகப் பிரிவினரும், அனைத்து வகை மதிப்பெண் பிரிவினரும் (40% முதல் 100% வரை மதிப்பெண் பெறுபவர்கள்) சேரும் வகையில் கோட்பாடு கள் வகுக்கப்பட வேண்டும். தேர்ச்சி சதவீதம் முதல் 50% மதிப்பெண் பெறுவோர்க்கு இத்தனை சதவீதம் இடங்கள்,

50%, 70% பெறுவோர்க்கு, 70% - 80% பெறுவோர்க்கு, 80% -100% பெறுவோர்க்கு இத்தனை சதவீத இடங்கள் என்று சேர்க்கை விதிகள் மாற்றப்பட வேண்டும். அப்போதுதான் ஒப்புரவு (Equity), தரம் (Quality) என்றிரண்டுக்கும் காப்பு செய்யப்படும். அல்லாக்கால் தரம் (Quality) என்பது எப்போதும் ஒப்புரவுக்கு (Equity) எதிரிடையானதாகவே அமையும்.

சேர்க்கைத் தேர்வுகளை நாளைடயில் நடத்துவது நிறுத்தப்பட வேண்டும். ஒரே மொழியில், ஆங்கில மொழியில், ஒரே பாடத்திட்டத்தின் அடிப்படையில், ஒரே aptitude அடிப்படையில் தேர்வுகளை நடத்துவது பரவலாக் கலுக்குப் படுகுழி பறிக்கும். மைய அரசு நடத்தும் கல்வி நிறுவனங்கள் அனைத்து மாநிலங்களுக்கும் இடங்களைப் பகிர்வு செய்து வழங்கிவிட்டு, அந்தந்த மாநிலங்களே நுழைவுத் தேர்வுகளை அவரவர் வகுத்தபடி நடத்திக் கொள்ளலாம். எந்த மொழியையும் எந்தவொரு தேர்வு சூக்குமத்தையும் யார்மீதும் யாரும் சுமத்தவும் முடியாது. மாநிலங்களுக்கும் அவரவர் மனநிறைவுப்படி பங்கேற்பு கிடைக்கும். கூட்டாட்சித் தத்துவம் இதுதான்.

### தரமும் தனியர் தேர்வு முறையும்

தனியர்களின் திறமை அடிப்படையில் சோதனை நடத்தித் தனியார்க்கு மதிப்பீடு வழங்கும் முறை இருக்கும் வரை சமூக ஒன்றிணைப்பை மக்கள் மனத்தில் கல்வி வழியாக ஊட்டி வளர்க்கவே முடியாது. தன்னை இன்னொரு வருடன் ஒப்பிட்டு, மேல் கீழாகத் தன்னை பாவிக்கும் பாங்கே வளரும். மேலுக்குக் கூடுதல் மதிப்பீடு, கீழுக்குக் குறை மதிப்பிடு, இரண்டும் இணைந்து உலகியல் ஆற்ற முடியாது என்ற உணர்வுகளே கல்வி முறையில் முதல் வகுப்பிலிருந்து முனைவர் வரை ஊட்டப்படுகிறது. இந்தத் தனியர் மதிப்பெண்களை வைத்துத்தான் நிறுவனங்கள் மதிப்பீடு செய்யப்படுகின்றன.

மாந்தர்கள் ஒவ்வொருவரும் மற்ற உயிர்களோடு இணைந்து செயல்படுவதே வாழ்க்கை. இந்த வாழ்க்கைக்குச் சிறுவயது முதலே பிளளைகளைப் பழக்குவதற்கு தனியர் தரமதிப்பு துணைபுரியாது. மாறாகக் கூட்டுத் தேர்வு முறையை (Collective Examination) அறிமுகப்படுத்தலாம். ஒரு கேள்வித் தாளை ஒருவர் பதிலளிப்பதற்குப் பதிலாக ஒரு குழுவாக 5 அல்லது 6 மாணவர் எதிர்கொள்ளலாம். ஒரு வகுப்பிலுள்ள 30 மாணவரை 5 பேர் கொண்ட ஆறு குழுக்களாகப் பிரித்து 6 கேள்வித்தாட்களுக்கு ஆறு குழும விடைகளைப் பெற்று மதிப்பீடு செய்யலாம். அந்த மதிப்பெண் குழு உறுப்பின அனைவர்க்கும் ஒரே மாதிரியாக இருககும். குழுவில் ஆண், பெண், படிப்பில் வல்லவர், விளையாட்டில் வல்லவர், செல்வந்தர், ஏழை, பட்டியல் இனத்தவர் என்றவாறு கலந்து இருக்க வேண்டும். விளையாட்டில் ஒருவர் ஈட்டும் மதிப்பின் பலன் மற்றவராலும் பகிரப்படும்; எழுத்துத் தேர்வு மதிப்பெண்களும் அப்படியே. ஈட்டும் நன்மை துன்மைகளைக் கலகமின்றி குழு பகிர்ந்துகொள்வர். வாழ்க்கையின் ஒப்புரவே இதுதானே!

இந்த சமூகப் புரட்சியைக் கல்வியில் கொண்டுவரும் கோட்பாட்டைப் புதிய தேசிய கல்வி கொள்கையில் அறிமுகப்படுத்தலாம்..

**மாணவர் வளர்ச்சிக்கான நிதியம் உருவாக்கல்**

இத்தகைய நிதியை மைய அரசு நேரடியாகக் கையாளல் ஆகாது. நிதியை மைய அரசு வழங்கலாம். ஆனால் பயனாளிகளை மாநிலங்கள்தாம் தேர்வு செய்ய வேண்டும். மாநிலங்களுக்கு நிதியைப் பகிர்ந்து வழங்கல் மட்டும் மைய அரசு செய்யலாம். தற்போது நடத்தப்படும். National Talent Search போன்ற பயனளித் தேர்வுகளையும் இனி மாநிலங்களுக்கே விட்டுவிட வேண்டும்.

இனி பட்டியல் இனத்தவர்க்கென்ற தனித்த கோரிக்கைகள் பரிந்துரைக்கப்படுகின்றன..

*1. பள்ளி இறுதி வகுப்பை முடிக்கும் அனைத்துப் பட்டியல் மாணவரும் முறையான கல்லூரிப் பட்டம் படிக்க வகை செய்யப்படும்.*

*2. இளங்கலை முடிக்கும் அனைத்துப் பட்டியலின மாணவரும் முதுகலை பட்டம் தொடர வகை செய்யப்படும்.*

*3. முதுகலை முடிக்கும் பட்டியல் இன மாணவர்களில் 40% பேர் முனைவர் (Phd) பட்டம் பெற வகை செய்யப்படும்.*

*4. ஆண்டுக்கு 10000 பட்டியல் இன மாணவர்கள் வெளிநாட்டில் படிக்க நிதி உதவி நல்கப்படும் (முதுகலை, Phd, MS போன்றவை). இந்நிதியை 50:50 என்ற விகிதத்தில் மாநில அரசும் மத்திய அரசும் பகிர்ந்து கொள்ளலாம்.*

*5. போஸ்ட் மெடரிக் கல்வி உதவித் தொகையை மத்திய மாநில அரசுகள் 50:50 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்ள வேண்டும்.*

*பட்டியல் இனத்தவரைப் பொருத்த அளவில் உயர்வும், தாழ்வும் கலந்தே அவர்கள் வாழ்க்கை நிலை உள்ளது. எல்லோரும் தீண்டாமையில் தவிக்காமல் இருக் கிறார்கள் என்றும் கூற முடியாது; யாவரும் தீண்டாமையால் சுண்டிப் போயிருக்கிறார்கள் என்றும் கணிக்கக்கூடாது. நாட்டிலுள்ள பட்டியலின நிலையை இரு நிலவியலாகப் பிரித்து அறிய வேண்டும். ஒரு நிலப்பரப்பு என்பது பட்டியல் இன மக்கள் சதவீதம் தேசிய சதவீதமான 16%க்கு கூடியுள்ள மாநிலங்கள். அடுத்த நிலப்பரப்பு பிற மாநிலங்கள். நாட்டிலுள்ள மொத்த பட்டியலின மக்கள் சற்றொப்ப 75% பேர் முதலில் குறிப்பிட்ட நிலப்பரப்பில் (13 மாநிலங்கள்) வாழ்கின்றனர்.*

SELECT SOCIO-ECONOMIC INDICATORS FOR ALL STATES AND INDIA (Contd.)

| | States | Ratio of Urban Population (%) 2011 census | Scheduled Caste population as percentage of Total population 2011 | Scheduled Tribe population as percentage of Total population 2011 |
|---|---|---|---|---|
| | 1 | 10 | 11 | 12 |
| 1. | Andhra Pradesh | 33.36 | 16.4 | 7.0 |
| 2. | Arunachal Pradesh | 22.94 | - | 68.8 |
| 3. | Assam | 14.10 | 7.2 | 12.4 |
| 4. | Bihar | 11.29 | 15.9 | 1.3 |
| 5. | Chhattisgarh | 23.24 | 12.8 | 30.6 |
| 6. | Goa | 62.17 | 1.7 | 10.2 |
| 7. | Gujarat | 42.60 | 6.7 | 14.8 |
| 8. | Haryana | 34.88 | 20.2 | - |
| 9. | Himachal Pradesh | 10.03 | 25.2 | 5.7 |
| 10. | Jammu& Kashmir | 27.38 | 7.4 | 11.9 |
| 11. | Jharkhand | 24.05 | 12.1 | 26.2 |
| 12. | Karnataka | 38.67 | 17.1 | 7.0 |
| 13. | Kerala | 47.70 | 9.1 | 1.5 |
| 14. | Madhya Pradesh | 27.63 | 15.6 | 21.1 |
| 15. | Maharashtra | 45.22 | 11.8 | 9.4 |
| 16. | Manipur | 32.45 | 3.8 | 35.4 |
| 17. | Meghalaya | 20.07 | 0.6 | 86.1 |
| 18. | Mizoram | 52.11 | 0.1 | 94.4 |
| 19. | Nagaland | 28.86 | - | 86.5 |
| 20. | Odisha | 16.69 | 17.1 | 22.8 |
| 21. | Punjab | 37.48 | 31.9 | - |
| 22. | Rajasthan | 24.87 | 17.8 | 13.5 |
| 23. | Sikkim | 25.15 | 4.6 | 33.8 |
| 24. | Tamil Nadu | 48.40 | 20.0 | 1.1 |
| 25. | Tripura | 26.17 | 17.8 | 31.8 |
| 26. | Uttar Pradesh | 22.27 | 410.0 | 2.9 |
| 27. | Uttarakhand | 30.23 | 0.9 | 0.6 |
| 28. | West Bengal | 31.87 | 23.5 | 5.8 |
| | ALL INDIA | 31.15 | 16.6 | 8.6 |

ஆகவே இந்த *13* மாநிலங்களில் பட்டியல் இனத்தவர்க்கு என்ன செய்ய வேண்டும், பிற மாநிலங்களில் என்ன செய்ய வேண்டும் என்பதைத் தனித்தனியாக அறியும் ஆய்வு முதலில் மேற்கொள்ளப்பட வேண்டும். ஆய்வின்

அடிப்படையில் தேவைகள் வரிசைப்படுத்தப்பட்டு திட்டங்கள் புகுத்தப்படலாகும்.

தமிழ்நாடு போன்ற மாநிலங்களில் பள்ளிச் சேர்க்கை விகிதத்தில் பட்டியல் இனத்தவர் பிறர்க்கு இணையாகவோ அன்றிக் கூடுதலாகவோதான் இருக்கின்றனர். அதாவது, சமூகத்திலுள்ள அத்தனை நெளிவுசுளிவுகளையும் தாண்டி, மெலிவு நலிவுகளை நெஞ்சோடு தாங்கிப் பட்டியல் இனக் குடும்பங்கள் தமது பிள்ளைகளைக் கல்விப் படகேற்றி அறிவுக் கடல் தாண்டச் செய்கின்றனர் என்பது வெளிப்படுகிறது. எல்லா மாநிலங்களிலும் முதல் வகுப்பு முதல் 12ஆம் வகுப்புவரை சேர்க்கை விகிதம் (GER) பட்டியல் இனத்தவர்க்கு எப்படி இருக்கிறது என்பதைக் தொடர்ந்து கண்காணித்து என்ன நடவடிக்கை தேவை என்பதை அவ்வப்போது வகுத்துக் கொள்ளவேண்டும். GER குறைவு படாத தமிழ்நாடு போன்ற மாநிலங்களில் யாவர்க்கும் என்ன திட்டங்கள் வகுககப்படுகின்றனவே அவற்றை பட்டியல் இனத்தாரும் பற்றிக்கொள்வார்கள். அந்தளவிற்கு பட்டியல் இனத்தவர் சுய வளமும், சுய வலிவும், சுய உணர்வும், சுய ஊக்கமும் பெற்றிருக்கிறார்கள் என்ற செம்மாப்பில் பட்டியல் இனப் பள்ளி கல்வி அணுகப்பட வேண்டும்.

பட்டியல் இனத்தவர்க்கான தட்டுப்பாடு கல்லூரிக் கல்வியில்தான் தரப்படுகிறது. தேவையான இடங்கள் இருந்தும், தேவையான நிதிகள் இருந்தும், தேவையான பட்டியல் இனத்தவர் தகுதி படைத்து வந்தும் பள்ளி இறுதி முடிய GER இல் மற்றையவர்க்கு சளைக்காமல் இவர்கள் வந்தும் பட்டியல் இனம் கடந்த 180 ஆண்டு கால நவீன உயர்கல்வி திட்டத்தில் அரசுகளாலும், கல்லூரி நிர்வாகத் தாலும், பல்கலை நிர்வாகத்தாலும் புறக்கணிக்கப்பட்டுள் ளார்கள்/ புறந்தள்ளப்பட்டு வருகிறார்கள் என்பதைத் தவிர வேறு விளக்கம் கிடையாது. 12 வரை GER விகிதத்தில் அன்றுதொட்டு இன்றுவரை விதந்து இருக்கும் பட்டியல் இனத்தவர் உயர் கல்வியில் மட்டும் GER இல் எப்படி 50% மேல் பின்தங்க முடியும்? இந்திய அளவில் பட்டியல்

இனத்தவர் 6% பின்தங்கி இருப்பதாக வரைவு அறிக்கை தெரிவிக்கிறது.

ஆகவே, புதிய தேசியக் கல்விக் கொள்கையில் பட்டியல் இனத்தவர் உயர்கல்வியை நோக்கிய கோரிக்கைகளைத் தனித்துக் கேட்கிறோம். பள்ளி வரை பொதுக் கல்வியில் பொதுநடப்பாகப் பின்தங்காமல் பட்டியல் இனமே பங்கேற்கும் தெம்பைக் காட்டும். இருக்கும் நன்மைகள் மட்டும் இடையறாது காலச் சூழலுக்குத் தக்க விரிவாக்கம் செய்யப்பட்டு, கூடுதல் நிதி வழங்கப்படுவது மட்டும் தடையறாது தொடரவேண்டும்.

12 முடிக்கும் எல்லாப் பட்டியில் இனத்தவர்க்கும் கல்லூரிப் படிப்பு வழங்குவது சாத்தியமா என்ற கேள்வி எழும். தமிழ்நாட்டை எடுத்துக்காட்டாகக் கூற வேண்டுமெனில், +2இல் சற்றொப்ப 1.60 இலட்சம் பட்டியல் இன மாணவரும் 7 இலட்சம் மொத்த மாணவரும் தேறுகின்றனர். தமிழ்நாட்டில் மட்டும் சற்றொப்ப மூன்று லட்சம் BE இடங்களும், இன்றுமொரு நான்கு இலட்சம் கலை அறிவியல் இடங்களும், ஒரு இலட்சம் ஆசிரியர் பயிற்சி இடங்களும், பிற பிற பட்டப் படிப்புகளும் பாலிடெக்னிக்குமாக ஒரு லட்சம் இடங்களும் இருக்கின்றன. ஆயே தமிழ்நாட்டைப் பொருத்த அளவில் பட்டியல் இனம் மட்டுமல்ல, +2 முடித்த வேறு யார் ஒருவரும் படிப்பதற்கு இடமில்லை என்ற பஞ்சமே இல்லை. பட்டியல் இனத்தவர்க்கு மற்றவர் போலவே ஏதும் தகுதி உண்டு எனினும் மற்றையர்போல், சாலும் நிதி கிடையாது. இதை அரசுகள்தாம் ஈடுசெய்ய வேண்டும். OBC வருமான வரம்பிற்குக் கீழ்வரும் அனைத்துப் பட்டியல் இனத்தவர்க்கும் போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகையை விரிவுபடுத்த வேண்டும். மைய அரசு சற்றொப்ப ரூ. 20000 கோடிகளும், மாநிலங்கள் இன்னொரு ரூ. 20000 கோடிகளும் நிதி ஒதுக்கிடு செய்யலாகும். பட்டியல் இனத்தவர் உயர் கல்வியில் சேர்வதற்கு இவர்களுக்கு நிதித் தடையும் மற்றவர்க்கு மனத் தடையும் தவிர வேறு தடைகள் கிடையா. தமிழ்நாட்டில்

2012இல் இப்பணத்தடையும், மனத்தடையும் அகன்ற உடன் BE இல் பட்டியல் இனச் சேர்க்கை மும்மடங்காக (10000 இலிருந்து 34000 ஆக) உயர்ந்தது. பட்டியல் இன உயர்கல்வி வளர்ச்சிக்கு ஊட்டமாக இருப்பது நேரடி நிதி உதவி மட்டுமே.

முனைவர் பட்ட ஆய்வாளராக இருக்கும் பட்டியல் இனத்தவர்க்கென்ற தனியான நிதி உதவித் திட்டமே நாட்டில் நடைமுறைப்படுத்தப்படவில்லை. JRF, இராசீவ் உதவித் தொகை போன்ற பொதுத்திட்டத்தில் மட்டுமே சிறு பங்கு தரப்பட்டது. தமிழ்நாட்டில் பட்டியலின ஆய்வாளர் சங்கம் எடுத்த முயற்சியால் ஆண்டுக்கு ரூ.50000/- கடந்த மூன்று ஆண்டுகளாக வழங்கப்படுகிறது. எனினும் இன்னும் 1000 முனைவர்களுக்கு இவ்வுதவி கிட்டவில்லை. மொத்த முனைவர்களில் 40% பட்டியல் இனத்தவரை அல்லது முதுகலை முடிக்கும் பட்டியல் இனத்தவரில் 40% பேரை முனைவர் ஆய்வைத் தொடரத் திட்டம் வகுக்கப்பட வேண்டும். 180 ஆண்டுகளாக மறுக்கப்பட்ட இந்தக் கல்விப் பயனை ஈடுசெய்வதற்கு உயர் சதவிகித கவனிப்பு இன்று தேவை.

அயல்நாட்டுப் படிப்புக்கு செல்லும் ஒவ்வொருவர்க்கும் உயரிய பதவி வாய்ப்புகள் உறுதிப்படுகிறது. அம்பேத்கரின் மாண்புக்கும் புகழுக்கும் வித்திட்டது அவரது அயல்நாட்டு படிப்பு எனலாம். அவரது சமூகப் பார்வையை அகட்டிப் போட்டதும் இந்த அயல்நாட்டுக் கல்வியில் கிடைத்த உலகளாவிய பார்வைதான். 1950களிலிருந்து அயல்நாட்டுப் படிப்பிற்கு 35 உதவித் தொகைகளுக்கான திட்டம் நடைமுறையிலிருந்தும், இதைக்கூட முழுமையாக நிறைவேற்றாமல் எண்பதாண்டுகளில் ஓராயிரம் பட்டியல் இனத்தவரைக்கூட அயல்நாட்டுப் படிப்பிற்கு அனுப்பவில்லை. ஆனால், யாவருக்குமான வங்கிக் கல்விக் கடன் திட்டம் உருவாக்கப்பட்ட சில ஆண்டுகளிலேயே 10 இலட்சம் இனத்தவர் அல்லாதவர் அயல்நாட்டுப் படிப்புக்குச் சென்றுள்ளதாகப் புள்ளிகள் தெரிவிக்கின்றன. அவ்வளவு

நிதியும் பொதுநிறுவனங்களிடமிருந்துதான் சென்றள்ளது. இன்னும் பொருளுடையவர்க்கே செல்கிறது. கடன்தானே எனலாம்; பட்டியல் இனத்தவர்க்கென்று ஆற்ற வேண்டியதும் கடன்தானே? 10000 பட்டியல் இனத்தவரை இன்று அனுப்பும் திட்டமிட்டாலும் பத்து ஆண்டுகள் கழித்தும் வெளிநாட்டில் வசிக்கும் இந்தியரில் 5% பட்டியல் இனத்தவர்தான் தேறுவர்! ஆகவே மத்திய மாநில அரசுகள் இதற்கு தலையாய இடம் தருவதற்கான கோட்பாடுகளும் திட்டங்களும் குறைவற வகுக்கப்படலாகும். தெலுங்கானா மாநிலம் மட்டும் ஆண்டுக்கு 1000 பட்டியல் இனத்தவரை வெளிநாட்டுக்கு அனுப்பத் திட்டம் தீட்டியுள்ளது. 1997 லேயே தமிழ்நாட்டில் 100 பட்டியல் இனத்தவரை வெளிநாட்டுக்கு அனுப்ப ஆணை வெளியிடப்பட்டது. (நடைமுறைப் படுத்தப்படவில்லை என்பதுதான் சமூக/ஆட்சியாளரது அவலம்!)

போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை மைய அரசுத் திட்டம் எனச் சொல்லப்பட்டாலும் ஒவ்வொரு 5 ஆண்டு இறுதியிலும் மைய அரசு தனது நிதிப்பங்கை 0வாக குறைத்துக் கொள்கிறது. எடுத்துக்காட்டாக 2016 இல் தமிழ்நாடு மட்டும் தனது பட்ஜெட்டில் போஸ்ட்மெட்ரிக் கல்வி உதவித் தொகைக்கு ஒதுக்கிய தொகை ரூ.1400/-கோடி. ஒரு மாநிலத்திற்கே இவ்வளவு தொகை எனும்போது, நாடு முழுவதற்கும் மைய அரசு ஒதுக்கியது ரூ.1500/- கோடி மட்டுமே. ஆகவே, இத்திட்டத்தின் பகிர்மான விகிதத்தை 50:50 என்ற கணக்கில் மைய அரசும் மாநில அரசுகளும் ஏற்றுக் கொள்வது கூடுதல், நிதியைப் பட்டியல் இனத்தவருக்குக் கொண்டு வரும்.

உயர்கல்வி GER விகிதத்தில் பட்டியல் இனத்திற்கு உள்ள 6% இடைவெளியை நிரவுவதற்கு சற்றொப்ப 3 இலட்சம் பட்டியல் இன மாணவர்களைக் கூடுதலாகக் கல்லூரிகளுக்குக் கொண்டு வர வேண்டியுள்ளது. கூடுதலாகப் பத்து லட்சம் பொதுப் பிரிவினரின் உயர்கல்வியை ஆதரிப்பதற்காக நிதியத்தை உருவாக்க உள்ளதாக வரைவு அறிக்கை தெரிவிக்கிறது. இது பட்டியல் இனத்தவருக்கு உள்ள இடைவெளியை இன்னும் அகட்டிப் போடும்.

ஆகவே, முதலில் 3 இலட்சம் பட்டியல் இனத்தவரைக் கூடுதலாக கல்லூரகளில் சேர்ப்பதற்காக தனி நிதியம் உருவாக்கப்பட வேண்டும்.

தோழமையில்,


திரு. இரா. கிருத்துதாசு காந்தி IAS (ஓய்வு)
கூடுதல் தலைமைச் செயலர் - TN
நிறுவனர் - பாலம்
Mobile : +91 - 9444045215
Email : rcg1952@gmail.com

திரு.குமார்
இயக்குநர், சமூகக் கண்காணிப்பகம், தமிழ்நாடு
Mobile : +91 - 9444469685
Email : krisjkumar2000@gmail.com

திரு. பரதன்
மாநில அமைப்பாளர்
அம்பேத்கர் கல்வி நூற்றாண்டு இயக்கம்
Mobile : +91 - 9443117665
Mobile : hrbharathan@gmail.com


♦

## சமூகக் கண்காணிப்பகமும், பாலமும்
## தொகுத்த புத்தகங்கள் - ஜூன் 2023

1. Kaadar report

2. Undisclosed Facts of SC/ST - 2020

*3.* Landholding pattern of Malayali Scheduled Caste Tribals in Jawadhu hills and Prospects of horticulture of STs - 2021

4. Analysis of SCSP / TSP 2020-2021 in Tamilnadu 2021

5. A critical analysis of Government of India Schemes for Scheduled Caste DAPSC- 2021-2022

*6. அரசியல் கட்சிகளின் பார்வைக்குப் பட்டியல் இனத்தவரின் கோரிக்கைகள் - 2020 - 2021*

*7. புதிய ஆட்சி அமைக்கப்பட்ட பின் பட்டியல் இனத்தவர்க்காக தமிழ்நாடு அரசிடம் அளிக்கப்பட்ட கோரிக்கைகளின் தொகுப்பு - 25.06.2021*

*8. பள்ளர்/பட்டியல் இன அரசியல் 2021*

*9. தென் மாவட்ட சாதிக கலவரம் 2021*

*10.* Nov.2020 - Sep.2021 *(கடிதங்களின் தொகுப்பு)*-I *2021*

*11.*Sep 2021 - Nov 2022 *(கடிதங்களின் தொகுப்பு)*-II *2021*

*12.* Post Matric Scholarship - 2021

*13.* Nov 2021 - Apr - 2022 *(கடிதங்களின் தொகுப்பு)*-III *2022*

14. Civil Society Dialogue on evolving State Education Policy - Social Watch - PAALAM - AKAM & IDCR - 2022

15. Growth and decline of SC/ST's Admissions in BE- AKAM-01.06.2022

16. Development of Particularly Vulnerable Tribal Groups (PVTG) Scheme G.O's - Update Version-01.03.2023.

17. Tribal Affairs -Government of India. (References)-2022

18. Reservation in Promotion 2020-2021

19. 22,23 *ஆகஸ்ட் 2022 (திங்கள்- செவ்வாய்) சான்றோக்கு* (SC) *குடியமர்வு (ப.இ)* 2022.

20. *29,30 ஆகஸ்ட் 2022 (திங்கள்- செவ்வாய்) ஆன்றோக்கு* (ST) *குடியமர்வு (ப.கு)* - 2022

21. Guidelines for Transforming Higher Education Institutions into Multidisciplinary Institutions

22. April 2022 - August 2022 *(கடிதங்களின் தொகுப்பு) -* IV-2022

23. Growth and decline of SC/STs Admissions in BE-AKAM-25.09.2022

24. Ekalaivar Model Residential School (EMRS)

25. August 2022-December 2022 *(கடிதங்களின் தொகுப்பு)* V-2022

26. SC Start-Up Funding In India

27. University Grants Commission (Setting up and Operation of Campuses of Foreign Higher Educational Institutions in India) Regulations, 2023

28. *சான்றோருக்கானப் புதிய திட்டங்கள் ஜனவரி - 2023*

*29.* Micro-level Plan Meets - March 2023

*30. கற்பி : தமிழ்நாட்டிற்கான சமூக ஒப்புரவை வளர்க்கும் தனித்த கல்விக் கொள்கை - ஜூன் 2023*

♦



தமிழ்நாட்டிற்கான சமூக ஒப்புரவை வளர்க்கும் தனித்த கல்விக் கொள்கைகள் சமூக ஒப்புரவையும், சமூக வளர்ச்சியையும் எடுத்தோம்பும் வகையில் அத்தகைய சிந்தனை உள்ளவராலும், சமூகக் காவலர்களான சான்றோர்களாலும், (SC பட்டியல் இனத்தவர்) உருவாக்கப்பட்டவை.

1) ஆரியம், வேதம் சார்ந்த, மாந்தரைக் கூறு போடும் பார்வைகளுக்கு எதிரானது, அவற்றை ஏற்க மறுப்பது.

2) வடவர்களின் வடமொழி / இந்திமொழித் தாக்கங் களைக் கடந்து போவது.

3) யாவர்க்கும் கல்வி வாய்ப்பை உருவாக்கித் தரும் அதே வேளையில் சமூகத்தில் இன்னும் ஆளுமையையும், அதிகாரத்தையும் பெற வேண்டியவர்களாகச் சான்றோர்களையும், ( SC பட்டியல் இனத்தவர் ) ஆன்றோர்களையும் ( ST பழங்குடி ) குறிக்கொண்டு அவர்களுக்கான தனித்துவச் செயல் திட்டங்களை வகுக்கும்.

4) பார்ப்பனப் புனிதங்கள் என்று ஓதப்படுபவைகளை ஓரங்கட்டும்; என்றும் திராவிடக் கல்வி அவற்றை ஓராது (சட்டை செய்யாது).

போன்ற திராவிடம் தழுவிய முன்னெடுப்புகளால் திராவிடக் கல்விக் கோட்பாடுகளையும், நடைமுறைகளையும் உள்ளடக்கியதாக அமைந்துள்ளது..

வெளியீடு

இரா.கிருத்துதாசு காந்தி IAS (ஓய்வு)
முன்னாள் கூடுதல் தலைமைச் செயலாளர்
நிறுவனர் : பாலம், அகம், அம்பு , ரீடா
E mail : rcg1952@gmail.com
தொலைபேசி : 9444045215

அருட்பணி. ஜான்குமார்
இயக்குநர், சமூகக் கண்காணிப்பகம் - தமிழ்நாடு
E mail : krisjkumar2000@gmail.com
தொலைபேசி : 9444469685